திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

GAZETTEER UNIT
413/
17 JUN 1965
MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS-8

பஞ்சமுக விநாயகர்

மாலை 2] சார்வரி ஆடி ஆகஸ்டு 1960 [மணி 1

ரதி.

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு

திருத்தணி முருகன்

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 2] சார்வரி ஆடி - ஆகஸ்டு 1960 [மணி 11

... UNIT
413/...
... 1965
RECORD OFFICE BUILDINGS, MADRAS

அம்பிகைக்குரிய சிறப்புத் திருவிழாக்கள்

சுரும்புமுரல் கடிமலர்ப் பூங்குழல் போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத் தென்னை யெடுத்தாண்ட
அங்கயற்கண் ணெம்பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி யாரணநூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி.

கடவுளுக்கு ஒரு நாமம், ஒருருவம் ஒன்றுமில்லையாயினும் அவருடைய தத்துவங்களை விளக்கும் வகையில் பல்வேறு வடிவங்களில் வழிபடுவது மரபு. கடவுளின் அருளாகிய சத்தியையே தேவியென வைத்து வழிபடுகிறோம். பிரம்மா கலைமகளை நாவில் வைத்திருப்பதாகவும், மகாவிஷ்ணு திருமகளை இதயத்தில் வைத்திருப்பதாகவும், சிவபெருமான் உமாதேவியைத் தன் உடலின் இடப்பாகத்திலேயே வைத்து அர்த்தநாரீசுவர வடிவமாக இருப்பதாகவும், முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை வேல் என்ற இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி ஆகிய மூன்று சத்திகளுடன் இருப்பதாகவும் நம் முன்னோர்கள் இறைவனுடைய அருட்கோலங்களை அமைத்துள்ளனர். சூரியன் ஒளியினால் இருளை நீக்கி வெளிச்சத்தைக் கொடுப்பதுபோல் இறைவனும் உயிர்களின் மயக்கைத்தைச்சத்தியின் மூலம் நீக்கி உயிர்களுக்கு மெய்ஞ்ஞானமாகிய ஒளியைத் தருகின்றான். விளக்குச்சுடரில் தீயும் சூடும் சேர்ந்திருப்பதுபோல் இறைவனும் சத்தியும் சேர்ந்துள்ளனர். "அருளது சத்தியாகும் அரன்தனக்கு அருளையன்றித் தெருள் சிவமில்லை அந்தச் சிவமின்றிச் சத்தியில்லை" என்று சிவஞான சித்தியாரில் கூறப்பட்டுள்ளது.

திருக்கோயில்களில் அம்பிகைக்குத் தனிக் கோயில் அமைத்துத் திருவிழாக்கள் நடத்துவது இறைவனுடைய திருவருட்சத்திக்குச் செய்யும் வழிபாடும் திருவிழாக்களும் ஆகும். தேவிக்குத் தனியாக நடைபெறும் திருவிழாக்களுள் முக்கியமானவை:

1. நவராத்திரி
2. ஆடிப்பூர உற்சவம்
3. பிரம்மோற்சவங்களில் திருக்கல்யாணம்

அம்பிகைக்கு உகந்த நாள் வெள்ளிக்கிழமை; உகந்த நட்சத்திரம் உத்திரம். பெரும்பாலும் திருக்கல்யாணம் பங்குனி உத்திரத்தில் நடைபெறும்.

நவராத்திரி:—கடவுளைத் தாயாக இரவிலும் தந்தையாகப் பகலிலும் வழிபடுவது மரபு. நம் முன்னோர் இறைவனை அம்மையப்பராக, உமாமகேசுரராக, இலட்சுமிநாராயணனாக, இராதா கிருஷ்ணனாக வழிபட்டார்கள். வீரம் (தியாகம்), செல்வம், கல்வி என வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்களுக்கு அதிதேவதைகளாக மலைமகள், அலைமகள், கலைமகள் என உருவகித்து வழிபட்டார்கள். புரட்டாசி மாதம் வளர்பிறை பிரதமை முதல் மூன்று இரவுகள் உமாதேவியையும், அடுத்த மூன்று இரவுகள் இலட்சுமிதேவியையும், இறுதி மூன்று இரவுகள் சரசுவதிதேவியையும் வழிபட்டுத் திருவிழாக் கொண்டாடினார்கள். மகிஷாசுரனை சம்மாரஞ்செய்து தேவி 10-ஆம் நாளில் வெற்றித் திருவிழாக் கொண்டாடியதாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது. இத்துடன் சேர்த்து தசராத்திரிகள் அல்லது தசரா என்றும் இவ்விழாவுக்குப் பெயருண்டு.

சில கோயில்களில் மகிஷாசுரமர்த்தினியாகவும் இராஜராஜேசுவரியாகவும் மூன்றும்நாள் அம்பிகை முருகனுக்கு சத்திவேல் கொடுத்தருளும் காட்சியாகவும் அலங்காரம் செய்வார்கள். முருகன் அம்பிகையிடம் வேல்வாங்கி சூரசம்மாரம் செய்யும்

காட்சி சிக்கலில் மாத்திரம் இன்றும் நடைபெற்று வருகிறது. சிக்கலில் அம்பிகையின் திருப்பெயர் வேல்நெடுங்கண்ணியம்மை. ''சிக்கலில் வேல் வாங்கி செந்தூரில் சம்மாரம்'' என்று ஒரு பழமொழி யும் வழங்கி வருகிறது.

''குதிந்தனை யமரர்களை யிட்ட சூரன்
குடிபறியச் சத்தியிடங்குகன் வேல் கொண்டான்''
—க்ஷேத்திரமான்மியம்.

............நீல வண்ணத்
தன் மயமாஞ்சத்தியாய தாக்ஷியம்மை
தாக்கரத்திற் சிங்காரவேலைத்தாங்குமுன்னதமும்
—கந்தசஷ்டி மகோற்சவப்படலம்.

பம்பர மேபோல் ஆடிய
சங்கரி வேதாள நாயகி
பங்கய சீபாத நூபுரி கரசூலி
பங்கமி லாநீலி மோடிப
யங்கரி மாகாளி யோகினி
பண்டுக ரீபான சூரனொ டெதிர்போர்
டெம்புதல் வீர்வாழி வாழியெ [கண்
ணும்படி வீருன வேல்தர
என்றுமு ளானேம னோகர வயலூரா
—திருப்புகழ்.

15834

ஆடிப்பூர உற்சவம்: திருக்கோயில்களில் நித்திய நைமித்திக பூசைகளில் அறிந்தும், அறியா மலும் ஏற்படும் எல்லாவிதமான குறைகளின் நிவர்த் திக்காகவும் ஆண்டுதோறும் பவித்திரோற்சவம் என்ற திருவிழா நடைபெறுவது வழக்கம். இது ஆண் பெண் இருபாலார்க்கும் உரியது. பெண் களின் வழிபாடுகளில் ஏற்படும் குறைகளை நிவர்த் திக்க ஆடிப்பூர விழா அம்பிகைக்குத் தனியே கொண்டாடப்பெறுகிறது. பல கோயில்களில் இன் னும் இந்த விழாவின் முக்கியப் பகுதி அம்மனுக்கு வெள்ளைசாத்தி, பிரகாரப் பிரதட்சணம் செய்து பூரம்கழித்தல் என்னும் வைபவமாகும். சில கோயில் களில் ஆடிப்பூரத்தன்று தீர்த்தவாரியானபின் மறு நாள் அம்மன் தபசுக்காட்சியும், பின்னர் திருக் கல்யாணமும், ஊஞ்சல் உற்சவமும், கைலாசக் காட்சியும் நடைபெறுகிறதுண்டு. அம்மனுக்கு உகந்த வாகனங்கள் பெண்பூதம், சிம்மம், கிளி, கமலம், அன்னம், குதிரை, யானை, காமதேனு, இடபம், கைலாசவாகனம் முதலியனவும், கேடக மும் பல்லக்கும் ஆகும். தீர்த்தவாரிக்கு முன்னாள் இரதோற்சவம் நடைபெறுவதும் உண்டு. ஆடித் தபசுக்காட்சி தினத்தன்று அம்மை கதிர் குளித்தல் புஷ்பப்பல்லக்கில் வீதிவலம் வருதல் முதலிய நிகழ்ச்சிகளும் நடைபெறுவதுண்டு. இந்த திரு விழாவில் அம்பிகையை மகாலட்சுமியாகவும், வேணுகோபாலனாகவும், சரசுவதியாகவும், மகிஷா சுரசம்வர்த்தினியாகவும் அலங்காரம் செய்வதுண்டு. ஒவ்வொரு வாகனத்தின் ஐதிகமும் முன்னரே விளக்கப்பட்டிருக்கிறது.

சங்கரன் கோயில் என்ற சிவஸ்தலத்தில் சங்கரலிங்கத்துக்கும் கோமதியம்மைக்கும் நடுவே சங்கர நாராயணர் திருவுருவம் ஒரு தனிக்கோயி லில் அமைக்கப்பெற்றிருக்கிறது. ''மாலிடம் கொண்டான்'' என்று சிவபெருமானைத் திருமுறை களிலும், ''பிறைதங்கு சடையானை வலத்தே வைத்தான்'' என்று திவ்வியப்பிரபந்தத்திலும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவனைப் பாடி யுள்ள திருவுருவமே வலக்கையில் மழுவும், இடக் கையில் சங்கும், மற்றிருகைகள் அபயவரதக் கோலத்திலும் ''ஈரிருவம் ஓருருவம்'' என்ற தத்து வத்தை நன்கு விளக்குகிறது. ஆடிப்பூரத்தை யொட்டி நடைபெறும் தனிப்பெருவிழாவில் அம்பிகை தவமிருந்து சங்கர நாராயணக்காட்சியை உலகறியக் காணும் காட்சி பல்லாயிரக்கணக்கான மக்களால் சங்கரன்கோயில் உற்சவத்தில் கண்டு அனுபவிக்கப்படுகிறது. அன்றிரவு மறுபடியும் சங்கரலிங்கமாக உமாமகேசுவர வடிவத்தில் மீண் டும் காட்சியளிப்பது ''அரியலால் தேவியில்லை'' என்ற அப்பர் பெருமானின் தேவாரத்தின் உட் பொருளை நன்கு விளக்குகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயிலில் இந்த ஆடிப்பூர உற்சவமே பிரதான உற்சவமா கும். ஆடிப்பூரத்தன்று ஆண்டாளுக்குத் திருக் கல்யாணம் நடைபெறுகிறது.

திருக்கல்யாண உற்சவத்தைப்பற்றி முன் இதழ்களில் விளக்கப்பெற்றிருக்கிறது.

கீழ்க்காணும் ஊர்களில் மாரியம்மன், காளி யம்மன் கோயில்களில் சிறப்பாகத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன :—

சென்னைமாநகர்

வண்ணாரப்பேட்டை—திருவீதியம்மன், இராய புரம் நாகவல்லியம்மன், தங்கசாலை—தண்டுதுலுக் காணத்தம்மன், சௌகார்பேட்டை — ரேணுகா பரமேசுவரியம்மன், பெரியமெட்டு—எல்லையம்மன், கீழ்ப்பாக்கம் — செல்லியம்மன், மயிலை—முண்ட கண்ணியம்மன், சைதை-கடம்பாடியம்மன், சூளை-முத்துமாரியம்மன். முத்தியாலுபேட்டை - அங்கா ளம்மன், புரசை - ஆதிசோலையம்மன்.

செங்கற்பட்டுமாவட்டம்

காஞ்சி - காளியம்மன், உத்திரமேரூர் கங்கை யம்மன், கீழ்த்தண்டரை - எல்லியம்மன், பிடாரி யம்மன், திருவள்ளூர்-காளிகாம்பாள்.

வடஆற்காடு மாவட்டம்

திருவண்ணாமலை - கங்கையம்மன், வேலூர் காளியம்மன், வெட்டுவாணம் - எல்லையம்மன், படவேடு - ரேணுகாம்பாள், குடியாத்தம் - முத்தா லம்மன், வாலாஜா - கன்னிகா பரமேசுவரியம்மன்.

தென் ஆற்காடு மாவட்டம்

கடலூர் மண்டக்கரை – திரௌபதியம்மன், குறிஞ்சிப்பாடி - புத்துமாரியம்மன், கொடிக்கால் குப்பம் - கங்காபரமேசுவரி, நெல்லிக்குப்பம் – திரௌபதியம்மன், பண்ணுருட்டி - கன்னிகாபர மேசுவரி, வண்டிப்பாளையம் – ஊத்துக்காட்டு மாரியம்மன், சிதம்பரம்-தில்லையம்மன், மேல்மலையனூர்–அங்காளம்மன், திண்டிவனம் – கன்னிகாபரமேசுவரியம்மன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

திருச்சி – எல்லையம்மன், மண்ணச்சநல்லூர் - அங்காளம்மன், துறையூர் - மதுரை காளியம்மன், தொட்டியம் – முத்துகாளியம்மன், சமயபுரம் – மாரியம்மன், நார்த்தாமலை – மாரியம்மன், சோமரசம் பேட்டை - முத்துமாரியம்மன், லால்குடி-திரௌபதியம்மன்.

தஞ்சை மாவட்டம்

தஞ்சை – மாரியம்மன், ஒழுகமங்கலம் – மாரியம்மன், வீரசிங்கம்பேட்டை - மாரியம்மன், மகாதேவபட்டணம் – எல்லியம்மன், கும்பகோணம் திரௌபதியம்மன், சாக்கோட்டை – மாரியம்மன், தேப்பெருமாநல்லூர் சுந்தகரகாளியம்மன், வலங்கைமான்—மாரியம்மன், நாச்சியார் கோயில் ஆகாசமாரியம்மன்.

மதுரை மாவட்டம்

அகரம் – முத்தாலம்மன், திண்டுக்கல் – மாரியம்மன்–காளியம்மன், மேலக்கோட்டை-பத்ரகாளியம்மன், கொடைக்கானல், பழனி – மாரியம்மன், திருமங்கலம்-பத்ரகாளிமாரியம்மன், ஆண்டிப்பட்டி-மாரியம்மன், மதுரை - காளியம்மன், கோம்பை - அங்காளம்மன், வீரபாண்டி – கௌமாரியம்மன், மதுரை – செல்லத்தம்மன்.

இராமநாதபுரம் மாவட்டம்

இருக்கங்குடி-மாரியம்மன், ஏழாயிரம்பண்ணை–மாரியம்மன், சாத்தூர் - செங்குன்றபுரம் – இராஜபாளையம்-வற்றுயிருப்பு-சிவகாசிமாரியம்மன்; அருப்புக்கோட்டை, சிவகாசி-விருதுநகர்-தளவாய்புரம்-ஸ்ரீவில்லிபுத்தூர்-காளியம்மன்; காரைக்குடி–கொப்புடைய நாயகியம்மன், நாட்டரசன்கோட்டை - கண்ணுடையநாயகி, வேட்டுடை - காளியம்மன்.

திருநெல்வேலி மாவட்டம்

வீரவநல்லூர், கடம்பூர், இராயகிரி, தூத்துக்குடி - மாரியம்மன்; முக்கூடல், வாகைக்குளம், அம்மன்புரம் – காளியம்மன்.

கோவைமாவட்டம்

கோவை - கோணியம்மன், ஈரோடு-சிக்கரசன் பாளையம், ஊஞ்சளூர்-மாரியம்மன்; பேரூர், மஞ்சக் கோலநல்லி-பாரியூர்-காளியம்மன்.

சேலம் மாவட்டம்

சேலம்-குகை - சேர்வராயன்மலை – சேந்தமங்கலம்-மாரியம்மன்; வீரபாண்டி, மேச்சேரி, உஞ்சனை–காளியம்மன்.

செய்திகள்

திருப்புகலூர் ; அக்கினீசுவரசுவாமி தேவஸ்தான கிராமங்களாகிய இராம நந்தீசுவரத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஸ்ரீஐயனர் கோயிலுக்கும், புளியங்குடி கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஸ்ரீவிநாயகர் ஆலயத்திற்கும் 1—7—60 வெள்ளிக்கிழமை அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அவ்விழாவில் சென்னை அறநிலையத்துறை அமைச்சர் திரு. கனம் எம். பக்தவத்சலம் அவர்களும், அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ். அவர்களும், தஞ்சை அறநிலையத்துறை துணைஆணையர் திரு. கே. சோமசுந்தர தேசிகர், எம். ஏ., அவர்களும் கலந்துகொண்டார்கள்.

◆ ◆ ◆ ◆

திருப்புகலூர் : அக்கினீசுவரசுவாமி கோயிலில் சிவாகம சித்தாந்தப் பயிற்சி விழாவை 1—7—60-ல் அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் தலைமையில், அறநிலையத்துறை அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் துவக்கிவைத்தார்கள்.

◆ ◆ ◆ ◆

திருக்கண்ணமங்கை . ஸ்ரீபக்தவத்சலப்பெருமாள் தேவஸ்தானத்திய சாகுபடியாளர் கூட்டுறவுச் சங்கத்தொடக்கவிழாவை 1-7-60ல் அறநிலையத்துறை அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் ஆரம்பித்துவைத்தார்கள்.

வேறு அவதாரங்களில் விசுவரூபம்

[பி. ஸ்ரீ.]

உலகமனைத்தும் சேர்ந்தது ஓர் உடம்பு என்று வைத்துக்கொண்டால், இந்த உடம்புக்குள்ளே நின்று இதனை ஆண்டுகொண்டிருப்பது பரமாத்மாவாகிய கடவுள். இக்கடவுள் அண்டங்களை ஆண்டு வருவதுடன் எல்லாவற்றையும் கடந்து நிற்பதாகவும் கூறுகிறார்கள். கடவுளின் சரீரத்திலே ஒவ்வொரு ஜீவனும் ஓர் உயிருள்ள அவயவம். எல்லாம் ஈசுவர சக்தி என்ற மகாசக்தியால் ஓர் ஒழுங்கிற்கு உட்பட்டிருக்கின்றன. விஞ்ஞான தத்துவ முறையில் விசுவரூபத்தின் பொருள் இது என்று சுட்டிக்காட்டலாம். உலகம் முழுவதும் ஓர் அமைப்பு என்ற விஞ்ஞான தத்துவ உண்மையை உணர்ந்துகொள்வதற்கும் விசுவரூபம் பற்றிய இதிகாச புராணக் கருத்துக்கள் பயன்படும். ஒழுங்கு என்ற தருமவிதியை மீறிப் பிறரை ஹிம்சிக்கும் அசுரசக்தி விசுவரூபத்தின் நோயுற்ற பகுதி. இதைத் திருத்துவது மறக்கருணை என்பது மெய்ஞ்ஞானம்.

கிருஷ்ணாவதாரத்திலே பகவானுடைய விசுவரூபம் குறித்த கதைகள் காணப்படுகின்றன என்பதை நாம் ஏற்கெனவே தெரிந்துகொண்டிருக்கிறோம். பகவத்கீதையில் அர்ச்சுனன் கண்ட விசுவரூபம், அவனுடைய ஐயங்களைப்போக்கி, உலகத்தில் அவன் ஒரு பகுதி என்பதையும், தன் கடமைகளை இறைவன் கைக்கருவியாக செய்து தீர்க்க வேண்டும் என்பதையும் அவனுக்கு நன்கு உணர்த்தியது. இனி, நாம் விசுவரூபம் குறித்த வேறு சில செய்திகளையும் தெரிந்து கொள்ள முயல்வோம்.

வாமனன் கொண்ட பேருருவம்

தசாவதாரங்களில் முதல் அவதாரமாகிய மீனும் மேலும் மேலும் வளர்ந்து ஒரு வகைப் பேருருவம் கொண்டதாக அந்த அவதாரக் கதை தெரிவிக்கிறது. அடுத்த அவதாரத்தில் வரும் ஆமை உருவமும் ஒருவகைப் பேருருவம்தான்; அந்த ஆமை மந்தரமலையைத் தாங்கியதாகவும், பூமியையே தாங்கியதாகக்கூடச் சொல்லுகிறார்கள் அல்லவா? வராக அவதாரமும் ஒருவகைப் பேருருவம் கொண்ட வராகமூர்த்தியின் செயலைக் குறிப்பதுதான். எனினும் அடுத்தபடியாக நிகழும் நரசிங்க அவதாரத்திலும் வாமனாவதாரத்திலும் பேருருவச் செய்திகளைச் சிறப்பாகக் காண்கிறோம். முதல் முதலாக அவதாரக் கதையின் பொருத்தமான பகுதியைச் சுருக்கமாக இங்கே பார்க்கலாம்.

இராமாயணத்தில் சித்தாஸ்ரம வரலாறு கூறும்போது விசுவாமித்திரன் வாமனன் கதையை இராமனுக்குச் சொல்லுகிறான். இக்கதை பாலகாண்டத்தில் வேள்விப்படலத்தில் வருகிறது.

சித்தாஸ்ரமத்திலே திருமால் தவஞ்செய்தானும். எல்லாரும் திருமாலைக் குறித்துத் தவஞ்செய்து பேறு பெறுவதாகப் புராண கதைகள் தெரிவிக்கின்றன. விசுவாமித்திரனே சித்தாஸ்ரமத்திலே,

> எங்கள் நான்மறைக்கும், தேவர்
> அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச்
> செங்கண்மால் இருந்து மேல்நாள்
> செய்தவம் செய்தது அன்றே

என்று கூறுகிறான்.

யாரே 'அவன் செய் மாயப் பெரும் பிணக்கு ஒருங்கு தேர்வார்' என்றும் விசுவாமித்திரன் சொல்லுகிறான். 'அமலமூர்த்தி கருதியது அறிதல் தேற்றும் (தெளிகிறோம் இல்லை) என்று மறுபடியும் சொல்லுகிறான். திருமால் பெருந்தவம் செய்ததாகவும் உறுதி கூறுகிறான் முனிவன்.

திருமால் தவஞ் செய்தது தவம் செய்யும் நிலைமை இன்னது என்பதை உலகத்திற்குத் தெரிவிக்கத்தான் என்று கூறுவோர் உண்டு. எனினும் இங்கே இத்தவத்தின் உட்பொருள் தனக்குச் சரீரமாக உள்ள சராசரங்களில் எல்லாம் அசுர இருளைப்போக்கித் தன்னுடைய தெய்வ ஒளியை நிரப்புவதற்காக இப் பெருமான் விசுவரூபம் கொள்வதற்காகத்தன்னைத் தயாரித்துக்கொள்வதுதான் என்று கருதுவதும் பொருந்துவதே.

திருமால் சித்தாஸ்ரமத்தில் தவம்புரிந்த வண்ணம் வசித்துக்கொண்டிருக்கும்போது தான் மாவலி என்ற அசுர சக்கரவர்த்தி மகா பலத்தால் வானத்தையும் வையகத்தையும் அபகரித்துக்கொண்டு தன் அபார அசுர சக்தியை எங்கும் பரப்பிவந்தான். இவனுடைய பலத்தை வராகமூர்த்தியின் திறமைக்கே ஒப்பிடுகிறான் கம்பன். ஆனால் வராகமூர்த்தியின் சக்தி தெய்வசக்தி; மாவலியின் சக்தியோ அசுரசக்தி. இந்த அசுர சக்தியை ஒடுக்கி எங்கும் பரப்புவதற்குப் பேருருவம் கொள்ள வேண்டும், அதற்காக வாமனாவதாரம் செய்ய வேண்டும் என்ற தீர்மானம் சித்தாஸ்ரமத்திலே திருமாலின் தவவாழ்க்கைக்கு இடையே பிறந்ததுதான்.

மாவலி என்ற மகாபலி தன் அசுர சக்தியைக்கொண்டு வேள்வியையோ தவத்தையோ அழிக்க முற்படவில்லை. தான் அபகரித்த பொருளைக்கொண்டு தானே ஒரு பெரு வேள்வி செய்தான். திருமாலின் ஆராதன ரூபமாகிய ஒரு வேள்வியாகவே அதைச் செய்தான். அந்தணர்களுக்கெல்லாம் வாரி வழங்கினான். எனினும் உலகம் எல்லாம் இறைவனுக்கே உரியது என்ற கொள்கையை மறுத்து மண்ணையும் விண்ணையும் அபகரித்துக்கொண்டு அந்தப் பொருளாலேயே தான தருமங்களைச் செய்ததால், தேவசத்துருவாக இவனைத் தேவர்கள் கருதுவாராயினர்.

சித்தாஸ்ரமத்திற்கு வந்து தேவர்கள் மாயனை வணங்கி 'தீயவன் வெந்தொழில் தீர்த்தருளுவாய்' என்று பிரார்த்தித்துக் கொண்டார்கள். திருமாலும் அது செய்ய விரும்பினான். ஆனால் அதை எப்படிச் செய்வது? மகாபலியின் அசுரசக்தியும் புகழும் வியாபித்திருக்கும் மண்ணிலும் விண்ணிலும் தன் பேருருவத்தை வியாபிக்கச் செய்வதுதான் ஒரே வழி என்பது திருமாலின் தீர்மானம்.

உடனே பேர் உருவம் கொண்டு திடீரென்று இறைவன் மாவலியிடம் சென்றுவிடவில்லை. வேள்வி முடியு முன்னமேயே மாவலியின் செருக்கையும் அடக்கிவிடவேண்டும் என்று தீர்மானித்த பின்பும் ஆத்திரப்படாமல் திருமால் தன் மேன்மையை மாயா சக்தியால் மறைத்துக்கொண்டு போகிறான். திரிவிக்கிரம அவதாரம் என்ற அந்த உலகளந்தான் உருவத்தை வாமனாவதாரத்திற்குள் மறைத்துக்கொண்டே போகிறான்.

வாமனன் என்றால் குள்ளன். சித்திரக் குள்ளன். ஏன்! ஒரு விசித்திரக்குள்ளன். இந்தக் குள்ளவடிவில் உலகத்தையே அளக்கப்போகிறவனின் பேருருவம் அடங்கிக் கிடக்கிறது—ஆலம் விதையில் ஆலமரமே அடங்கிக்கிடப்பதுபோல!

நீல நிறத்து
நெடுந்தகை வந்(து)ஓர்
ஆல்அமர் வித்தின்
அருங்குறள் ஆனான்

என்பது கம்பனின் அதிசயக் கவிதை.

சித்தாஸ்ரமத்திலேதான் காசியப மாமுனிவனும் தன் மனைவியாகிய அதிதி தேவியோடு திருமாலைக் குறித்து ஒரு விரதம் நடத்தியிருந்தான். எனவே அந்தத் தம்பதிக்கு வாமனன் புதல்வனாகத் தோன்றினான். வாமனத் திருஉருவத்தையும் அந்த விசித்திரக் குள்ள வடிவம் மாவலியின் வேள்விச் சாலையை நோக்கிச் செல்வதையும்,

அற்புதன் அற்புதரே
அறியும் தன்
சிற்பதம் ஒப்பதோர்
மெய்க்கொடு சென்றான்

என்று கம்பன் அற்புதமாக வருணிக்கிறான்.

பகவானுடைய ஞானசொரூபம் எவ்வளவு நுட்பமானதோ அவ்வளவு நுட்பமாகப் பேருருவம் இந்தச் சிறிய திரு உருவில் பிரகாசித்ததாம். இந்த அற்புதத்தை அற்புத ஞானம்தான் அறியவல்லது, அற்புத ஞானிகளே அறிவார்கள் என்கிறான் கம்பன். இக் கவிஞனுடைய வாக்கிலே ஓசை நயத்திலே குள்ளன் நடைபோடுவதையே ரசிகர்கள் காண்பார்கள்.

மாவலி எதிர்கொண்டு வந்தான்; முகமன் கூறினான். வாமனனும் மாவலியைப்

புகழ்ந்தான்; 'மூவடி மண் போதும்' என்று தான் வேண்டிக்கொண்டான். "தந்தேன்" என்ருன், மாவலி. "தடுத்தேன்" என்ருன் சுக்கிரன். ஆனல் இந்தத் தடையைமாவலியும் இலட்சியம் செய்யவில்லை. வாமனனும் இலட்சியம் செய்யவில்லை. மூவடி மண் தாரை வார்த்துக்கொடுக்கப்பட்டது.

தானம் கிடைத்ததும் வாமனன் திருவிக்கிரமன் ஆகிவிடுகிருன். இந்தப் பேருருவத்தைக் கம்பன் வருணிக்கிருன்.

நின்றதாள் மண்ணெலாம்
நிரப்பி, அப்புறம்
சென்று பாவிற்றிலே,
சிறிது பார்எனு;
ஒன்ற வானகம்எலாம்
ஒடுக்கி உம்பரை
வென்றதாள் மீண்டது
வெளி பெருமையே!

ஆகாயத்தில் ஓங்கி வளர்ந்தான் வாமனன் என்று சொல்லிவிட்டு, நிலத்தில் ஊன்றிய ஒரு திருவடியே மண்ணுலகமெல்லாம் நிரம்பும்படி வளர்ந்து விடுகிறது என்கிருன் கவிஞன். 'பூமி சிறியது' என்ற காரணத்தால்தான் அப்பால் பரவவில்லையாம். வானகம் முழுவதையும் ஒரு சேர ஒடுக்கி அளந்து பார்த்ததாம் மற்ருெரு திருவடி. அது மேலே செல்ல வேறு இடம் பெற முடியாததால் மீண்டதாம். இரண்டு அடிகளும் இப்படி மேலுலகத்தையும் கீழ் உலகத்தையும் உள் அடக்கி அளந்து விட்டதால் மூன்ருவது அடியை வைப்பதற்கு இடமில்லையாம். அந்த அடியை மாவலியின் தலைமேல் வைத்தான் திருமால் என்பது கதை.

உலகமளந்த இந்தக் கதையை ஆழ்வார்கள் பாடியிருக்கிருர்கள்.

மூவுலகும் ஈரடியால்
முறைநிரம்பா வகைமுடியத்
தாவிய சேவடி

என்று இந்தப் பேருருவ வரலாற்றைச் சிலப்பதிகாரமும் தெரிவிக்கிறது. மாவலி இப்பேருருவில் நோயுற்ற பகுதியாக இருந்து திருந்தினன் என்பது குறிப்பு.

நரசிங்கமும் பேருருவமும்

இனி, நரசிம்மாவதாரத்தில் பேருருவம் பற்றிய செய்தியைப் பார்க்கலாம். இந்த அவதாரக் கதையைக் கம்பன் விபீஷணன் இராவணனுக்குக் கூறி எச்சரிக்கை செய்ததாகக் கம்பன் கூறியுள்ளான். இது யுத்த காண்டத்தில் இரணியன் வதைப்படலம் என்ற மூன்ருவது படலமாக அமைந்திருக்கிறது. இரணியனும் தன் அசுரசக்தியாலும் புகழாலும் உலகமெங்கும் வியாபகமாகி விட்டான். இவன் மாவலியைப்போல் வேள்வி செய்தவன் இல்லை; வேள்வி முதலியவற்றை அழிப்பதிலே கண்ணும் கருத்துமாயிருந்தான். அந்த தேவசத்துரு திருமாலின் பக்தனுக இருந்தான் என்ருல் இந்த தேவசத்துரு திருமாலின் பரமசத்துருவாகவும் இருந்தான்.

இருவர் சேர்த்ததும் பொய்த்திரு,—அபகரித்த பொருள். இந்தப் பொய்த்திருவை இரணியன் மாவலியைப்போல் நல்வழிப் படுத்தவும் இல்லை. போக வாழ்க்கையிலும் அதிகார ஆடம்பர வாழ்க்கையிலும் தபோதனத்தை உள்ளிட்ட எல்லாப் பொருள்களையும் வாரிச் செலவிட்டான். இரணியன் ஆட்சியில் அசுர இருள் சந்திரமண்டலத்திலும் படர்ந்து, சூரிய மண்டலத்தையும் பற்றிப் பிடித்து, பிரமலோகத்தையும் எட்டிப் பிடித்துவிட்டது.

'தேவரும் அவன் தாள் அலால் அர்ச்சனை செய்யார்' என்பது கவிஞன் வாக்கு. இரணிய சரித்திரத்தையே குருகுலக் கல்விச் சாலையில் பிரமதேவன் முதலானவர்களும் கற்கத்தொடங்கிவிட்டார்களாம். இத்தகைய பராக்கிரமசாலி வரபலமும் பெற்றுச் சாகாமலே இருந்துவிடலாம் என்று நம்பினன்.

ஆவி தீர்கிலன், ஆற்றலும்
தீர்கிலன் அனையான்

என்பது கவிஞன் வாக்கு.

மாவலி என்ற அசுரசக்தியை அடக்கிய கடவுள் என்ற மகாசக்தி இரணியன் என்ற அசுரசக்தியை எப்படி அடக்கியது என்பது தான் பிரகலாத சரித்திரமாக விளைந்து பக்தர்களுக்கெல்லாம் அமுதமாய் இருக்கிறது. காந்தியடிகளும் பிரகலாதனை முதலாவது சத்தியாக்கிரகி என்று கொண்டாடினர் என்பது பிரசித்தமான செய்தி.

சிறுவனை பிரகலாதன் தந்தையான இரணியச் சக்ரவர்த்தியின் கொடிய ஆதிக்கத்தை எதிர்த்து இறைவன் திருப்பெய

ரையே ஓதுகிறுன். இரணியனுக்கும் அந்தத் திருப்பெயரின் மகிமையை எடுத்துரைக்கிறுன். இரணியன் சீறி மகனைக் கொடுமையாகப் பல தண்டனைகளுக்கு உட்படுத்திக் கொன்ருெழிக்கப் பார்க்கிறுன். கடைசியாக 'உன் ஹரி எங்கே?' என்று கேட்டுவிட்டு, 'எங்கும் உள்ள ஹரியை இந்தத் தூணிலே காட்டு பார்க்கலாம்' என்று தூணைக் கையினுல் ஓங்கி அறைகிறுன். அப்போது தோன்றுகிறது நரசிங்கம்.

நரசிங்கம் தூணிலிருந்து வெளிப்பட்டு விசுவரூபம் கொள்வதைக் கம்பன் ஏழு கவிகளில் வருணித்திருக்கிறுன். முதலாவது கவி:

பிளந்தது தூணும்; அங்கே
　பிறந்தது சீயம்; பின்னை
வளர்ந்தது திசைகள் எட்டும்;
　பகிரண்டம் முதல மற்றும்
அளந்ததுஅப் புறத்துச் செய்கை
　யார் அறிந்(து) அறைய கிற்பார்?
கிளர்ந்தது ககன முட்டை
　கிழிந்தது கீழும் மேலும்!

நரசிங்கமூர்த்தி வெளித் தோன்றிய உடனே எட்டுத் திக்குகளையும் அளாவி வளர்ந்தது; வேறு இந்த அண்டத்துக்கு வெளியிலுள்ள வேறு அண்டம் முதலியவற்றையும் அளந்ததாம். இப்படி வருணித்த பின், அந்த வளர்ச்சியால் அண்டகடாகம் கீறிக்கிழிந்தது என்கிறுன் கவிஞன்.

இந்த மூர்த்தியின் கைகள் இத்தனை என்று கணக்கிடவல்ல கணக்கு நிபுணர் எவரும் இல்லை என்கிறுன் கவிஞன். இரணியனுடைய அசுரசேனையில் உள்ள ஒவ்வொருவரையும் அள்ளிக்கொள்ள கைகள் தோன்றியவண்ணமாய் இருந்தனவாம். ஒவ்வொரு அசுரனுக்கும் எதிரே ஒவ்வொரு சிங்க முகமும் இரண்டு கைகளும் தோற்றமளித்தனவாம்.

ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் தோன்றின என்றும் கவிஞன் கூறுகிறுன். உக்கிர நரசிங்கமானதால் ருத்திர மூர்த்தி போல் முகம் தோறும் மூன்று கண்களுடன் காட்சியளித்ததாம் நரசிங்கம். இந்த நரசிங்கத்தின் மூச்சுக்காற்று யுகாந்த காலத்துப் பெருங்காற்றையும் அடக்கிவிடும் என்பது கவிஞன் வருணனை.

இந்த நரசிங்க விசுவரூபம் அசுரர் அல்லாதவர்களையெல்லாம் தன் வயிற்றிடத்திலே வைத்துத் தாய்போலப் பாதுகாத்தது என்றும், அசுரர்களையெல்லாம் அழித்துவிட்டது என்றும் கம்பன் எட்டுப் பாடல்களில் தெரிவிக்கிறுன். நரசிங்கமூர்த்தியின் சிஷ்டபரிபாலனத்தை ஒரு பாட்டில் சொல்லிவிட்டு இந்தச் சிங்கப்பிரானின் துஷ்டநிக்கிரகத்தை ஏழு கவிகளில் விவரிக்கிறுன். ஹிம்சிக்கிறவன் ஹிம்சிக்கப்படுவான் என்ற சூட்சும இயற்கை விதிக்கு இணங்க அசுரர்கள் அழிக்கப்படுகிறுர்கள்.

இரணியனும் வதஞ் செய்யப்படுகிறுன் இந்தவதத்தை ஏழு கவிகளில் கம்பன் வருணிக்கிறுன். 'வையிர மார்பு தீயெழப் பிளந்து நீக்கித் தேவர் தம் இடுக்கண் தீர்த்தான்' என்று இந்த வதம் முற்றுப்பெறுகின்றது.

நோக்கினுர் நோக்கி னுர்முன்
　நோக்குறு முகமும் கையும்
ஆக்கையும் தாழும் ஆகி
　எங்கணும் தானே அகி

என்று இந்த நரசிங்க விசுவரூபம் இரணிய வதத்திற்குப் பின் வருணிக்கப்படுகிறது.

இந்த நரசிங்க விசுவரூபத்தைக் கண்ணனின் விசுவரூப வருணனையிலும் பெருந்தேவனுர் ஞாபகப்படுத்துகிறுர். விசுவரூபம் செய்த இந்த வாசுதேவன் யார் என்ருல்,

முரண்இயல் பெருவலி
　இரணியன் தனது
கேள்கிளர் ஆகம்
　கிழியக்
கூருகிர் வாய்ந்த
　கொடுந்தொழி லோனே!

என்று நரசிங்க விசுவரூபத்தை நினைவூட்டுவது கூர்ந்து நோக்கத்தக்கது.

* * *

நரசிங்கம் என்ற மானுட மடங்கல் தமிழகத்திலே பிரசித்தமானது என்பது நமது இலக்கண நூலாரும் சில இடங்களில் உவமையாக எடுத்து ஆண்டிருப்பதால் ஊகிக்கப்படும்.

மானக்கஞ்சாற நாயனர்

மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாறன்
............அடியார்க்கு மடியேன்

—சுந்தரர்.

கலச முலைக்கன்னி காதற்
புதல்வி கமழ்குழலை
நலசெய் தவத்தவன் பஞ்ச
வடிக்கிவை நல்கெனலும்
அலசு மெனக்கரு தாதவள்
கூந்த லரிந்தளித்தான்
மலைசெய் மதிற்கஞ்சை மானக்கஞ்
சாற னெனும்வள்ளலே

—நம்பியாண்டார்நம்பி.

நீர்வளம் நிலவளம் நிறைந்தது கஞ்சாறூர் என்னும்பதி. வயல்களும் வாவிகளும் சூழ்ந்த அவ்வூரில் மாடமாளிகைகள் விளங்கின. திருவிழாக்களின் முழக்கங்கள் எழுந்தன. பழங்குடி வேளாண் மக்கள் வதிந்தனர். வேளாளர் குலமுதல்வராய் அரசர் சேனபதிக் குடிவிளங்க மானக்கஞ்சாறனர் தோன்றினர். சிவனடியார்கள் விரும்பிக் கேட்குமுன் குறிப்பறிந்து கொடுக்கும் பெருந்திருவுடையார். அவர்க்குச் சிலகாலம் பிள்ளைப்பேறில்லாதிருந்து பின்னர் ஒருபெண் மகவைப் பெற்றெடுத்தார். அம்மகளும் வளர்ந்து மணப்பருவம் அடைந்தது. ஏயர்கோன் கலிக்காமருக்கு அப்பெண்ணைப் பெரியோர் மகட் பேசினர். மானக்கஞ்சாறனர் மனமகிழ்ந்து அதற்கிசைந்தார். மங்கல நாளையும் மதிநூல் வல்லோர் குறித்தனர். மானக்கஞ்சாறர் மனையிலும் ஊரிலும் மண அணிகள் செய்யப்பெற்றன. ஏயர்கோனுரான மணமகனும் தமது சுற்றம்சூழ கஞ்சாறூர் வந்தணைவராயினர்.

உலகம் உய்யும் பொருட்டு சிவபெருமான் ஒரு மாவிரதமுனிவராய் மானக்கஞ்சாறரின் மனைக்கு வந்தார். வந்த முனிவரை வரவேற்று "தங்கள் வருகையால் யான்உய்ந்தேன்" என்றுகூறி அடிபணிந்தார் தொண்டனர். முனிவர், "இங்கு மங்கலம் நடப்பதென்ன?" என்று கேட்க, மானக்கஞ்சாறர், "என் அருமை மகளின் திருமணம் நிகழ இருக்கின்றது" என்று பதில் சொன்னர். "மங்கலம் உண்டாகுக" என்று வாழ்த்தினர் மாவிரதியார். அவ்வளவில் மானக்கஞ்சாறனர் உள்சென்று மணக்கோலம் பூண்டிருந்த மகளாரை அழைத்துவந்து முனிவர் திருவடியைப் பணியச் செய்தனர். அப்பெண்ணின் மேகத்தை நிகர்த்த கூந்தலைக்கண்ட மாவிரத முனிவர் "இவளது கூந்தல் நமக்குப் பஞ்சவடிக்கு ஆகும்" என்று மொழிந்தார். அது கேட்ட தொண்டர் "அடிகளார் இதனைப் பொருட்படுத்திக் கேட்கும் பேறுபெற்றேன்" என்று எண்ணி, உடனே உடைவாளை உருவி மகளின்கூந்தலை அடியில் அரிந்து மாவிரதியர் முன் நீட்டினர். மாயவேடத்தில் நின்ற பெருமான் அதை வாங்குவார்போல் நின்று மறைந்து, வானவெளியில் உமாதேவியுடன் இடபவாகனத்தில் எழுந்தருளி, "அன்பனே! உனக்கு நம்மிடையுள்ள அன்பை உலகத்திற்கு அறிவிப்பதற்காகவே இவ்வாறு செய்தோம்" என்று திருவாய் மலர்ந்தார். மானக்கஞ்சாறநாயனர் எப்போதும் இறைவனை வணங்கும் பேற்றை நேரேபெற்றூர். சிவபெருமானும் யாவரும் துதிக்க மறைந்தருளினர்.

இப்பால் மணமகனகிய கலிக்காமரும் மணமனை புகுந்தார். அங்கு நிகழ்ந்த அரிய அற்புதத்தைக் கேட்டு மகிழ்ந்தார். இறைவனைக் காணும்பேறு தமக்குக் கிடைக்கவில்லையென மனந்தளர்ந்தார். மணமகளார் கூந்தலை முன்போல மீளப்பெற்றூர். திருமணம் சிறப்பாக நடந்தது. ஏயர்கோன் கலிக்காமரும் மனைவியுடனும் சுற்றத்தாருடனும் தன் ஊர் போய்ச்சேர்ந்தார்.

மானக்கஞ்சாறநாயனர் வரலாற்றைச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் 37 பாடல்களில் கூறியுள்ளார். அவர்,

கோலாறு தேன்பொழியக்
கொழுங்கனியின் சாறொழுகுங்
காலாறு வயற்கரும்பின்
கமழ்சாறூர் கஞ்சாறூர்

என்று ஊரின் வளத்தை அழகுபட மொழிகிறார். இவ்வூர் தென் இருப்புப்பாதையில் ஆனதாண்டவபுரம் என்ற நிலையத்துக்கு அருகிலுள்ளது. சிவன்கோயில் ஒன்றிருக்கிறது. இறைவன் திருநாமம் பஞ்சவடீசுவரர் என்றிருப்பது இவ்வரலாற்று நிகழ்ச்சிக்குத் தொடர்புடையதாக இருக்கிறது. கோயிலிலிருக்கும் சடாநாதர் என்ற மாவிரதியார், மானக்கஞ்சாறனார், அப்பர், சம்பந்தர், காட்சி நாதர் என்னும் கலியாணசுந்தரர் முதலிய திருவுருவங்கள் அவசியம் பார்க்கத் தகுந்தவை. அப்பரடிகள் க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் "கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையும் கயிலாயநாதனையும் காணலாமே" என்று கூறியிருப்பது இத்தலத்தின் பழம் பெருமையைக் காட்டுகின்றது. வடமொழியில் இப்பதிக்கு ஒரு புராணம் இருக்கிறது. அதில் நாயனார் பெயர் மானகாந்தன் என்று காணப்படுகிறது; கதை நிகழ்ச்சிகளிலும் சில மாறுதல்கள் உள்ளன.

கஞ்சநகர் மானக்கஞ்சாறனார் சீர்க்காதன்
மகள்வதுவை மணங் காணநாதன்
வஞ்சமலி மாவிரதத் தலைவனாகி வந்துபுகுந்து
அவள்அளக மகிழ்ந்து நோக்கிப்
பஞ்சவடிக்காமென்ன அரிந்து நீட்டும் பத்தர்
எதிர்மறைந் திறைவன் பணித்தவாக்கால்
எஞ்சலில் வண்குழல்பெற்ற பேதை மாதை
ஏயர் பிராற்குதவி யருளெய்தினரே

—உமாபதிசிவாச்சாரியர்

செய்திகள்

சிதம்பரம் : மணிவாசக மன்றத்தின் ஆனிமகவிழா 29-6-60 அன்று மாணிக்கவாசக சுவாமிகள் விழா நடைபெற்றது, திரு. குக. சதாசிவ அடிகள் அவர்கள் தலைமையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. வீ. உலகஊழியனார் அவர்கள் மணிவாசகர் கண்ட அம்பலவாணர் என்னும் பொருள்பற்றி சொற்பெருக்காற்றினார்கள். இவ்விழாவைக் கடலூர் அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு. ஆர். ஏ. வரதராஜ அய்யர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். இம்மன்றத்தின் ஆதரவில் ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் மாலை 7 மணிமுதல் "திருவாசக வகுப்பு" அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் மகாவித்வான் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்களால் நடத்தப்பெற்றுவருகிறது.

◆ ◆ ◆ ◆

கரைவீரம் : ஸ்ரீ கரைவீரநாதசுவாமி கோயில் திருப்பணியை சென்னை அறநிலையத்துறை அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் 1-7-60ல் துவக்கிவைத்தார்கள்.

◆ ◆ ◆ ◆

திருக்குற்றாலம் : திருக்குற்றாலநாதசுவாமி கோயிலில் சாரல் மாநாடு 8-7-60 முதல் 17-7-60 வரை நடைபெற்றது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ஒ.வி. அழகேசன் அவர்கள் தலைமையில், சென்னை அறநிலையத்துறை அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் மாநாட்டை துவக்கிவைத்தார்கள். அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமபிள்ளை ஐ.ஏ.எஸ்., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். பல அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் சொற்பொழிவாற்றினார்கள். இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

◆ ◆ ◆ ◆

இராமேசுவரம் : திரு இராமநாதசுவாமி கோயிலில் ஆடித்திருக்கல்யாணத் திருவிழா 17-7-60 முதல் 3-8-60 வரை நடைபெறும். சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெறும்.

◆ ◆ ◆ ◆

பெருஞ்சேரி : ஸ்ரீ வாகீஸ்வரசுவாமி கோயிலில் சென்ற ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடந்ததையொட்டி 10-7-60ல் காலையில் தசகலசம்வைத்து சம்பத்ஸ்தரா அபிஷேகமும், இரவு ஸ்ரீ சந்திரசேகரர் பிரகாரம் வலம்வந்தும் சிறப்புடன் நடைபெற்றது.

ஜகன்மோகன வேணுகோபாலன்

(பெரியாழ்வாரின் சொல்லோவியம்)

[பி. ஸ்ரீ.]

பெரிய நாவலந்தீவு என்று சொல்லப் படும் பரத கண்டத்தில் வாழும் பெண்களுக் கெல்லாம் ஓர் அற்புதத்தைச் சொல்லப்போவ தாகத் தொடங்குகிறது பெரியாழ்வாரின் மூன்ரும் பத்திலே ஆரும் திருமொழியாகிய வேணுகானப் பதிகம். 'வாழும் நங்கை மீர்கள்! (நங்கைமார்களே) இது ஓர் அற்புதம்கேளீர்' என்று பேசத்தொடங்கு கிருர் ஆழ்வார்.

வலம்புரிச் சங்கத்தை ஊதுகின்ற வாய் இப்போது புல்லாங்குழல் ஊதுகிறது. செவி கொடுத்துக் கேளுங்கள் அந்த இசையை என் கிருர். கோகுலச் சிறுமியரை அன்று அழைத்த இசை இவர் காதிலும்விழுகிறது. எல்லாப் பெண்களும் கேட்கலாம்என்கிருர். 'வாழும் நங்கைமார்களே!' என்று ஜீவான் மாக்களையெல்லாம் கூவியழைப்பதாய்க் கருத லாம்.

வசீகரிக்கப்படும் சிறுமியர்

எவ்வளவு குதூகலத்துடன் விரைந்து வருகிருர்கள்! உடலும் உள்ளமும் ஒருங்கே உருகுவது போன்ற உணர்ச்சியுடன் வரு கிருர்கள். காவல் கடந்து வருகிருர்களாம். கண்ணனது வேய்ங்குழலின் வசீகரத்தைத் தடுக்கும் கட்டுக்காவலும் உண்டோ?

'குழலோசை வழியே' வந்து சேர்கிருர் களாம். 'தூய... குழலோசை' என்கிருர். 'தூயவாயில் குழல் ஓசை' வாயால் சொல்ல முடியாததையெல்லாம் அற்புதமாய் சொல்லி விடுகிறதாம். 'கயிறு மாலையாகி வந்து கவிழ்ந்து நின்றனரே' என்கிருர். ஒரு கயிற் றிலே அடர்த்தியாகப் பன்னிறமலர்களைத் தொடுத்தாற்போல ஒழுங்காக வந்து நிற்கி ருர்களாம் இப் பெண்கள்.

'கவிழ்ந்து நின்றனரே' என்பது கவனிக் கத்தக்கது. தலைகவிழ்ந்து நிற்பதற்குக் கார ணம் என்ன? முகம் கொண்டு முகம் காண மாட்டாமல் நிற்கிருர்களாம். முகச்சோதி யின் சக்தி இது!

குழலூதும் சிறப்பு

குழல் ஊதும்போது மோவாய்க்கட்டை யின் இடப்பக்கம் இடது தோளின் பக்கமா கச் சாய்ந்திருக்கிறதாம். இரண்டு கைகளும் குழலோடு கூடப் புருவங்கள் நெரிந்து மேலேறுகின்றனவாம். வயிறு குடம்போல் எடுப்பாகத் தோன்றும்படி காற்றை நிறைத்து நிறுத்தி ஒழுங்காக விட்டுக் குழ லூதுகிருனும் கண்ணன். குழல்தொளைகளின் அளவுக்கு இசைய வாய் குவிந்து குமிழ்ந்துக் காண்பதையும் சுட்டிக் காட்டுகிருர் ஆழ்வார்.

புல்லாங்குழல் ஊதும்போது ஏற்படும் நிலையை அப்படியே அனுபவித்துப் பாடு கிருர் :

இடஅணரை இடத்தோளொடு சாய்த்து,
இருகைகூடப் புருவம் நெரிந்(து)ஏற,
குடவயிறுபட வாய்கடை கூட,
கோவிந்தன் குழல்கொ(டு) ஊதினபோது...

இந்த இசையின் விளைவாக இந்த மங் கையர் நிலைதான் என்ன? மயில்கள் போல வும் மான்கள் போலவும் வந்து நிற்கிருர்க ளாம். மலர்கள் அணிந்த கூந்தல் முடி அவிழ்ந்து அலைய நிற்பவர்களில் சிலர் தோகை விரித்தாடும் மயில்களை நினைவூட்டு கிருர்கள். வேறு சிலர் வெள்கி நிற்கும் நிலை யில் மான்களை நினைவூட்டுகிருர்கள்.

குழல் ஓசை வழியே வந்துநிற்பவர்களை இப்போது இந்த இசை என்ன பாடுபடுத்து கிறது!

மடமயில்களொடு மாண்பிணை போலே
மங்கைமார்கள்மலர்க் கூந்தல் அவிழ
உடைநெகிழவோர் கையால் துகில்பற்றி,
ஒல்கியோடரிக்கண் ஓட நின்றனரே!

இப்போது இப்பெண்கள் தங்கள் அழகையும் வெட்கத்தையும் கூட மறந்து இசையோடு ஒடுங்கி லயித்துப் போயிருக்கிறார்கள். ஏன், தங்களையும் மறந்து நிற்கிறார்கள். குலைந்த கூந்தலைக் கட்டிக்கொள்ள மறந்து, குலைந்த ஆடையையும் ஒரு கையால் பற்றிக் கொண்டு துவண்டு நிற்கிறார்கள்.

'ஓடு அரிக்கண் ஓட நின்றனரே!' என்ற வருணனையைப் பாருங்கள். பிறழ்ந்து பிறழ்ந்து ஓடுகிற ரேகைகளையுடைய கண்கள் நாணத்தையும் கடந்து கண்ணன் என்ற மோகன சொரூபத்தின்மேல் ஓடுகின்றனவாம்.

கோவலர் சிறுமியர் மட்டுமா, இப்படி வசீகரிக்கப்படுகிறார்கள்? தெய்வப்பெண்களும் குழலோசை வழியே வந்து நெருங்குகிறார்களாம். திரள் திரளாக வந்து குவிகிறார்களாம். 'வந்து வந்து ஈண்டி' என்கிறார் ஆழ்வார்,

மனம்உருகி, மலர்க்கண்கள்
பனிப்ப,
நிற்கிறார்களாம்.

இந்த வானுலகத்து இளம்பெண்களும் மலர்களோடு கூடிய கூந்தல் அவிழ்ந்து தொங்க வந்துநிற்கிறார்களாம்.

சென்னிவேர்ப்பச் செவிசேர்த்து
நின்றனரே

என்பது ஆழ்வார் வாக்கு. குழலோசையை அனுபவிக்கும் நிலையில் கண்களில் ஆனந்த நீர் துளித்து விழுவதுடன் நெற்றிவேர்வை முதலான விகாரங்கள் ஏற்படுவதாகவும் வருணிக்கிறார். இசையிலே செவிசேர்த்து மயங்கி நிற்கிறார்களாம்.

நந்தகோபனின் இளவரசு வடமதுரைக்கும் இளவரசு, வானுலகத்திற்கும் இளவரசு என்பதை இந்தக் குழலோசையே வான மங்கையர்க்கும் உணர்த்திவிடுகிறது. ஆயர்கள் பரிந்து நோக்கும் இந்தப் பிள்ளை (குட்டன்) 'வைகுந்தக் குட்ட'னாகவும் திகழ்கின்றான் குழலூதும் சிறப்பினாலேயே,

வான்இளவரசு, வைகுந்தக் குட்டன்,
வாசுதேவன் மதுரைமன்னன், நந்தர்
கோன்இளவரசு கோவலர் குட்டன்
கோவிந்தன் குழல்கொ(டு) ஊதினபோது,

தெய்வப்பெண்களும் மானுடப்பெண்களும் ஒருங்கே வசீகரிக்கப்படுகிறார்களாம்.

மேனகை திலோத்தமை அரம்பை ஊர்வசி முதலான அப்ஸர ஸ்திரீகள் வான வீதியிலே ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் வந்தார்கள். ஆடுவதிலும் பாடுவதிலும் தங்களுக்கு நிகராவார் இல்லையென்று செருக்குற்றிருந்த இந்தத் தேவமாதர்கள் வேணு கோபாலனைக் கண்டதும் வெட்கம் அடைந்து மயங்கித் தங்கள் ஆடல்பாடல்களை மறந்து விடுகிறார்கள்.

மேனகையொடு திலோத்தமை அரம்பை
உருப்பசி அரவர் வெள்கிமயங்கி
வானகம்படியில் வாய்திறப்பின்றி
ஆடல்பாடல் இவைமாறினர் தாமே

என்பது பெரியாழ்வார் வாக்கு.

பிருந்தாவனம் வீசிய அமுதகீதவலை

வேணுகோபாலனின் ஜகன்மோகன கீதம் வெள்ளமிடுகிறது பிருந்தாவனத்திலே. இதே பிருந்தாவனத்தின் வேறொரு பகுதியில் காளியன் என்ற ஐந்தலை நாகத்தின் படங்களிலே நடம்புரிந்து அந்த அசுரநாகத்தின் செருக்கை அடக்கினான் கண்ணன். இதே பிருந்தாவனத்தில் தான் தேனுகன் பிலம்பன் முதலான கொடிய அசுரப்பூண்டுகளும் நாசம் செய்யப்பட்டன.

இந்தக் காட்டிலே அடிக்கடி உலாவுவான் கண்ணன். உலாவிக்கொண்டே குழல் ஊதுவதும் உண்டு,

தேனுகன் பிலம்பன் காளியன்என்னும்
தீப்பப்பூடுகள் அடங்க உழக்கி,
கானகம்படி உலாவி உலாவிக்
கருஞ்சிறுக்கன் குழல் ஊதினபோது

என்பது பெரியாழ்வார் வாக்கு.

இதோ குழலிசை செவியைப் பிடித்து இழுப்பதுபோல் நாரதமுனிவரையும் வசீகரித்துக்கொண்டு வருகிறதாம். இசைக்கலைக்குத் தும்புருநாரதர் என்பது உலகப் பிரசித்தமான செய்தி. இந்த இசைவாணர்கள் சர்வலோகப்

பிரசித்தர்கள் என்று புராணங்கள் கூறுகின்றன.

செவிபடைத்தவர்களையெல்லாம் வசீகரிக்கக் கூடிய வீணாகானம் தும்புருநாரதர்களுக்கு உரியது என்பர். இவர்கள் இப்போது படும்பாட்டை,

மன்னர்அஞ்சும் மதுசூதனன் வாயில்
குழலின்ஓசை செவியைப்பற்றி வாங்க,
நன்னரம்புடைய தும்புரு வோடு
நாரதனும்தம் வீணை மறந்து...

என்று பெரியாழ்வார் கண்டு காட்டுகிறார்.

தும்புருநாரதர் தங்கள் வீணைகளை மறந்து விடுகிறார்களென்றால், 'இனி நாங்கள் எங்கள் கின்னர வாத்தியங்களைத் தொடவும் மாட்டோம்' என்று தங்கள் இசைக் கருவிகளைத் துறந்துவிடுகிறார்களாம் கின்னர மிதுனங்கள் என்று பேர்பெற்றிருக்கும் இசை நிபுணர்கள் :

கின்னர மிதுனங்களும் தம்தம்
கின்னரம் தொடுகிலோம் என்றனரே!

அதோ பாருங்கள். ஆகாச சஞ்சாரிகளும் தேவாத்திய விநோதர்களுமான கந்தர்வர்கள் என்ன பாடுபடுகிறார்கள் என்று காட்டுகிறார் பெரியாழ்வார்.

அம்பரம்திரியும் காந்தப்பர் எல்லாம்
அமுதகீத வலையால் சுருக்குண்டு
நம்பரம் அன்றுஎன்(று) நாணிமயங்கி
நைந்துசோர்ந்து கைம்மறித்து நின்றனரே

வேணுகானம் என்னும் அமுதவலையில் கட்டுண்டு வித்தியா கர்வங்களையெல்லாம் மறந்து 'நாமும் பாடிக்கொண்டிருந்தோமே வெட்கம் இல்லாமல்!' என்று மனம் நைந்து சோர்ந்து நிற்கிறார்களாம் கந்தர்வர்கள்.

இவர்கள் கைமறித்து நிற்பதாகவும் ஆழ்வார் கூறுகிறார். 'இனி நாங்கள் எங்கள் வாத்தியங்களைத் தொடுவதும் இல்லை!' என்று சங்கற்பித்துக் கொண்டவர்களைப் போல் கையைத் திருப்பிக் கொள்கிறார்கள் என்பது குறிப்பு.

விண்ணும் மண்ணும் சுருக்குண்ட அற்புதம்

'தேவகி சிறுவன்' என்கிறார் இந்த வேணுகோபாலனை. ஆண்டாள் திருப்பாவையில் வருணிக்கும் 'யசோதை இளஞ்சிங்கம்' தான். இப்போது 'தேவர்கள் சிங்கமா'கவும் விளங்குகின்றான், விண்ணும் மண்ணும் எல்லாம் 'அமுதகீதவலையில் சுருக்குண்டு' கிடக்கும் இந்த நிலையிலே.

இந்த அற்புதத்தைப் பாடுகிறவர், 'அதோ பாருங்கள் தேவகி சிறுவன், தேவகி சிங்கம், நம் பரமன் இந்நாள் குழல்' ஊதிக் கேட்டவர்களையெல்லாம் படாதபாடு படுத்துவதை என்று சுட்டிக் காட்டுகிறார். மகிழ்ச்சியால் மலர்ந்து விரிந்து, அன்பால் கருணையால் சிவந்திருக்கும் அந்தக் கண்களையும் திரண்டு பூரித்திருக்கும் தோள்களையும் காட்டுகிறார். அவன்தான் 'நம் பரமன்' என்று சொல்லிக் கொள்வதில் தான் இவருக்கு என்ன பெருமை! உலகம் அடைந்திருக்கும் அந்த இன்பவெறியைக் 'கேட்டவர்கள் இடர் உற்றன கேளீர்' என்று கூறுவதுதான் எவ்வளவு ரஸமாயிருக்கிறது!

செம்பெருந்தடங் கண்ணன் திரள்தோளன்
தேவகிசிறுவன் தேவர்கள் சிங்கம்
நம்பரன் இந்நாள் குழல்ஊதக்
கேட்டவர்கள் இடர்உற்றன கேளீர்

என்பது இப்பெரியார் வாக்கு.

வேணுகானத்தின் அமுதவலையில் சுருக்குண்டு இவருள்ளமும் கோபிகையாகிக் கண்ணனை நோக்குவதுபோலக் காண்கிறது. வேணுகோபாலனைக் குழந்தையாக ஏற்றுக் கொள்ளும் தாயுள்ளத்தோடு அன்பனைக் கண்டுகொள்ளும் ஜீவாத்மாவின் ஆசையையும் இங்கே பார்க்கிறோம். என்ன அற்புதம் இது!

வேணுகானத்தால் வேணுகோபாலன் கோபியர்களையும் ஆகாச சஞ்சாரிகளான கந்தர்வர்களையும் தமிழகத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள பெரியாழ்வாரையும் ஒருங்கே வசீகரிப்பதுபோல் நம்மையும் வசீகரிக்கிறான். அன்று இன்றுநாளை என்ற முக்காலங்களும் ஒரே அமுதகீதவலையால் கட்டுண்டு கிடக்கும் அதிசயத்தை என்னென்பது!

இந்தச் செய்தியைப் பெரியாழ்வார் 'புவியுள் நான் கண்டதோர் அற்புதம் கேளீர்' என்று பதிகத்தின் இடையே நினைவூட்டுவதையும் காண்கிறோம். வார்த்தையின்

அழைப்பிற்கு எல்லையுண்டு. கண்ணன்குழலிசையோ அமரலோகத்தளவும் செல்லுகிறதாம்.

புவியுள்நான் கண்டதோர் அற்புதம் கேளீர்:
பூணி மேய்க்கும்இளங் கோவலர்கூட்டத்து
அவையுள் நாகத்(து)அணையான் குழலூத
அமரலோமத்(து) அளவும் சென்(று)இசைப்ப
அவியுணு மறந்து வானவர்எல்லாம்
ஆயர்பாடி நிறையப் புகுந்(து)ஈண்டிச்
செவி உணவின் சுவைகொண்டு மகிழ்ந்து
கோவிந்தனைத் தொடர்ந்து என்றும்விடாரே

என்று காட்டி, 'எல்லாம் அந்த அமுதகீத வலையால் சுருக்குண்டு படும்பாடுதான்' என்கிறார்.

பசுக்களை மேய்க்கும் ஆயப்பிள்ளைகள் பிருந்தாவனத்தில் ஒரு சபைபோலக் கூடியிருந்தார்களாம். அந்தக் கூட்டத்தில் ஒருவனாக இருந்த கண்ணன் குழலூதிக்கொண்டு புறப்பட்டானாம். காட்டிலே பல இடங்களிலும் மேய்ந்துகொண்டிருந்த பசுக்கள் வெகு தூரம் விலகிப் போய்விடாமல் திரும்பிவந்து சேரவேண்டும் என்றுதான் முதல்முதல் குழல் ஊதினான். ஆனால் பசுக்களுக்கு முன் கோபியர்கள் அந்த இடத்திற்கு வந்துசேர்ந்தார்கள். விண்ணகத்துப் பெண்களும் இறங்கி வந்தார்கள். தும்புருநாரதர், கந்தர்வர்கள் எல்லாரும் வந்தார்கள். தேவர்கள் தங்களுக்கு உரிய அவியுணவு என்ற உணவு வகைகளையும் மறந்து குழலிசையாகிய செவியுணவே வேண்டும் என்று வந்து கூடியிருக்கிறார்களாம்.

பிருந்தாவனம் ஆய்ப்பாடி எங்கும் ஆயர்களுடன் தேவர்களும் திரண்டுவந்து புகுந்து நிற்கிறார்களாம். கண்ணன் செல்லும் இடங்களுக்கெல்லாம் தாங்களும் தொடர்ந்து செல்கிறார்களாம், 'நொடிப் பொழுதும் விட்டுப் பிரியோம்!' என்ற மனப்பான்மையுடன் இப்போது காணப்படுகிறார்களாம்.

'செவியுணவின் சுவை கொண்டு' என்பதற்கு, செவியுணவின் சுவைகொண்டு என்று பொருள் கொள்வதுடன், 'செவியுள் நாவின் சுவை கொண்டு' என்றும், 'செவியுள் நா இன்சுவை கொண்டு' என்றும் கொள்வதும் உண்டு.

விநோத ரஸிகர்கள்

தேவ ரஸிகர்கள் மட்டுமா, மனித ரஸிகர்கள் மட்டுமா?—வேறு விநோத ரஸிகர்களும் வேணுகானத்தை அனுபவிக்கக் காண்கிறோம். 'அதோ என்ன ஆச்சரியமான காட்சி! பசுக்கூட்டங்களோடு பட்சி ஜாலங்களும் லயித்துப் போய்விட்டன பாருங்கள்' என்று அந்தக் காட்சியை ஆழ்வார் நமக்குச் சுட்டிக் காட்டுகிறார். நாமும் நெருங்கிவந்து பார்க்கிறோம்.

பிருந்தாவனத்திலே உலாவி உலாவிக் குழல் ஊதியபின் ஒரு மரத்தடியிலே முகத்தில் முத்து அரும்பினாற்போல வேர்வைத் துளிகள் தோன்ற நின்று வேணுகானம் செய்துகொண்டிருக்கும் மோகனச் சிறுவனைப் பார்க்கிறோம். 'குட்டன்' 'சிறுவன்' சிறுக்கன்' என்றெல்லாம் 'செல்ல'மாகச் சொல்லிச் சொல்லிக் காட்டுகிறார் இந்தச் செல்லப்பிள்ளையை.

அழகிய சிறுவிரல்கள் புல்லாங்குழலின் துளைகளைப் புதைத்துப் புதைத்துத் திறக்கின்றன. கண்கள் துளைகள்தோறும் ஓடுவதுபோல நோக்குகின்றன. குமிழியிட்டுப் பொங்கிவருகிறது கீதவெள்ளம். இந்தச் சிறுவனையும் அந்த விநோத ரஸிகர்களையும் ஒருசேரப் படம்பிடித்துக் காட்டும் பாட்டு :

சிறுவிரல்கள் தடவிப் பரிமாற,
செங்கண்கோடச் செய்யவாய் கொப்பளிப்ப,
குறுவெயர்ப் புருவம் குடிலிப்பக்
கோவிந்தன் குழல்கொடு ஊதினபோது
பறவையின் கணங்கள் கூடுதுறந்து
வந்துசூழ்ந்து படுகாடு கிடப்ப,
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டு
கவிழ்ந்(து)இறங்கிச் செவிஆட்டகில்லாவே!

கறவைப் பசுக்களைப் பல மேய்ச்சல்—இடங்களிலுமிருந்து ஒரே இடத்திற்கு வரும்படி அழைக்கும் குழலோசை கூடுகளிலுமுள்ள பட்சிகளின் காதிலும் விழுகிறது. எத்தனை தினுசுகளான பறவைகள் அப்படியே பறந்து வந்து வேறுவேறு நிறமுள்ள சிறகுகளை விரித்துக்கொண்டு வெட்டி விழுந்த காடுபோலக் கண்ணனைச் சூழ்ந்து கிடக்கின்றன. வயிறு நிறைய மேய்ந்துவந்த பசுத்திரள்களோ, கால்களைப் பரப்பக் கொண்டு தலைகளைத் தொங்கவிட்டு நிலம்

பார்த்து நிற்கின்றன. அவற்ருல் செவியைக் கூட அசைக்க முடியவில்லை; அசைத்தால் கூட அந்த இசையைக் கேட்பதற்குத் தடை யாகும் என்ற எண்ணமோ?

என்ன விநோத ரஸிகர்கள்! என்ன அமுதகீதம்! நாக்கின் சுவையைச் செவியி லேயே பிறப்பித்துப் பகுத்தறிவில்லாத பிராணிகளையும் வசீகரித்து, உயிர்க்குலங் களையெல்லாம் சகோதர தர்மம் என்றும் தெய் விக பாசத்தால் கட்டிவிடுகிறது.

இந்தக் காட்சியை நினைக்க நினைக்கப் பெரியாழ்வாருக்கு இந்திரியங்களெல்லாம் சிந்தையாகின்றன; கண்களாகின்றன; குணங்கள் பரமஸாத்விகமாகி விடுகின்றன. குழல், ஊதும் கோபாலன், 'உள்ளம் கர்வ கள்வ'ஞகி விடுகிருன்.

விநோத ரஸிகர்களில் மான்களையும், சிறிது தூரத்தில் மருண்டு மேய்கை மறந்து நிற்கும் நிலையில் சுட்டிக் காட்டுகிருர், மேய்கை மறந்தது மட்டுமா? 'மேய்ந்த புல் லும் கடைவாய் வழி சோர' நிற்கின்றவாம் இம்மான்கள். குழலோசையாகிற இந்த வலை விரித்த வழியிலே மான்கணங்கள் அகப் பட்டு மெய்ம்மறந்து முன்னும் போகாமல் பின்னும் போகாமல் கால்களையும் அசைக்கா மல் நின்றுகொண்டிருக்கின்றனவாம். 'இரண்டு பாடும் துலுங்கா' என்று இந்தநிலை யைக் குறிப்பிடுகிருர். பக்கங்களிலும் அடி பெயர்த்து வைக்க முடியவில்லையாம்: 'புடை பெயரா' என்கிருர்.

மான்களை இப்படி வசீகரிக்கும்போது இந்தக் குழலோசைக்குக் காரணமாகிய கோபாலன் நிற்கின்ற நிலையையும் சுட்டிக் காட்டுகிருர். திரண்டு எழுந்து தழைக்கின்ற மழை மேகம்போல் நிற்கின்ருனும். இந்த மேகம் இப்போது பெய்யும் மழை கீதமழை! சுருண்டு இருண்ட மேகங்கள் முகத்திலே தாழ்ந்து அலைகின்றனவாம் இவன் குழலூ தும்போது, இந்தக் காட்சி செந்தாமரைப் பூவைச் சூழ்ந்து அலையும் வண்டுகளின் கூட் டத்தை நினைவூட்டுகிறது ஆழ்வாருக்கு.

இனி இந்த முழுச் சித்திரத்தையும் ஒரே பார்வையில் பார்ப்போம்:

திரண்டெழுதழை மழைமுகில் வண்ணன்,
செங்கமல மலர்சூழ் வண்டினம்போலே
சுருண்டிருண்ட குழல்தாழ்ந்த முகத்தான்
ஊதுகின்ற குழலோசை வழியே,
மருண்டு மான்கணங்கள் மேய்கைமறந்து
மேய்ந்தபுல்லும் கடைவாய் வழிசோர,
இரண்டுபாடும் துலுங்கா, புடைபெயரா,
எழுதுசித்திரங்கள் போல நின்றனவே!

இயற்கையே மோகித்துப் போகிறது

மான்கள் மட்டுமா இப்படி வசீகரிக்கப் படுகின்றன! தாவரப் பொருள்களான மரம் முதலியனவும் உருகுகின்றனவாம்; வணங்கு கின்றனவாம். 'மரங்கள் நின்று மதுதாரை கள் பாயும்!' என்று அந்த மரங்களின் ரஸி கத்தன்மையைக் காட்டுகிருர். "மலர்கள் விழுகின்றன' என்று காட்டி அந்த மரங் களும் மலர்சொரிந்து வழிபடுகின்றன குழ லூதும் கோபாலனை என்கிருர். கிளைகளைத் தாழ்த்தி நிழல் செய்து மரங்கள் பணிபுரி வதையும் சுட்டிக்காட்டுகிருர்.

மரங்களின் கொம்புகள் குவிந்து நிற் கும் காட்சியிலும் கண்ணனை நோக்கி அவை கைகூப்பி நிற்கும் அற்புதத்தைக் கண்டு காட்டுகிருர். 'எவ்வளவு உருக்கத்துடன் இப்படியெல்லாம் செய்கின்றன!' என்கிருர். 'கண்ணன் நின்ற நின்ற பக்கம் நோக்கி வழி படுகின்றனவே' என்கிருர்.

இயற்கை மோகினியையும் இப்படி மோகிக்கச் செய்யும் கண்ணனைக் கடைசியாக ஒரு முறை பார்க்கிருேம். மயிலின் தோகை யால் முடியை அலங்கரித்துக்கொண்டிருக் கிருன். ஆனல் முடிதான் அந்தத் தோகைக்கு அலங்காரமோ என்ற ஐயமும் உண்டா கிறது. அரையிலே பொன்னிற ஆடை— யசோதையின் செல்லப்பிள்ளையும் ஆய்ப் பாடியின் இளவரசுமல்லவா? விலையுயர்ந்த நகைகளும் அணிந்திருக்கிருன். ஆனல் புல் லாங்குழலும் வாயுமாகத் தோன்றும் நீலரத் தின மேனிதான் அந்த அணிகளுக்கும் அலங் காரங்களுக்குமே ஒரு புதிய சோபை தரு கிறது.

இந்த ஜகன்மோகன வித்தையையும் வித்தைக்காரனையும் இதோ பாருங்கள் பெரி யாழ்வாரின் கவிதைக் கண்ணுடியில்:

கருங்கிண்-தோகை மயிற்பிலி அணிந்து,
கட்டிநன்கு உடுத்த பீதகஆடை
அருங்கலஉருவின் ஆயர் பெருமான்
அவன்ஒருவன் குழல் ஊதினபோது,
மரங்கள்நின்று மதுதாரைகள் பாயும்;
மலர்கள்வீழும்; வளர்கொம்புகள் தாழும்;
இரங்கும்; கூம்பும்; திருமால் நின்றநின்ற
பக்கம்நோக்கி அவைசெய்யும் குணமே.

பசுக்களின் தோழன் கோபிகைகளின் தோழன் இப்போது இயற்கையின் காதல ஞகிவிடுகிருன். இயற்கையும் தானும் கீத முமாயிருக்கும் கோபாலனை அடைந்த அமுத கீதவலையில் சுருக்குண்டு, 'என்ன என்ன உணர்ச்சிகளையெல்லாம் தாவரங்களுக்கும் உண்டாக்கி விடுகிறது இந்த வேணுகானம்' என்று ஆச்சரியப்படுகிறது. அன்புக் கண்ண னது குழலிசை சராசரங்களையெல்லாம் ஒருங்கே தழுவி அருள் செய்கிறது; விண்ண கத்தையும் மண்ணகத்திலே கொண்டு வந்து காட்டுகிறது.

இந்தப் பதிகத்திலுள்ள தமிழ்ப் பாசு ரங்களை ஓதி ஓதி உருகுவோர்,

குழலைவென்ற குளிர்வாயினர் ஆகிச்
சாதுகோட்டியுள் கொள்ளப் படுவாரே

என்று பலன் சொல்லி முடிக்கிறது பதினே ராவது பாட்டாகிய இறுதிப் பாசுரம்.

ஜகன்மோகன வேணுகோபாலனின் வேணுகானத்தை வருணித்திருக்கும் இந்தத் தமிழ்ப் பாடல்களை ஓதி ஓதி உணர்ந்து உணர்ந்து உருகுவோர் சாதுக்களின் திருக் கூட்டத்தில் இடம் பெறுவார்களாம். இப் பாசுரங்களின் வாயிலாகக் கண்ணபிரானின் வேய்ங்குழலின்பத்தை அனுபவிக்கும் உள் ளம் செம்மைப்படும், அழகு பெறும், தூய் மையுறும் என்பது பல தலை முறைகளாகப் பக்தர் கூட்டத்தின் அனுபவம்தான்.

இத்தகைய சாதுக்களின் குரலோ குழ லோசையின் குளிர்ச்சியையும் வென்று விடு மாம். உள்ளம்தானே வாக்காக வருகிறது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாது உண்மைச் சாதுக்களுக்கு!

அடுத்த கட்டுரை:

வேய்ங்குழலும் வேறு பாடல்களும்

செய்திகள்

சாத்தூர்; ஸ்ரீவெங்கடாசலபதி கோயிலில் ஆணிப்பெருந்திருவிழா 29-6-60 முதல் 11-7-60வரைநடைபெற்றது. சமயச்சொற்பொழிவுகளும்,இன்னிசையரங்கும் நடைபெற்றன.

மதுரை ஆடிவீதி: திருவருள் தவநெறி கூட்டுவழிபாட்டு மண்டபத்தில் பெரிய புராணச் சொற்பொழிவுகள் 23-7-60 முதல் 31-7-60 வரை நாடோறும் மாலை 7 மணிமுதல் சைவப் பெருமக்களால் நடத்தப்பெற்றன.

திருவாடனை: ஆதிரெத்தினேசுவரர் கோயில் ஆடிப்பூரத் திருக்கல்யாண மகோற்சவம் 17-7-60 முதல் 1-8-60 வரை நடைபெற்றது.

திருச்செந்தூர்: ஸ்ரீ சுப்பிரமணியசுவரமி கோயிலில் செந்திலாண்டவன் விடுதி முன்பாக தேவஸ்தான நூல்நிலைய வாசகசாலை கட்டிடத்திற்கு 8-7-60ல் சென்னை அறநிலையத்துறை அமைச்சர் கனம். எம். பக்தவத்சலம் அவர்கள் கால்கோள் நாட்டினர்கள்.

விருத்தாசலம்: விருத்தகிரீசுவரர் கோயிலில் ஸ்ரீவிருத்தாம்பிகையின் ஆடிப்பூரத்திருக் கல்யாணமகோற்சவம் 18-7-60ல் தொடங்கி 27-7-60 முடிய நடைபெற்றது.

திருவாமாத்தூர்: கௌமாரமடாலயத்தில் அருள்மிகு. தண்டபாணி சுவாமிகளது 62-ஆம் ஆண்டு நிறைவுக் குருபூசை விழா 10-7-60ல் நடைபெற்றது. அதுபோது விழுப்புரம் தமிழா சிரியர் திரு முருக. சரவணபவன் அவர்கள் 'முருகனும் தமிழும்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினர்கள்.

பட்டினத்தார்

பட்டினத்துப் பிள்ளையினைப் பத்ரகிரி யைப்பரவி
விட்டுவிட மாட்டார்வெறு வீடர்

—கண்ணுடையவள்ளலார்.

ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்தசெல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ தெந்நாளோ

பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆரும் துறக்கை அரிதரிது

—தாயுமானவர்

பெருஞ்செல்வத்தையும் துரும்பு என எண்ணி அருந்துறவு பூண்ட ஆன்றோர் பலர் நம் நாட்டிடையே தோன்றினர். அத்தகையோரிற் சிறந்தவராகக் கருதப்படுபவர் பட்டினத்தடிகள். பெருந்துறவிகளான கண்ணுடைய வள்ளலார், தாயுமானவர் இருவரும் மேலே காணும் பாடல்களில் போற்றிப் புகழ்ந்திருப்பதே பட்டினத்தாரின் பெருமைக்குச் சான்று பகரும்.

கடற்கரையிலுள்ள பெரிய நகரத்தைப் பட்டினம் என்று கூறுவது தமிழ்வழக்கு. காவிரியாறு கடலொடு கலக்கும் இடத்தில் புகழ்பெற்று விளங்கிய நகர் காவிரிப்பூம் பட்டினம் என்பது. பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில் அந்நகரைப்பற்றி விரிவாகக் கூறப்பெற்றிருக்கிறது. அப்பதியில் அவதரித்தமையால் பட்டினத்தார் என்ற பெயர் பெற்றார் நம்பெருமகனார். அவருடைய வரலாறு சிற்சில மாறுதல்களோடு அவரைப்பற்றிய நூல்களில் காணப்பட்டாலும் பொதுவான நிகழ்ச்சிகளைத் தொகுத்து இக்கட்டுரையில் கூறப்படும்.

சென்னை திருவொற்றியூர் கோயில் பட்டினத்தார்

புகார் என்ற பெயருடைய காவிரிப்பூம் பட்டினத்தில் சிவநேசர் என்ற வணிகர் வாழ்ந்தார். அவர் மனைவியார் ஞானகலாம்பை என்பவர். அவர்களுக்குப் பெண்மகவு ஒன்றிருந்தது. இருவரும் ஆண்மகவை வேண்டி அருந்தவங்கிடந்தனர். இறைவன் திருவருளால் ஆண்குழந்தை பிறந்தது. அதற்குத் திருவெண்காடர் என்னும் திருப்பெயரிட்டனர். பிள்ளை வளர்ந்து கல்வி பயின்றுவந்தது. குழந்தைக்கு ஐந்து வயதாகு மளவில் தந்தையார் சிவபதம் அடைந்தார். தாயினால் பேரன்புடன் வளர்க்கப்பட்ட திருவெண்காடர் மணப்பருவம் எய்தினர். சிவகலை என்ற அம்மையை அவருக்கு வதுவை புரிவித்தனர். அவ்விருவருக்கும் மகப்பேறு இன்மையால் திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கும் மகாலிங்கப் பெருமானை வழிபட்டுத் தவங்கிடந்தனர்.

திருவிடைமருதூரிலிருந்த ஆதிசைவர் ஒருவர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமானை நாள்தோறு முறையாக வழிபடும் கடமை பூண்டவராக இருந்தார். அவர் வறுமையால் துன்பமுற்றூர். ஒரு இரவு அவர் கனவில் சிவபெருமான் தோன்றி "நாம் திருக்குளக்கரையில் கூவிள மரத்தடியில் ஒரு குழந்தையாகக் கிடப்போம். எம்மை எடுத்துச்சென்று புகார் நகர்ப் பெருவணிகரான திருவெண்காடரிடம் கொடுத்தால் நிறையப் பொன்பெற்று வறுமை யொழிக்கலாம்" என்றுகூறி மறைந்தனர். ஆதிசைவரும் அவர் மனைவியாரும் கனவில் கண்டவாறே குழந்தையைக் குளக்கரையில் கண்டனர்; பெருமகிழ்ச்சி கொண்டனர்.

இப்பால், இடைமருதீசர் பட்டினத்தார், அவர் மனைவியார் இருவருடைய கனவிலும் தோன்றி, "ஆதிசைவர் ஒருவர் கொண்டு வரும் ஆண்மகவை நிறைக்குநிறை பொன் கொடுத்து வாங்கி மக்கட்பேற்றின் பயன் பெறுக" என்றருளித் திருவுருக்கரந்தனர். திருவெண்காடரும் ஆதிசைவர் கொண்டுவந்த குழந்தையை வாங்கிக்கொண்டு பொன் கொடுத்தனுப்பினர்.

திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கும் பெருமான் திருவருளால் குழந்தை கிடைத்ததால் அதற்கு மருதவாணர் என்ற பெயரிட்டு வளர்த்து வந்தனர். மருதவாணரும் பிள்ளைப்பருவம் கடந்து இளந்தோன்றலாய்த் திகழ்ந்தனர். தந்தையார் இசைவு பெற்று, தம்மையொத்த இளைஞர்களுடன் வணிகம் செய்யும்பொருட்டு கடலில் மரக்கலம் செலுத்தி அயல்நாடு சென்றனர். வணிகத்தால் பொருள் ஈட்டி எல்லோரும் புகார் நகருக்குத் திரும்பினர். மருதவாணர் மரக்கலம் நிறைய எருவும் அவல்கடலையும் இருப்பது கண்டு எள்ளி நகையாடினர். கடலில் வரும் வழியில் புயல்காற்றால் குளிர் மிகுந்தது. மற்றையோர் எடைக்கெடை தருவதாக வாக்களித்து மருதவாணரிடம் எருப்பெற்றுத் தீமூட்டி குளிர் நீக்கிக் கொண்டனர். புயல் நின்றபின் எல்லோரும் காவிரிப்பூம்பட்டினத்தை யடைந்தனர். உடன் சென்றவர்கள் திருவெண்காடரிடம் சென்று "உம்மகன் மருதவாணன் சித்தநிலை திரியப் பெற்றான்" என்று கூறினர். மரக்கலத்திலுள்ள பொருள்கள் வரட்டியும் அவல் மூட்டைகளாயிருப்பதை யறிந்த திருவெண்காடர் திகைப்புற்றூர். மருதவாணரைத் தேடினூர்; காணப்படவில்லை. அவர் பெட்டியைத் திறந்து பார்க்க அதில் ஒரு எருவும் ஓலையையும் இருக்கக்கண்டனர். வரட்டியைப் பிட்டுப்பார்க்க அதில் ஒரு மாணிக்கம் இருந்தது. மற்ற வரட்டிகளிலும் அவ்வாறேயிருந்தன. அவல் பொதிகளில் பொன்மணல் கலந்திருக்கவும் கண்டு வியப்பெய்தினர். மருதவாணர் எங்கேயென்று மனைவியாரை வினவினூர் திருவெண்காடர். அம்மையார், தந்தையிடம் கொடுக்கும்படி சொல்லி மைந்தன் கொடுத்த சிறுபெட்டியை அவரிடம் கொடுத்தார். அதைத் திறக்க, காதில்லாத ஊசியும், ஓலை நறுக்கும் இருக்கக்கண்டனர். ஓலைத்துண்டில் "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்ற உபதேச

சென்னை திருவொற்றியூர் பட்டினத்தார் கோயில் முகப்பு

மொழியைப் பார்த்தனர். அவ்வளவில் திருவெண்காடர் பரிபாகமுற்றுத் துறவுமேற் கொண்டார். தாயார் தமக்கு ஈமக்கடன் கழிக்க வேண்டுமென்று விரும்ப அது செய்வ தாக உறுதிகூறி, மனைவியார்க்கு நல்லுரை பகர்ந்து வீட்டிலிருக்கச் சொல்லிவிட்டு வெளி யேறினர். துறவுக் கோலங்கண்ட ஊரார் வருந்த, நிலையாமையை அவர்களுக்கு எடுத் துரைத்து ஆறுதலளித்தனர்.

பட்டினத்தடிகள் தம்மிடம் கணக்கரா யிருந்த சேந்தனாரை அழைத்து தம் பொருளை யெல்லாம் எல்லோருக்கும் வழங்கச் சொன் னார். ஊர்ப் பொதுமண்டபத்தில் நிட்டையி லிருந்தார். அரசன் அவரை யண்மித்துறவுக் கோலம்பூணக் காரணம் வினவினான். "நீர் நிற்க, நாம் இருக்க" என்று சுருக்கமாக விடை கொடுத்தார் அடிகளார். யோகநிலை பயில்வார்; பசி வந்தபோது பிச்சையேற் றுண்பார்; "குடியிருந்த மனைக்குக் கொள்ளி வைப்போம்" என்று சொல்லித்திரிவர். இவற்றை இழிவாக நினைத்த அவர் மரபினர் ஒருவர் நஞ்சு கலந்த அப்பத்தை அவருக்குக் கொடுத்தார். "தன்வினை தன்னைச்சுடும், ஓட்டப்பம் வீட்டைச்சுடும்" என்று கூறிக் கூறையில் அப்பத்தைச் செருகினர். உடனே வீடு தீப்பற்றி யெரிந்தது.

பின்னர் தமது அன்னையார் சிவனடி யடைந்ததைக் கேள்வியுற்று திருவெண்காடு சென்று ஈமக்கடன்களைச் செய்துவிட்டு, திருவிடைமருதூர் சென்று இறைவனை வழி பட்டு, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை என்ற பாமாலை சூடினர். பிறகு பல தலங் களையும் வணங்கி வடநாடு சென்றார் உஞ் சேனைமாகாளம் என்ற ஊரின் புறத்தே யிருந்த விநாயகர் கோயிலில் நிட்டைகூடி இருந்தார். அவ்வூர் மன்னன் அரண்மனையில் நகைகளைக் களவுசெய்த திருடர்கள், தாங்கள் வேண்டிக்கொண்டபடியே முத்துமாலை யொன்றை விநாயகர் கழுத்திற்போட இரவா யினமையின் அது பட்டினத்தடிகளின் கழுத் தில் விழுந்தது; நிட்டையிலிருந்ததால் அவர் அதை அறியார். கள்வர்களைத் தேடிவந்த அரச ஏவலர் அடிகளார் கழுத்தில் அரச முத்துமாலை கண்டு, அவரைத் திருடரெனப் பிடித்துச் சென்று அரசருக்கு அறிவித்தனர். அரசன் அவரைக் கழுவிலேற்ற ஆணைபிறப் பித்தனன். அடிகளாரைக் கழுமரத்தின் முன் கொண்டுவந்து நிறுத்தினர். அப்போது,

என்செய லாவது யாதொன்று
மில்லைஇனித் தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற்
றேனிந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று
மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ இங்ஙனே
வந்து மூண்டதுவே

என்று பாடியருளினர். உடனே கழுமரம் தீப்பற்றியெரிந்தது. அஞ்சிய ஏவலர் அரச னிடம் சென்று நிகழ்ந்த அற்புதத்தை அறி வித்தனர். அவனும் ஓடி வந்து அடிகளாரின் அடிகளில் வீழ்ந்து பொறுத்தருளவேண்டிய துடன் துறவும் மேற்கொண்டான். பட்டி னத்தார் அவ்வரசத் துறவியைத் திருவிடை மருதூர்ச் செல்லப் பணித்தார். அவரே பத் திரகிரியார் என்ற பெயர் கொண்டழைக்கப் படுபவர். திருவெண்காட்டடிகள் பல தலங் களை வணங்கித் திருவிடைமருதூர் சென்று கோயிலின் கீழ்க்கோபுரவாயிலில் தங்கினர். ஐயமேற்றுண்டு மிஞ்சியதைத் தம்மிடம் அன்புகாட்டும் நாயொன்றுக்குப் போட்டு வரும் பழக்கத்துடன் பத்திரகிரியார் மேலைக் கோபுரவாயிலை இருப்பிடமாகக்கொண்டார்.

ஒருநாள் மருதப்பெருமான் சித்தராக பட்டினத்தடிகளின் முன் தோன்றி பசிக்கிற தென்று விண்ணப்பித்தார். முனிவர் பெரு மான், "என் கோவணமும் எனக்குச் சுமை யாக இருக்கிறது; நான் பசிக்குச் சோறு போடவல்லேன் அல்லேன்; மேலைக் கோபுர வாயிலில் ஒரு குடும்பியிருக்கிறான்; அவனிடம் செல்லும்" என்று கூறினர். அடிகள் சொன் னதைச் சித்தர் பத்திரகிரியார் பால் சென்று சொன்னார். "இரந்துண்ணும் ஓடும் எச்சி லுண்ணும் நாயுமோ என்னைச் சமுசாரி ஆக் கின" என்று சொல்லி ஓட்டை வீசி யெறிந் தார். ஓடு நாயின் மண்டைமேல்பட அது இறந்தது. சில காலம் பின்னர் பத்திரகிரி யாரும் அழியாப் பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றார்.

பட்டினத்தடிகளைத் திருவொற்றியூ ருக்கு வரும்படியாகத் திருவருள் ஆணை பிறந்தது. இடைமருது நீங்கித் திருவெண்

காடு சேர்ந்தார். அரசனுல் விலங்கிடப் பெற்று சேந்தனுர் சிறையிலிருப்பதை அறிந்தார். மூத்த பிள்ளையாரிடம் அடிகளார் முறையிட்டனர். கணபதிப் பெருமான் அருளால் தளை நீங்கப்பெற்ற சேந்தனுர் திருவெண்காட்டடிகளை வந்து வணங்கினுர். அடிகளார் அவரைத் தில்லைக்குச் செல்லப் பணித்தனர். அவரும் அவ்வாறே சென்று திருப்பல்லாண்டு, திருவிசைப்பா பாடியருளி கொஞ்சகாலம் சென்று கூத்தப்பெருமான் திருவடி நீழல் அடைந்தார்.

பட்டினத்தடிகளார் சீகாழிக்குச் சென்று திருக்கழுமல மும்மணிக்கோவை பாடி, சிதம்பரத்தையடைந்து கோயில் நான்மணி மாலை பாடியருளினுர். பின்னர் காஞ்சிபுரம் சேர்ந்து திருவேகம்பமுடையார் திருவந்தாதியை ஓதியருளினுர். கடைசியாகத் திருவொற்றியூர் அடைந்தார். திருவொற்றியூர் ஒருபா ஒருபது என்ற அருள் மாலையைத் தொடுத்தனர். அங்கு கடற்கரையோரமாக விளையாடிக் கொண்டிருந்த ஏகாலியச் சிறுவர் உதவியால் குழிதோண்டச் செய்து அதில் இறங்கி நிட்டை கூடுவார்போன்றிருந்து சிவலிங்க உருவமாயினர். தாயுமானவர்,

சத்தாகி நின்ரூேர் சடங்களில் இலிங்கமென
வைத்தாரு முண்டே யென்வாழ்வே பராபரமே

என்று இச்செயலை மனத்துட்கொண்டே கூறினர் போலும்.

பட்டினத்தடிகளின் வரலாற்றை பட்டினத்துப் பிள்ளையார் புராணம், திருவெண்காட்டடிகள் சரித்திரம், புலவர் புராணம் என்ற மூன்று நூல்கள் சிற்சில வேறுபாடுகளுடன் கூறுகின்றன. பட்டினத்துப் பிள்ளையார் புராணம் இயற்றியவர், காலம் இவை தெரியவில்லை. தொழுவூர் வேலாயுத முதலியார் திருவெண்காட்டடிகள் சரித்திரத்தை எழுதினுர். தண்டபாணிசுவாமிகள் புலவர் புராணத்தில் அடிகளாரின் வரலாற்றைக் கூறியுள்ளார். பட்டினத்தடிகளின் காலம் சேந்தனுர் இருந்த காலம். ஆதலால் திருவிசைப்பா காலமான கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டாக இருக்கவேண்டும். கி. பி. 15-ஆம் நூற்ருண்டிலிருந்த அருணகிரிநாதர் அடிகளாரின் மகன் என்று ஒரு வரலாறு வழங்குவது ஒரு சிறிதும் பொருந்தாதது. அடிகளார் அருளிய ஐந்து நூல்களும் பதினெராந் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. பட்டினத்தார் பாடல் திரட்டு என்று சில சாதாரணப் பாடல்கள் தொகுத்த நூல் ஒன்று உலவிவருவது யாவரும் அறிந்ததே. அதைப் பிற்காலத்தில் பட்டினத்தார் என்ற பெயர் கொண்ட ஒருவர் செய்திருக்கவேண்டும். பட்டினத்தடிகளின் ஐந்து நூல்களில் காணப்பெறும் நடை, நயம், சிறப்பு முதலியவை பின்னெழுந்த நூலில் காணப்படாமை இவற்றைக் கூர்ந்து பயில்வோர்க்கு நன்கு புலனுகும்.

திருவெண்காட்டடிகள் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில்,

வித்தகப்பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்

என்று தேவார மூவரையும், மணிவாசகரையும் போற்றியிருக்கின்றனர். திருக்கழுமல மும்மணிக்கோவையில்,

தாதை யொடுவந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்ன யோவென்று அழைப்ப முன்நின்று
ஞானபோ னகத்தரு ளட்டிக் குழைத்த
ஆனத் திரளை அவன் வயினருள
அந்தணன் முனிந்து தந்தார் யாரென
அவனைக் காட்டுவன் அப்ப வானுர்
தோஒ டுடைய செவிய னென்றும்
பீஇ டுடைய பெம்மா னென்றும்
கையிற் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே

என்று சம்பந்தர் ஞானப்பால் உண்டு இறைவனைப் பாடிய காட்சியை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிருர்.

கோயில் நான்மணி மாலையில் "பார்த்திவராவதில்.....கடை கொண்ட பிச்சை கொண்டிங்கு வாழ்தல் களிப்புடைத்தே" என்று கூறியிருப்பது அவர் பெருந்துறவிற்கேற்றதே. "அடியொன்று பாதமேழிற்கு மப்புறம்பட்டது" என்றது "பாதாள மேழினுக்கப்பால்" என்ற திருவாசகத்தை நினைவூட்டுகிறது. பதினுரும் பாட்டில் உடலைக் கலமாக உருவகித்திருப்பது மிக அழகிது. இன்னும்,

தாதையை எறிந்த வேதியச் சிறுவற்குப்
பரிகலங் கொடுத்த திருவுளம் போற்றி
நின்முதல் வழிபடத் தன்மகற் றடிந்த
தொண்டர் மனையில் உண்டல் போற்றி

என்று சண்டேசுரர், சிறுத்தொண்டர் செயல்களைப் போற்றியுள்ளார்.

திருவேகம்பமுடையார் திருவந்தாதி காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மேற் பாடிய பிரபந்தம். நூறு பாடல்கள் உள்ளன. அதில் பல சிவத்தலங்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

திருவொற்றியூர் ஒருபா வொருபது என்ற நூல் ஒற்றியூருடைய சிவபெருமான் மீது அந்தாதித் தொடையாகப் பத்துப் பாடல்களையுடையது. தூமதிச்சடை மிசைச் சூடுதல், ஆனேறேறுதல், மான்மறி யேந்துதல், சூலம் ஏந்துதல், முக்கண், எண்வகை மூர்த்தி முதலியவற்றைக் கூறி இறைவன் திருக்கோலத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

பிற்காலத்துப் பட்டினத்தார் பாடல் திரட்டில் கோயில் திருவகவல், கச்சித் திருவகவல், திருவேகம்பமாலை, பல தலங்களைப் பற்றிய தனிப்பாடல்கள், பொதுப்பாடல்கள் முதலியவை காணப்படுகின்றன. இவற்றில் வேட்டி, பொம்மலாட்டம், பொக்கசம், சலவை, சொகுசு, ஒப்பாரி, ஒய்யாரம் என்பனபோன்ற பிற்கால வழக்குச் சொற்கள் இருப்பதைக் கொண்டே பதினோராந் திருமுறைப் பட்டினத்தடிகள் இப்பாடல்களைப் பாடியவரல்லர் என்பது பெறப்படும்.

பட்டினத்தடிகளின் திருக்கோயில் திருவொற்றியூருக்குக் கிழக்கே கடற்கரையில் அமைதியான இடத்தில் அமைந்திருக்கின்றது. 6-8-60 அன்று அவருடைய திருநட்சத்திர விழா கொண்டாடப்பெறும்.

ஒற்றிமாநகர் உடையோய் போற்றி!
முற்றுமாகிய முதல்வ போற்றி!

—பட்டினத்தார்.



திருப்புகலூர் அக்கினீசுவரசுவாமி கோயில் சிவாகம சித்தாந்தப் பயிற்சி வகுப்புத் திறப்புவிழா.

திருவொற்றியூர்

விளிதரு நீரும்மண்ணும் விசும்
போடனல் காலுமாகி
அளிதரு பேரருளான் அர
னாகிய ஆதிமூர்த்தி
களிதரு வண்டுபண்செய் கமழ்
கொன்றையி னோடணிந்த
ஒளிதரு வெண்பிறையான் உறை
யும்மிடம் ஒற்றியூரே
—திருஞானசம்பந்தர்.

மனமெனுந் தோணி பற்றி
மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச்
செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி
மறியும்போ தறிய வொண்ணா
துனையுனு முணர்வை நல்கா
யொற்றியூ ருடைய கோவே
—திருநாவுக்கரசர்.

கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே
கட்டி யேபலர்க் குங்களை கண்ணே
அங்கை நெல்லியின் பழத்திடை யமுதே
யத்தா வென்னிட ரார்க்கெடுத் துரைக்கேன்
சங்கும் இப்பியுஞ் சலஞ்சலம் முரல
வயிர முத்தொடு பொன்மணி வரன்றி
ஓங்கு மாகட லோதவந் துலவு
மொற்றி யூரெனு மூருறை வானே
— சுந்தரர்.

சென்னைமா நகரிலும் அதற்கு வடக்கே யும் தெற்கேயுமாக மூன்று பாடல்பெற்ற சிவத்தலங்கள் அமைந்திருக்கின்றன. நகரில் திருமயிலையும், தெற்கில் திருவான்மியூரும், வடக்கில் திருவொற்றியூரும் உள்ளன. மயிலையைச் சம்பந்தரும், வான்மியூரைச் சம்பந்தரும் அப்பரும் பாடியுள்ளனர். திருவொற்றியூர் மூவர் பாடல்களும்பெற்ற சிறப்புடையது. தொண்டை நாட்டுத் தேவாரம் பெற்ற பதிகள் முப்பத்திரண்டில் ஒன்று. இது சென்னைக்கு வடக்கே ஆறு கல்தொலைவிலிருக்கின்றது. மோட்டார் வண்டிகள் சென்னைக்கும் இவ்வூருக்கும் ஓடிக்கொண்டேயிருக்கின்றன. திருவொற்றியூர் என்ற இருப்புப்பாதை நிலையத்திலிருந்து கால் கல் தூரத்திலிருக்கிறது.

தேவாரப் பாடல்களில் கடல்கரைத் தலமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது கோயிலிலிருந்து கடல் அரை கல் தொலைவிலிருக்கிறது. அது ஒற்றி (தள்ளி)ப் போய் விட்டதால் ஒற்றியூர் என்ற பெயர் வந்ததென்றும் நகைச்சுவையாகக் கூறுவர். ஒற்றி வைக்கப்பட்ட ஊர் ஒற்றியூர் என்பர். ஆதிபுரி யென்ற பெயரும் இத்தலத்துக்குண்டு. "வாவி யெலாம் தீர்த்தம் மணல் எல்லாம் சிவலிங்கம்" என்று பட்டினத்தார் போற்றிய தலம்.

திருவொற்றியூர்
சுந்தரமூர்த்தி சுவாமி
திருக்கல்யாண
மண்டபம்

இறைவனுடைய திருக்கோயில் நான்கு நீண்ட தேரோடும் தெருக்களின் நடுவே இலங்குகின்றது. பெரிய, பழைய கோயில்; கிழக்கு நோக்கியது; கோயில் வாயிலைக் கோபுரம் அணிசெய்கிறது. கோபுரத்துக் கெதிரில் அழகிய பதினாறுகால் மண்டபம் இருக்கிறது. அதற்கு வடக்கே திருக்குளம் உள்ளது. கோபுர வாயிலுக்குச் சரி நேராக இறைவன் சந்நிதி இல்லை. வாயிலினுள்ளே நுழைந்ததும் இடதுபுறம் கொடிமரங்கள், பலிபீடம், நந்தி, சிங்கம் முதலியவை காணப் படுகின்றன. அருகே ஜகந்நாதர், ஜகதாம்பிகை இவர்களின் தனிக்கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. அதன் பின்புறம் யாக சாலையுள்ளது. கிழக்கு மதிலையொட்டி சூரியன், மூவர், சுந்தரர்-சங்கிலியார், சகஸ்ர லிங்கம், நாகர் இவர்களுடைய சந்நிதிகள் மேற்கு நோக்கியிருக்கின்றன. வெளிப்பிர காரத்தை வலம் வரும்போது தென்புறம் இருபத்தேழு இலிங்கங்கள் ஒரே வரிசையில் ஒரு மண்டபத்திலிருக்கின்றன. இவை 27 நட்சத்திரங்களைக் குறிக்கும் என்பர். அம் மண்டபத்திற்கு வெளியில் இடுப்பளவு மண்ணில் புதைந்திருக்கும் அழகிய காளியுருவம் இருக்கிறது. கழுத்தில் தலைகள் மாலையாக இருக்கின்றன. ஒரு காதில் குண்டலம்போல ஒரு மனித உருவமே தொங்குவது அவசியம் பார்க்கத்தக்கது.

பின்னர் மேற்குப் பிரகாரம் செல்லும் போது தென்கோடியில் ஒரு உயரமான மேடைமேல் ஆவுடையார் இன்றி ஒருபெரிய இலிங்கம் இருக்கிறது. அதற்கு வடக்கே அருணசலேசுவரர், ஜம்புகேசுவரர், நாகர்கள், காளத்தீசர் இவர்களுடைய தனிச்சந்நிதிகள் கிழக்குப்பார்க்க இருக்கின்றன. மேற்குப்பிரகாரத்திலுள்ள அத்திமரத்தைத் தல விருட்சம் என்பர். இவைகளையடுத்து சொக்க நாதர் மீனாட்சியம்மை இவர்களின் தனிக் கோயிலும் உள்ளது. இதைக்கடந்து சென்றால் வடமேற்கு மூலையில் கிழக்கு நோக்கி ஆதிபுரீசர்கோயில் இருக்கிறது. இவ்விறைவன் பெயரைத் திருவொற்றீசர் என்றும் கூறுகின்றனர். அண்மையில் திருவொற்றியூரானடிமை—இராமசாமிப் பிள்ளை என்பவரால் திருப்பணி செய்யப்பட்டது. முன் மண்டபத் தூண்களிலும், வாயிலின் இருபுறத்தும் பிரம விஷ்ணுக்கள், சனகாதி நால்வர், தும்புரு நாரத முனிவர்கள், நந்திகேசுவரர் பிருங்கி முனிவர், நால்வர், பட்டினத்தார், பத்திரகிரியார், கணபதி, முருகன் இவர்களின் உருவங்கள் அற்புதச் சிற்ப வேலைப் பாடுடையனவாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. இந்த கோயிலின் உட்பிரகாரத்தின் தென்புறம் விநாயகர், இராமநாதர், அறுபத்துமூவர் (உற்சவர்) இவர்கள் எழுந்தருளியிருக்கின்றனர். வடபுறம் முருகன், பர்வத வர்த்தினியம்மை இவர்கள் காட்சி தருகின்றனர்.

ஆதிபுரீசரை வழிபட்ட பின் வடக்கு வெளிப் பிரகாரத்தில் வந்தால் பைரவர் தனிக்கோயில் தெற்கு நோக்கியிருப்பதைக் காணலாம். ஆதிபுரீசரின் சந்நிதிக்கு நேரே திருவொற்றீசர் பாதமுள்ள மண்டபம், மகிழ மரம் இவைகள் இருக்கின்றன. இந்த மகிழ மரத்தினடியில்தான் சுந்தரர் சங்கிலியாரைப் பிரிவதில்லையென்று வாக்குறுதி செய்தனர். இதற்கு வடபால் வசந்தமண்டபம், திருக்குளம், கலியாண மண்டபம் இவைகள் உள்ளன. கலியாண மண்டபத்தில் மான் மழுவுடனும், உவமையம்மையின் கையைப் பிடித்துக்கொண்டு கலியாண கோலத்தில் அழகிய உற்சவமூர்த்தியாக இறைவன் எழுந்தருளியிருக்கிறார். இந்த மண்டபத்திற்குக் கிழக்கே வெளிப் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் அம்பிகை கோயில் கொண்டெழுந்தருளியுள்ளாள். அழகும் அருளும் நிரம்பிய திருவுருவம் எல்லோருடைய மனத்தையும் கவரும் தன்மையில் இருக்கிறது. தேவியின் திருப்பெயர்கள் வடிவுடையம்மை, திரிபுர சுந்தரி என்பன. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கி இருக்கிறது. இருமருங்கிலும் விசுவ நாதர் - விசாலாட்சி, சண்டிகேசுவரி சந்நிதிகள் உள்ளன. அம்பிகை சந்நிதியில் மலையாளத்து அந்தணர் பூசை செய்கின்றனர்.

அம்பிகையை வழிபட்டபின்னர் கிழக்கு வெளிப் பிரகாரத்திலிருந்து மூலத்தானத் திற்குப் போகு முன்பு கோபுர வாயிலுக்கு நேரே கிழக்கு நோக்கி மூன்று சந்நிதிகள் இருக்கின்றன. வடகோடியில் மகிழமரத்தின் அருகே குழந்தையீசர் எழுந்தருளியிருக்கின்றனர். இவரே சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக்காட்சித் தந்தவர். இவர் சந்நிதிக்குத் தெற்கே ஒரே வரிசையில் பாலசுப்பிரமணியர்,

முதல் அனுக்கிரகவிநாயகர் இவர்கள் சந்நிதிகள் உள்ளன. இவர்களைத் தொழுத பின் தெற்குப்பிரகாரத்திலுள்ள வாயில் வழியாக உள்ளே நுழையவேண்டும். எதிரில் நடராஜர் சபை. அதன் முன் மண்டபத்து நேரே கிழக்குநோக்கி இறைவன் சந்நிதி இருக்கிறது. இறைவனுடைய திருப்பெயர்கள் வன்மீக நாதர், புற்றிடங்கொண்டார், படம்பக்கநாதர், எழுத்தறியும் பெருமான் என்பன. மூலத்தானம் சுயம்புலிங்கமூர்த்தி; புற்றுருவாயது. அதனுலேயே, வன்மீக நாதர், புற்றிடங்கொண்டார் என்ற பெயர் ஏற்பட்டது. கார்த்திகைப் பௌர்ணமி, அதையடுத்து இரண்டு நாட்கள் புற்றின்மேலுள்ள கவசம் எடுக்கப்படும். அப்போது புற்றுருகவேயுள்ள மூர்த்தியைத் தரிசிக்கலாம். ஒரு காலத்தில் பஞ்சம் ஏற்பட்டபோது, சோழமன்னன் எல்லாக் கோயில்களின் படித்தரத்தைக் குறைத்துக் கட்டளை ஓலை அனுப்பினன். இவ்வூர் இறைவன் ஒருவருமறியாதபடி அவ்வோலையில் "ஒற்றியூர் நீங்கலாக மற்றையூர்க்கிக்கட்டளை" என்று எழுதினர். ஆதலின், எழுத்தறியும் பெருமான் என்ற பெயர் வழங்கலாயிற்று.

கர்ப்பக்கிரகத்தைச்சுற்றி உட்பிரகாரம் உண்டு. தென்கிழக்கு மூலையில் கலியநாயனர் திருவுருவம் இருக்கிறது. அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான இவர் இத்தலத்தே திருவிளக்குத் தொண்டு செய்து பேறுபெற்றார். இவர் சந்நிதியை அடுத்துஅறுபத்துமூவர் மூலவர் எழுந்தருளியுள்ளனர். மேற்கு உட்பிரகாரத்தில் ஆதிசங்கரர், முருகன், இலிங்கங்கங்கள் முதலிய உருவங்கள் இருக்கின்றன. வடக்கு உட்பிரகாரத்தில் வடக்கு நோக்கி சிறிது பள்ளமான இடத்தில் வட்டப்பாறை அம்மன் சந்நிதி இருக்கிறது. ஆதிசங்கரர் யந்திரஸ்தாபனம் செய்ததாகச் சொல்லப்பெறுகின்றது. வட்டமான பாறையொன்றும் இந்த சந்நிதியில் இருக்கின்றது. புற்றிடங்கொண்டார் சந்நிதியிலிருந்து வரும்போது நடராஜ சபை மண்டபத்தின் கீழ்புறம் மேற்கு நோக்கி குணலய விநாயகர் சந்நிதியிருக்கிறது. மறுபடியும் தென்வாயில் வழியாக வந்தால் மண்டபமும், தியாகேசர் சந்நிதி கிழக்கு நோக்கியும் இருப்பதைக் காணலாம். இறைவனுக்கு மாணிக்கத் தியாகர் என்று பெயர். சப்தவிடங்கக் கணக்கில் சேராத தியாகராஜ ஸ்தலம் இது. இந்த சந்நிதியின் பின் பக்கம் யோகத்திலமர்ந்திருக்கும் திருவுருவத்தைப் பார்க்கலாம். கௌரீசர், கௌடீசர் என்று கூறுகின்றனர். இலகுலீசர் என்ற சமயத்தலைவர் என்றும் சொல்வர். அவர் பக்கத்தில் ஆதிசங்கரர் வீற்றிருக்கின்றார்.

இத்தலத்தின் தீர்த்தங்கள் கோயிலுக்குள்ளிருக்கும் பிரமதீர்த்தமும், வெளியேயுள்ள வாசுகிதீர்த்தமும் ஆகும். மேற்குப் பிரகாரத்திலுள்ள அத்திமரம் தலவிருட்சம். மகிழமரமும் தலவிருட்சம் என்று கூறுகின்றனர். இத்தலத்தில் மாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. ஒன்பதாம் நாள் மகத்தன்று சுந்தரர்-சங்கிலியார் திருமணம்,இறைவன் காட்சியருளல் மிகச் சிறப்பாக நடைபெறும். பஞ்சமூர்த்திகளும் அறுபத்துமூவருடன் காட்சியளிப்பர். இதைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டுகளிப்பர். இதற்கு மகிழடிசேவை என்று சொல்லுவர்.

கோயில் மிகவும் பழைமையானது. அமர்ந்திருக்கும் சிங்கங்களுடைய தூண்களின் அடிப்பாகங்கள் காணப்படுகின்றமையின் பல்லவர் காலத்திலேயே கோயில் அமைந்திருக்கவேண்டுமென்று தெரிகிறது. கோயிலின் கர்ப்பக்கிரகத்தின் மேலுள்ளது கஜப்ருஷ்ட விமானம் அதாவது யானையின் பின்புறம் போன்ற அரைவட்ட வடிவமானது. கர்ப்பக்கிரகச் சுவர்களின் மாடங்களிலுள்ள கணபதி, தட்சிணமூர்த்தி, திருமால், பிரமன், துர்க்கை, திருவாயில் இருபாலரான துவாரபாலகர்கள், நடராஜ சபைக்கு முன் வலப்பக்கமுள்ள சண்டேசுரர்,நடராஜர் கர்ப்பக்கிரக வடக்குச் சுவரில் இருக்கும் ஏகபாதமூர்த்தி, தியாகேசர் சந்நிதிக்குப் பின்புறமுள்ள கௌரீசர் இவ்வுருவங்கள் மிகவும் அழகிய சிற்ப வேலைப்பாடமைந்தவை.

திருவொற்றியூரில் சந்நிதியிலுள்ள பதினறுகால் மண்டபத்துக்குத் தெற்கில் வடக்கு நோக்கி தட்சிணமூர்த்தி கோயில் இருக்கிறது. தென்முகக் கடவுள் வடக்கு பார்க்க அமர்ந்திருக்கும் பெரிய உருவம். இதையும் இங்குள்ள பஞ்சமுக விநாயகரையும் அவசியம் பார்க்கவேண்டியவை. யோகீசுவரர் என்ற துறவியார் 50,60 ஆண்டுகட்கு முன்பு அமைத்தனர் என்பர். சந்நிதித்தெருவின் கீழ்

கோடியில் வடக்கு நோக்கி ஒரு சிவாலயம் இருக்கிறது. கோயில் வாயிலில் கோபுரமும் உண்டு. இறைவன் திருநாமம் அகத்தீசர்; தேவியின் திருப்பெயர் அகிலாண்டேசுவரி. பட்டினத்தடிகளாரின் கோயில் கடற்கரையருகே இருக்கிறது. அப்பர் சுவாமிகளுக்கும் ஒரு கோயில் உள்ளது.

திருவொற்றியூர்த் தலத்தைப்பற்றி பல நூல்களில் குறிப்புக்கள் இருக்கின்றன. திருஞானசம்பந்தர் பதினொரு பாடல்களையுடைய ஒரு பதிகம் ஓதியுள்ளார். ஒரு பாசுரத்தில் இறைவனை ஆதிமூர்த்தி என்றழைக்கிறார். "பரவினர் பாவம் எல்லாம் பறையப்படர் பேரொளியோடு ஒருவனாய் நின்ற பெம்மான் உறையும்மிடம் ஒற்றியூரே" என்கிறார்.

திருநாவுக்கரசர் இத்தலத் திறைவனை ஐந்து பதிகங்களால் வழிபடுகிறார். "மெய் தருஞானத்தியால் கள்ளத்தைக் கழிய நின்றார் காயத்துக்கலந்து நின்று உள்ளத்துள் ஒளியுமாகும் ஒற்றியூருடைய கோவே" என்கிறார். "மனம் எனும் தோணிபற்றி" என்ற பாடலை அறியாதார் இல்லை. "அலைகொள் முந்நீர் மல்லல் திரைச்சங்க நித்திலங் கொண்டு வம்பக்கரைக்கே ஒல்லைத்திரை கொணர்ந்து எற்று ஒற்றியூருறை உத்தமனே" என்றும் "வாரிகுன்று ஆலக்கரும்பொடு செந்நெற்கழனி அருகணைந்த சோலைத் திருவொற்றியூரை யெப்போதும் தொழுமின்களே" என்றும், இயற்கை யெழிலைப் பேசுகிறார். "உமையாளையும் பாகம் வைத்த ஒன்றரைக் கண்ணன் கண்டீர் ஒற்றியூருறை உத்தமனே" என்று நகைச்சுவைபடச் சொல்கிறார். "ஒற்றியூர வொருசடை வைத்தவன் ஒற்றியூர்த்தொழ நம்வினை ஓயுமே" என்கிறார். "விடுங்கலங்கள் நெடுங்கடலுள் நின்று தோன்றும் திரைமோதக் கரையேறிச் சங்கமூரும் திருவொற்றியூர்" என்று கடற்கரைக் காட்சியைக் கூறுகிறார்.

சுந்தரர் வரலாற்றுத் தொடர்புடைய இத்தலத்திறைவன்மேல் பாடியிருக்கும் இரண்டு பதிகங்கள் மனத்தை உருக்குவன. சங்கிலியாரை மணக்கு முன் அவருக்குச் செய்துகொடுத்த சூளுரைக்கு மாறாக ஒற்றியூர் எல்லையைத்தாண்டியவுடன் சுந்தரர் இரண்டு கண்களையும் இழந்தார். அவர் ஊர் எல்லை தாண்டிக் காலடிவைத்த இடம் இப்போதும் காலடிப்பேட்டை என்று வழங்குகிறது. "மூன்று கண்ணுடையாய் அடியேன் கண்கொள்வது கணக்கு வழக்காகில் ஊன்று கோலெனக் காவதொன்று அருளாய்" என்றும், "முகத்திற் கண்ணிழந்து எங்ஙனம் வாழ்கேன் முக்கணா முறையோ" என்றும் மனநொந்து பாடுகிறார். "உலகிலுள்ளார் வினைகள் தீர்ப்பான் உலவும் திரைவாய் ஒற்றியூரே" என்கிறார்.

பட்டினத்தடிகள் திருவொற்றியூர் ஒருபா ஒருபது என்ற அந்தாதித்தொடையாக அமைந்த பத்துப்பாடல்களை அருளியுள்ளார். "இருநில மடந்தை இயல்பினின் உடுத்த பொருகடல் மேகலை முகமெனப் பொலிந்த ஒற்றிமாநகர் உடையோய்" என்று அழகாகத் தொடங்குகிறார். திரு ஏகம்பமுடையார் திருவந்தாதியில் "வன்தேரவன் திருவிற் பெறும் பேறுமதில் ஒற்றியூர்" என்று கூறுகிறார்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனர் தமது க்ஷேத்திரு வெண்பாவில்,

தஞ்சாக மூவுலகும் ஆண்டு தலையளித்திட்
டெஞ்சாமைபெற்றிடினும் யான்வேண்டேன்-நஞ்சங்
கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண் டிருக்கப் பெறின்

என்று பாடியிருக்கிறார்.

சேக்கிழார், சம்பந்தர் புராணத்தில் "தொண்டரொடும் ஒற்றிநகர் காதலித்து அங்கினிதுறைந்தார் உலகுய்ய உலவாத ஞானம் உண்டார்" என்று சம்பந்தர் திருமயிலைக்கு எழுந்தருள்வதற்கு முன்பு திருவொற்றியூரில் அடியார்களுடன் தங்கியிருந்தார் என்று கூறியிருக்கிறார். திருநாவுக்கரசர் புராணத்தில் "எழுதாதமறை அளித்த எழுத்தறியும் பெருமானைத் தொழுது ஆர்வமுற நிலத்தில் தோய்ந்தெழுந்தே" என்று அப்பர் வழிபட்டதைக் கூறுகிறார். "வளங்கள் திருப்பதி (திருவொற்றியூர்) அதனில் பல நாள்கள் வைகினர்" என்றும் சொல்கிறார். ஏயர்கோன் கலிக்காமர் புராணத்தில் சுந்தரர், "புவியுட் சிவலோகம் போலத் திங்கள் முடியார் அமர்ந்த திருவொற்றியூரைச் சென்றடைந்தார்" என்கிறார். "ஏட்டுவரியில் 'ஒற்றியூர் நீங்கல்' என்ன எழுத்தறியும் நாட்டமலருந் திருநுதலார்" என்று இறைவன் நிகழ்த்திய

அற்புதத்தைக் குறிக்கிறார். சுந்தரர் சங்கிலியார் திருமணம், இவர்கள் பிரிவு முதலியவற்றைப் பல பாடல்களில் விரிவாகக் கூறியுள்ளார். கலியநாயனர் புராணத்தில் "காருலவும் மலர்ச்சோலைக்கன்னி மதில் புடைசூழ்ந்து தேருலவும் நெடு வீதி சிறந்த திருவொற்றியூர்" என்று போற்றியிருக்கிறார்.

அருணகிரிநாதர் இத்தலத்திற்கு மூன்று திருப்புகழ்ப் பாடல்களை இயற்றியுள்ளனர். இரண்டு பாடல்களில் திருவொற்றியூர் என்றும், ஒருபாடலில் ஆதிபுரி என்றும் தலத்தைக் குறிக்கிறார். "திருவளரும் ஆதிபுரி யதனில் மேவுசெய முருக தேவர் பெருமாளே" என்றும், "திருவொற்றி யுருமருவுநகரொற்றியுர் வாரிதிரை அருகுற்றிடும் ஆதி சிவன் அருள்பாலா" என்றும் சொல்கிறார்.

வடலூர் இராமலிங்க சுவாமிகள் தியாகப் பெருமான் தோத்திரம், எழுத்தறியும் பெருமான்மாலை முதலிய பல பாடல்களை இயற்றியுள்ளார்கள்.

இப்பதிக்குள்ள தலபுராணத்தில் நந்திகேசுவரர். திருமால், திருமகள், ஆதிசேஷன், இந்திரன், ரோமசமுனிவர், அகத்தியர் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்றதாகக் கூறப்படுகிறது.

மறைமலையடிகளார் திருவொற்றியூர் முருகர் மும்மணிக்கோவை என்ற அரிய நூலை யாத்துள்ளனர்.

அரிய செய்திகள் நிறைந்த அதிகமான கல்வெட்டுக்களுடைய கோயில்களில் திருவொற்றியூர் ஒன்று. அரசாங்கத்தார் சுமார் 200-க்கு மேலான கல்வெட்டுக்களை இக் கோயிலிலிருந்து படியெடுத்துப் பதிவு செய்திருக்கின்றனர். அவைகளில் கண்டவற்றைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்ளுதல் மிகவும் பயனுடைத்தாகும். கல்லெழுத்துக்கள் தமிழ், கிரந்தம், சமஸ்கிருதம் இம் மொழிகளில் இருக்கின்றன.

ஜயங்கொண்ட சோழ மண்டலத்து விக்கிரம சோழ வளநாடு என்ற புழற்கோட்டத்துப் புழல் நாட்டிலுள்ள திருவொற்றியூர் என்று கல்வெட்டுக்களில் காணப்பெறுகிறது. ஆதிக்கிராமம், ஒற்றி மூதூர் என்ற பெயர்களும் குறிக்கப்பெறுகின்றன. விஜயநகர ஆட்சியில் சந்திரகிரி இராஜ்யத்திலுள்ள திருவொற்றியூர் என்று பேசப்படுகிறது.

திருவொற்றியூர் உடையமகாதேவர், திருவொற்றியூருடைய நாயனர், படம்பக்க நாயகதேவர், திருவொற்றியூருடைய தம்பிரானர், திருவொற்றியூர் ஆழ்வார் என்று இறைவன் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. தேவியின் பெயரைத் திருக்காமகோட்டத்து நாச்சியார் என்று அறிவித்திருக்கின்றது. ஆளுடைய நாச்சியார் என்று காணப்படுவது ஆளுடைய நம்பியின் மனைவியான சங்கிலி நாச்சியாரைக் குறிக்கும்போலும்.

குமாரசுவாமி தேவர் (முருகன்), திருவட்டப் பிறைப்பிடாரியார், கரணைவிடங்கதேவர், படம்பக்கதேவர், க்ஷேத்திரபாலதேவர், சூரியதேவர், அரிஞ்சிசுவரமுடையார், கம்பீசுவரமுடையார், விடேல்விடுகீசுவரர், துர்க்கையார், அணுக்கப்பிள்ளையார், சோழ மாலீசுவரர், வீரநரசிம்மேசுவரமுடையார் இவர்கள் கோயில்கள் இருந்ததாக அறிவிக்கின்றன. கோயிலில் வியாகரணதான வியாக்கியான மண்டபம், இராஜராஜன் மண்டபம் இருந்ததாகவும் தெரிவிக்கின்றன.

திருவொற்றியூரில் திருநாராயணமடம், இராஜராஜ சோழன் மடம், குலோத்துங்க சோழன் மடம், திருஞானசம்பந்தர் மடம், நந்திகேசுவர மடம், அங்கராயன் மடம், கீழை மடம், இராஜேந்திர சோழன் மடம் முதலியன இருந்தன. குளத்தூர்க்குழந்தையாண்டார் மடம் என்று ஒன்றும் குறிக்கப்பெறுகிறது.

ஜயசிங்கக்குலகாலப் பெருந்தெரு, சங்கரப்பாடி யென்ற இராஜராஜப் பெருந்தெரு, சூரகுளாமணி பெருந்தெரு, நாற்பத்தெண்ணுயிரப் பெருந்தெரு (சிற்பி, தச்சர், கருமார் குடியிருப்பு), திரிபுவன சுந்தரப்பெருந்தெரு முதலியவை திருவொற்றியூரில் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

பெரியமுல்லைவாயில், மணலி, கடப்பாக்கம், அம்பத்தூர், வில்லிபாக்கம், சிற்றூர், குளப்பாக்கம், சென்னிநல்லூர், குறட்டூர், வெள்ளிவாயில், என்னூர், பையூர், காவனூர் சிறுவப்பேடு, திருக்கானப்பேரூர் (காளையார் கோயில்), ஆதம்பாக்கம், புலியூர், பரித்திக்குடி, வைக்காட்டூர், புழல், எழுத்தறிவார் நல்லூர், குளத்தூர், காட்டுப்பாக்கம், எழுமூர் (எழும்பூர்), பெருங்கரை, ஆனுங்கூர், பழுவூர், பாவனம்பாக்கம், செம்பூர், திருநாவ

158342

லூர், இறையன்சேரி, புன்னைவயல், உழலூர் (செம்பியன் கருப்பூர்), பாடியாடும் பெருமாள்நல்லூர், கூகூர், அரசூர், மணக்குடி, மயிலாப்பு (திருமயிலை), எட்டியார்குறிச்சி, கஞ்சனூர், சேற்றுப்பேடு (சேத்துப்பட்டு), சேலைவாசல் (சேலையூர்) முதலிய ஊர்களின் பெயர்களைக் காண்கிறோம். இவற்றில் பல சென்னை, திருவொற்றியூரை அடுத்திருப்பது நோக்கத்தக்கது.

சதுரானனபண்டிதர், சோம சித்தாந்தம் வக்காணிக்கும் வாகீசுவரபண்டிதர் இவர்களைப்பற்றியும் சொல்கின்றன. ஞானமிர்தம் இயற்றிய வாகீசுசராக இருக்கலாம் என்பது ஆராய்ச்சியறிஞர் கருத்து.

அருண்மொழித்தேவன் நாழி என்ற முகத்தலளவை, மதுராந்தகன்மாடை என்ற பொன்நிறை, இராஜராஜன் என்ற நாணயம், வாசி (வட்டம்) படாதபணம், கரை, வேலி என்ற நில அளவு, நிலைபொலியூட்டு (நிலையாகவட்டிக்கு விடப்படும் முதல்) அமிர்தகணம் என்ற சபையார் முதலிய குறிப்புக்களும் உள்ளன. பிள்ளையாதவராயன் பொன், திரைக்காசு, ஆசுவிகள்காசு, குடிக்காசு, கார்த்திகைக்காசு, இனவரிக்காசு, வெட்டிக்காசு, கண்காணிப் பணம், குற்றதண்டம் முதலிய வரிகள் அக்காலத்திலிருந்தன. அறுபத்துமூவர் உருவங்கள், திருத்தொண்டத்தொகை, திருவெம்பாவை, தேவாரப் பதிகங்கள் முதலியவை பற்றியும் கல்லெழுத்துக்கள் தெரிவிக்கின்றன. கோயில் காரியம் பார்ப்பவர்கள் 139 பேர்கள் இருந்ததாகவும், அவர்களின் கடமைகள், ஊதியம் முதலியனபற்றிய திட்டங்களையும் காண்கிறோம்.

ஆதொண்டைச் சக்கரவர்த்தி கோயிலை முதன்முதலில் நிறுவினன் என்று கூறப்படுகிறது. பின்னர் பல மன்னர்கள் கோயில்கள், மண்டபங்கள் இவைகளை யெழுப்பினர்கள். சோழ மன்னர்களான இராஜராஜன் I, இராஜராஜன் II, இராஜேந்திரன் I, குலோத்துங்கர் I, II, III, பராந்தகன் (கி. பி. 905–47), கண்டராதித்தன், உத்தமசோழன், இராஜராஜன் III, இராஜாதிராஜர் I, II, அதிராஜேந்திரன், வீரராஜேந்திரன் I; கங்க பல்லவ மன்னர்-விஜயகம்பவர்மன், கோவிஜய அபராஜிதவர்ம போத்தரையன், நிருபதுங்கவர்மன்; பாண்டிய மன்னரான சுந்தரபாண்டியன் III, ஜடாவர்ம பாண்டியன் (கி. பி. 1251—64); விஜயநகரமன்னர்-தேவராயர் II, கம்பண்ண உடையார் II, அரிகரன் II, குமாரகம்பண்ண உடையார், சாயன உடையார்; இராஷ்டிரகூட கன்னரதேவன் (கிருஷ்ணன் III), மதுராந்தக பொத்தப்பிசோழன், ஸ்ரீரங்கநாத யாதவரான் முதலிய பல நாட்டு மன்னர்களின் காலத்தவை அக்கல்லெழுத்துக்கள். பராந்தகன் (கி. பி. 905—47) கல்வெட்டு மிகப் பழமையானது.

பெரும்பாலான கல்வெட்டுக்கள் கோயிலில் பூசனை நடைபெற, விளக்கெரிக்க, விழாக்கள் நடத்த நிலம், பொன், ஆடு, பசு, காளை, எருமை, நெல் முதலியவைகள் கொடுத்ததைப்பற்றிக் கூறுகின்றன. மற்றும் காணப்படும் அரிய செய்திகள் கீழே தொகுத்துத்தரப் பெறுகிறது :—

நெல் குற்றுவதற்கு ஏற்பாடு; ஆரிய தேச மேகலாபுரத்து ஆரியம்மை கட்டிய இராஜராஜ சோழன்மடம்; குலோத்துங்கன் I இராஜராஜன் மண்டபத்திலமர்ந்து கோயில் காரியங்களை ஆராய்தல்; இராஜராஜன் II திருமகிழமரத்தின்கீழ் பங்குனி யுத்திரம் ஆரும் திருநாளில் ஆளுடையநம்பி ஸ்ரீபுராணம் (சுந்தரர் வரலாறு) கேட்டல்; குலோத்துங்கன் III ஆனித்திருவிழா ஆரும் நாளில் கோயில் நிலங்கள் பாழாகக் கிடந்தவற்றைத் திருத்த ஏற்பாடு செய்தல்; கோயில் தேவரடியாள் சாணி ஒற்றி ஆழ்வி என்பாள் விளக்கெரிக்க முப்பத்திரண்டு பசுக்கள் வழங்கல்; இராஜேந்திரன் I (கி. பி. 1012—42) காலத்தில் இரவி என்ற வரவீரசோழ தட்சன், சதுரானன பண்டிதர் சொன்னபடி கர்ப்பக்கிரக விமானத்தைக் கட்டல்; கோயில் கணக்குகளை அரசாங்க அதிகாரிகள் சரிபார்த்தல்; படம்பக்க நாயகப்பேரளம் என்ற உப்பளம் வழங்கல்; கோயிலில் வேலை பார்ப்பவர்கள் விளக்கெரிக்க தானம் செய்தல்; இராஜேந்திரன் I பிறந்த நட்சத்திரமான மார்கழித் திருவாதிரையன்று இறைவனுக்கு நெய் முழுக்குச்செய்வித்தல்; திருவிழாக்கள், திருப்பள்ளித்தாமம் (பூமாலைகள்) இவைகளுக்கு ஏற்பாடு செய்தல்; இராஜேந்திர சோழன் மடத்தில் மாகேசுவரருக்கு உணவளித்தல்; தேவாரம், திருவாசகத் திருவெம்பாவை ஓதுவார்க்கு நிலம் விடல்; வேதம்

வல்ல மறையோர், சிவயோகிகள் இவர்களுக்கு அமுது படைத்தல்; விராடதேசத்துத் தலைக்கிராமத்தைச் சேர்ந்த நிம்பலா தேவி அம்மையார் கோயிலில் விளக்கெரிக்க 90 ஆடுகள் வழங்கல்; நக்கன்கோதை என்ற காஞ்சிபுர நங்கை நெல் வட்டிக்குப் பொன்கொடுத்து நெல்லை புது யீட்டுவிழாவுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தல்; மாசிமக விழா, மார்கழித் திருவாதிரை விழா நடத்த பொருள், பொன், நிலம் அளித்தல்; வக்காணிக்கும் மண்டபத்திலமர்ந்து அரச அதிகாரி இராஜேந்திர மூவேந்த வேளார் கோயில் காரியங்களை விசாரித்து, குற்றதண்டம், நெல் முதலியவற்றைக் கொண்டு கோயில் ஊழியங்களைத் திட்டம் செய்தல்; அம்பிகை கௌரிக்குத் தொண்டுகள் செய்ய 12 தேவரடியார்க்கு நிலதானம் கொடுத்தல்; அபராஜித மன்னனின் அரசி மகாதேவி அடிகள் விளக்குக்காகப் பொன் வழங்கல்; உத்தமசோழன் (கி. பி. 970—86) ஸ்ரீபலிதேவர் விக்கிரகம் எடுப்பித்து, எட்டுகாளங்கள் (ஊதுவாத்தியம்), தங்கப் பிடிபோட்ட சாமரைகள் வழங்கல்; நாள்தோறும் இரண்டு மகாவிரதியருக்கு உணவளிக்கப் பொன் வழங்கல்; கர்நாடக நவாப் அஜரத்தாவுத்கானின் (கி. பி. 1703—10) அமைச்சரான முத்தம்பி முதலியார் கோயிலில் பல அறங்களைச் செய்ய உல்லி வெங்கடேச செட்டியுடன் உடன்படிக்கை செய்துகொள்ளல்; நந்தவனம் காப்பாற்ற நிலமளித்தல்; திருவொற்றியூர்க் கோயிலுக்குள்ளிருந்த குலோத்துங்கசோழன் மடத்தில் 50 தொண்டர்களுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்தல்; வியாக்கிரணதான வியாக்கியான மண்டபத்தை துர்க்கையாண்டி நாயக்கன் கட்டுதல்; கோயில் பொருள்களைக் கையாடியவர்களுடைய நிலம், மனை இவைகளைப் பறிமுதல் செய்தல்; கோயிலில் திரிபுவன வீரன்சந்தி, கலியூர்க்கிழவன் சந்தி இவை நடத்த ஏற்பாடு செய்தல்; மூன்றும் இராஜராஜ சோழன் இராஜராஜ மண்டபத்தில் அமர்ந்து பதியிலார் பாடிய அகமார்க்கப் பாடல்களைக் கேட்டல்; உத்தராயணச் சிறப்புத் திருவிழா செய்தல்; திருவெண்காடு—சிவலோகநாதன் நடராஜபீடம் செய்தமைத்தல்; ஐந்நூற்றுத் தலைக்கோலி என்ற நடன மாது கோயிலுக்கு நிலம் கொடுத்தல்; படம் பக்கநாயகர் கற்கோயிலை வீரராஜேந்திரன் (கி. பி. 1063—70) கட்டுதல்; பள்ளித் தொங்கல் என்ற பதக்கம், தங்க ஓட்டுவட்டில், தங்கக்குழித்தட்டு, மேவாசி என்ற தங்கக்கதவு இவைகளை யளித்தல்; கோயிலில் விளக்கெரிக்க ஏற்பாடு செய்த இடையர்களுக்கு வரி தள்ளுபடி செய்தல்; திருநாவலூர் வணிகர் ஒருவர், திருவொற்றியூர் திருஞானசம்பந்தர் மடத்தில் மாகேசுவரர்களுக்கு உணவளிக்கச் செய்தல்; செக்காயம், மகமைப் பணத்தைக் கோயில் பழுதுபார்க்க உதவுதல்; வரி செலுத்தாத சபையாரைச் சிறையிலிட்டு, அவர்கள் நிலத்தை விற்றுக் கொடுத்த பின்னர் அரச அதிகாரிகள் விடுதலை செய்தல்; தேவரடியார், பதியிலார், இடபத்தளியிலார் இம்மூவகைப் பெண்களும் கோயிலில் திருவலகு, திருமெழுக்கு, தளிகை விளக்கு (மடைப்பள்ளி சுத்தம் செய்வது), அரிசி சுத்தம் செய்தல், சாமரை வீசுதல், திருவந்திக்காப்பு, சக்திக்குனிப்பம், அகமார்க்கம், வரிக்கோலம் என்ற மூவகை ஆடல் பாடல் நிகழ்த்துவது யார் யார் எந்த முறையில் எப்போது செய்யவேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்தல்; இன்னோரன்ன பலவுள.

மேலே சொன்னவற்றிலிருந்து திருவொற்றியூர்க் கோயில் மிகப் பழமையும், பெருமையும், மகிமையும் வாய்ந்த தென்றறிகிறோம்.

நறை மணக்குங் கொன்றை
நதிச்சடில நாயகனே
கறை மணக்குந் திருநீல
கண்டப் பெருமானே
உறை மணக்கும் பூம்பொழில்சூ
ழொற்றியப்பா வுன்னுடைய
மறை மணக்கும் திருவடியை
வாய்நிரம்ப வாழ்த்தேனே
—வடலூர் இராமலிங்க அடிகள்.

சாயாவனம்—ஸ்ரீ சாயாவனேசுவர சுவாமி கோயிலிலுள்ள ஸ்ரீ வில்லேந்திய வேலனுக்கு திருப்பனந்தாள் ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் ரூ. 450 மதிப்புள்ள மயில் ஒன்று 23-6-60-ல் செய்துவைத்து வழிபாடு செய்து சென்றார்கள்.

✳ நவதிருப்பதி அநுபவம் ✳

[திரு. K. பட்சிராஜன் B.A., B.L.]

எம்பெருமானுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள சம்பந்தம் ஒன்பது வகைப்படும் என்பர் பெரியோர். அவ்வொன்பதில் ஆண்டான் அடிமை (சேஷ சேஷி பாவம்) என்பது ஒன்று. அதாவது எம்பெருமான் நம் நன்மையையே கருதி ஆட்கொள்ளும் ஆண்டான். அவ்வாண்டான் நிலையில் அவன் நம்பால் செய்யும் செயல்கள் நம் பரிசிலனைக்கு உரியதன்று. அவனுடைய அச்செயல்கள் நம்முடைய அப்போதைய நிலையினின்றும் நம்மை மேம்படச் செய்வதற்காகத்தான் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். அச்செயல்கள் நமக்கு அப்போதைக்குத் துன்பம் விளைப்பதாகக் காணப்படினும் அவை நமது நன்மைக்கே என்ற நம்பிக்கையோடு அச்செயல்களுக்காக அவன்பால் நன்றியும் வேண்டும். இந்தத் தொடர்புதான்

"வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன்போல் மாயத்தால்
மீளாத்துயர்தரினும் வித்துவக் கோட்டம்மாநீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே"

என்ற குலசேகரப் பெருமான் பாசுரத்தில் வலியுறுத்தப் பெறுகின்றது. இக்கருத்துத் தான் முன் கூறிய 'ஒன்றும் தேவும்' என்ற நம்மாழ்வார் பதிகத்தில் முன்னே கூறப்பட்டது என்பது பெரியோர் கோட்பாடு. மருத்துவன் நோயாளியின் நோய் தீர்க்கும் காலே அவனே அங்கவீனனுக்கினுலும் அம்மருத்துவன்பால் நோயாளி வெறுப்புக் கொள்வதில்லை. அதுமட்டுமன்றி அவனிடம் மாருத நன்றியும் உடையவனுய் மேலும் தன் நோய் தீர்க்க அவனேயே நாடுகிறுன். நம் நோய் நீங்க நம்மை நாம் ஒப்படைக்கும் மருத்துவன் நம் நோய் தீரும்வரை நமது ஆண்டானே நாம் அவனிட்ட வழக்கில் நிற்கவேண்டிய அடிமைகளே. அதுபோல நம் பவநோயின் மருத்துவன் எம்பெருமான். "மருத்துவனுய் நின்ற மாமணிவண்ணு" என்று பெரியாழ்வாரும் பணித்தார். இவ்வுலகின் ஆன்மாக்கள் பல் சமய நோய்களிலே புக்குழல்கின்றவை அந் நோய்தீர அவனே நம்பி அவனுக்கு அடிமையாகி ஆட்செய்வதுதான் அவ்வான்மாவின் தன்மைக்கு அழகு என்ற உண்மையை இப்பதிகம் உணர்த்தும் என்பது அவ்வான்றோர்களின் அபிப்பிராயம்.

"பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மையோடு" "நண்ணுதார் முறுவலிப்ப நல்லுற்ருர் கரைந்தேங்க எண்ணுராத்துயர் விளைக்கும் இவை என்ன உலகியற்கை!" என்று இரங்கி ஏங்கினுர் ஆழ்வார். இந்நிலைமை உருமைக்காக அவனடியே பணிந்து தன் குறையை விண்ணப்பித்தார். அவனருளால் மதிநலம் பெற்ருர். இவ்வாழ்வில் ஆன்மா அனுபவிக்கும் இன்பமும், அதனுல் அனுபவிக்கப்படும் பொருள்களும் நிலையற்றவை இழிவானவை என்பதைக் கண்டார். இவ்விழிதகைமை நீங்கி நிலையான வாழ்வுபெற வகை எது என்று ஆராய்ந்தார். நிலையான வாழ்வு ஆன்மா இறைவனேயே துய்க்கப்படு பொருளாகக் கொண்டு அவனேத் துய்ப்பதே என உணர்ந்தார். அப்படித் துய்க்கும்போதும் தன்னுடைய தன்மை (ஆன்மாவின் சொரூபம்) கெடாமல் அனுபவிப்பது எப்படி என்று ஆராய்ந்தார். அத்தன்மைக்கு எதிராக இருப்பவைதான், தனது என்ற எண்ணங்களும், தனக்குச் சுதந்திரம் உளதாக எண்ணும் அவிச்சையும் என்று தெரிந்தார். மெல்ல மெல்ல அவற்றைக் கழித்தார். அவை கழியவே அவர் இறைவன்பால் கொண்ட பக்தி இறைவன்பால் காதலாக மாறுகின்ற தன்மையை உணர்கிறுர். ஆழ்வார் தன் தன்மை கெட்டு ஒரு உத்தம ஸ்த்ரீயின் மனேபாவம் அவருக்கு ஏற்படுகிறது. ஆழ்வார் பராங்குச நாயகியாகிறுர்.

"கந்தல் கழிந்தால் ஸர்வர்க்கும் நாரீணும் உத்தமையுடைய அவஸ்தை வரக்கட

வதாயிருக்கும்'' என்பது ஸ்ரீவசனபூஷண வாக்கியம். 'ஆன்ம சொரூபத்தை உள்ளபடி ஒளிவிடாதபடி அனாதிகாலம் அனுபவித்துப் போந்த வந்தேறியான அவிச்சை முதலிய தோஷம் இறையருளாலே வேர் முதல்மாயுமானால் எல்லா ஆன்மாக்களுக்கும் பெண்நலம் எல்லாவற்றாலும் குறைவற்று பெண்களில் தலைமையான பெரிய பிராட்டியாருடைய நிலை "தன்னடையே வரக்கடவதாயிருக்கும்'' என்பது இதன் பொருள்.

இந்த நிலை ஆழ்வார் மனத்திலே நிகழ்வது. அது முதலில் பலரறியத் தோன்றுகின்றது. உத்தமநாயகி நிலையாதலால் பிறர்க்கு மறையாக அது உள்ளேயே அடங்கி நிற்கிறது, குடத்துவிளக்குப்போல் யாவும் உள்ளிருந்து காணும் இறைவன் இதைக் கண்டான். அந்நிலையை வெளிப்படுத்தத் திட்டமிட்டான். கருடாரூடனாக ஆழ்வார் மனக்கண்முன்னே காட்சியளித்தான். உள்ளே அடங்கி நின்ற காதல் சட்டுமீறியது. பகவத் காமம் என்னும் மதம்பற்றிய, ஆழ்வாருடைய மனம் என்னும் மத்தயானை தறிகெட்டு நிறை என்னும் அங்குசத்தை நிமிர்த்துப் புறம்போந்து அவருடைய உள்ளக்கிடக்கையைப் பலரறிய வைத்தது. பக்தனுடைய பக்திக் காதலை வெளிப்படுத்தினான் ஒரு மாயத்தால். அதன் வசப்பட்டு அவர் படும்பாட்டைக் கண்டு கூத்தாடினான்.

குடத்து விளக்கேபோல் கொம்பன்னார் காமம்
புறப்படா பூந்தார் வழுதி—புறப்படில்
ஆபுகுமாலை அணிமலையில் தீயேபோல்
நாடறி கவ்வை தரும்

என்று முத்தொள்ளாயிரம் பேசும். அது போல கையும் திருவாழியுமாக உவணப் புள் மீதே மாயன் தோன்ற ஆழ்வார் காதல் பலரறிய வெளிப்பட்டது.

வந்தமாயன் நின்றானா? நின்றால் மாயன் என்ற பொருளற்றதாய்விடுமே. அவன் ஆழ்வார் மனத்தைவிட்டுப் போகிறான். ஆழ்வாரும் மானஸீகமாகவே அவனைப்பின் தொடர்கிறார். கடைசியில் குளந்தையில் அவனைப் பிடித்துவிடுகிறார். அங்கு அவனைக்கண்டு அவனழகிலே ஈடுபட்டுத் தன் உடைமையான பெண் நலம் யாவும் பறிகொடுக்கிறார். யாவும் இழந்துவறியராய் நின்றுவிழித்த ஆழ்வாரை அவருடைய தோழியரும் தாயரும் சூழநின்று வினவுகிறார்கள். அவர்களுக்கு விடையிறுப்பது போன்று எழுந்தது.

"கூடச் சென்றேன். இனிஎன்கொடுக்கேன்?
கோல்வளை நெஞ்சத்தொடக்கமெல்லாம்
பாடற்றொழிய இழந்து வைகல்
பல்வளையார் முன் பரிசழிந்தேன்

மாடக்கொடி மதில் தென்குளந்தை
வண்குடபால் நின்ற மாயக் கூத்தன்
ஆடல்பறவை உயர்த்த வெல்போர்
ஆழிவலவனை ஆதரித்தே''

என்ற பாசுரம்.

தோழியர் வினவுகிறார்கள் "எங்கடீ போனாய்? ஓ! எதையெல்லாம் கொடுத்துவிட்டாய். யாரிடம் இப்படிப்பரிபவப்பட்டாயடீ?'' என்று கேட்கும்போதே கைகளை இடித்துக் காட்டிக் கேட்கிறார்கள் அப்போது முன் கை நிறைய அவர்கள் அணிந்துள்ள வளையல்கள் குலுங்கிஒலிக்கின்றன. ஆழ்வார் தன் வெறுங் கைகளை நோக்கிக் கொள்கிறார். மெல்லப் பதிலிறுக்கிறார். "ஆ! அதுவா? பறவையொன்றின்மேல் வந்தான் அவன். பறவை பறக்கவில்லை. ஆடிக்கொண்டே வந்தது. என் மனவெளியிலே வையாளி வந்தது. வலக்கையிலே ஒரு வளையம் வைத்திருந்தான். அது அவன் கைக்கு ஒரு அணிபோல விளங்கிற்று. அவன் பால் ஈடுபட்டேன். கூட முயன்றேன். போய்விட்டான். ஆடிவந்த பறவை பறந்தது. விட்டேனா. என் மனோவேகத்தின் முன் அதன் வேகம் எம்மட்டு. கூடவே சென்றேன். குளந்தையில் பிடித்துவிட்டேன். அழகான ஊர். மாடமாளிகைகள் நிறைந்தது. மாடங்களின் மீது கொடிகள் பறக்கின்றன. அங்கே ஊரின் மேற்புறத்தே நின்றான். கிட்டினேன். அதற்குள் என் நெஞ்சும், நாணும், நிறையும் இவை என்னைவிட்டகன்றன. கையில் ஒருவளை கூட இல்லை. யாவும் என்னை விட்டு அவன்பால் சேர்ந்தன. யாவும் இழந்தபின் எதைக் கொடுக்க. எனவே ஒன்றுமற்றவறியளாய் குணபூர்ணைகளான உங்கள் முன்னே நிறைவளைக் கையரான உங்கள்முன்னே பரிசழிந்து நிற்கிறேன். அவ்வூரில் கொடிகள் பறக்கின்றனவே அவை எல்லாம் என்னைப்போல் அவனை ஆதரித்து வந்தவர்களை அவன் பரிசழித்த வெற்றிக்கொடிகள் தாம்போலும், நான் யாவுமிழந்து பரிசழிந்து நின்ற நிலையைக்கண்டு கூத்தாடுகிறான். மாயக்கூத்தன் என்ற பெயர்

தான் எவ்வளவு பொருத்தம்! யாவும் இழந்தேன். உண்மைதான். அதனால் என்ன? அந்த மாயக்கூத்தனை ஆதரித்துச் சென்று இன்னும் எதைத்தான் கொடுக்கமாட்டேன்? எதையும் கொடுப்பேன் உவப்போடு கொடுப்பேன் என்று பல்பொருள்படப் பதில் கூறுகிறார் ஆழ்வார்.

இப்படி மாயம் செய்து ஆதரம் பெருக வைத்துப் பின் பரிசழித்து அவ்வெற்றிக் கடையாளமாகக் கொடி பறக்கவிட்டான். அவர்கள் பரிசழிந்தமை கண்டு கூத்தாடினான். எனவே மாயக்கூத்தனானான் என்று பொருள் படவே

"ஸாதரரைப் பரிசழிக்கும் சேஷ்டித ஆச்சர்யம் குளத்தே கொடிவிடும்"

என்று ஆசார்ய ஹ்ருதயம் பேசும்.

ஆதரத்தோடு கூடினாரை பெண்களுக் கியல்பான நாண முதலியவற்றை அழிக்கும் ஆச்சர்யகரமான சேஷ்டிதம் திருக்குளந்தையிலே மாடக் கொடிகளாலே ப்ரகாசிக்கும் என்பது பொருள்.

தன்னைக்காக்க வல்லவன் காக்க உரியவன் ஈச்வரனே. அவ்விதம் அவனே காப்பு என்று அவனைச் சரணடைந்தபோது அவன் முகம் கொடாதே நம் முடைமையைப் பறித்து இழிவுபடுத்தினாலும் அவன் தான் நமக்குக் கதி என்ற நிலை மாறாது. நம்மை நாமே ரக்ஷித்துக் கொள்வது என்பது உத்தமநாயகிக்கு எடுத்ததல்ல. இன்னும் எதை வேண்டுமானாலும் அவன்பால் இழக்கக் கூசோம் என்று இப்பாசுரம் கூறும். இதையேதான். "தான் நோக்காது எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன் கோல் நோக்கி வாழும் குடிபோன்று, வித்துவக் கோட்டம்மா! என்பால் நோக்காயாயிடினும் நின்பற்றல்லால் பற்றிலேன்" என்று குலசேகர் கூறுவர். இரண்டும் இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையே உள்ள ரக்ஷ்ய ரக்ஷக ஸம்பந்தத்தையே கூறுவன என்பது சில பெரியோர்கள் அபிப்பிராயம்.

ஆழ்வார் என்ற பக்தர் பராங்குசநாயகியாகித் தன் பெண் நலமெல்லாம் பலர் காண இழந்து திருக்குளந்தை எம்பருமானிடம் தனக்குள்ள ஆராத காதலை வெளியிட்டமையைக் கண்டோம். இவரை இப்படிப் பரிசழித்து அவ்வெற்றி தோன்றக் கொடியெடுத்த பரமனின் உள்ள குதூகலமடைகின்றது. எக்காரணத்துக்காக இவ்வர்ச்சாவதாரம் எடுத்தானோ அது பலிதமாகின்றது என்ற உகப்பு அவனுக்கு. "சரி! நாம் எதிர் பார்த்த பலன் நமக்கு ஓரிடத்திலாவது கிட்டும் போலிருக்கிறது. நம்மை உள்ளபடி அறியக்கூடிய ஒரு ஆன்மாவைத் தேடி அலைந்தோமே. அது இப்போது திருநகரியிலே உருவாகின்றது. அன்று அவ்வான்மா குளந்தையிலுள்ள நம்வடிவில் மயங்கி தன் நலமெல்லாம் இழந்தது. எனினும் சோர்விலாது 'இனி என் கொடுக்கேன்?'' என்றல்லவா கூறிற்று அவ்வான்மா? அந்த ஆன்மா எப்படி உருவாகின்றது. விரைவில் பக்குவமடையுமா என்று பார்க்க வேண்டுமே'' என்ற எண்ணத்தோடு குளந்தையிலிருந்து பார்க்கிறானும் இறைவன். வந்தவன் அழகிய சோலை சூழ்ந்த திருப்புளிங்குடியை அணுகியதும் "நம்விடாய் தீர இங்கேயே சற்றுப்படுத்து அந்நாயகி எப்படிப் பக்குவமாகிறாள். பார்ப்போமே'' என்று சயனிக்கிறானும். கொஞ்சகாலம் கழியவும் அச்சயனத்தைவிட்டெழுந்து சற்றுத் தொலைபோய் வரகுணமங்கை என்ற தலத்திலே வீற்றிருந்து கவனிக்கிறானும். மீண்டும் சிலகாலம் போக எழுந்து ஸ்ரீவைகுந்தம் என்னும் தலம் போய் பராங்குசநாயகி துய்க்க உரியளாய்ப் பக்குவமானதும் மேல்விழுந்துபற்ற ஆயத்தமாய் நிற்கிறானும். இம்மூன்று தலங்களிலுள்ள மூன்று நிலைகளும் பரமன் பராங்குசநாயகி உருவாகி வருவதைக் காண ஆத்திரம் அடைந்ததைக் காட்டும் என்பது பூர்வாசாரியர்களின் கருத்து. அதனைத்தான் ஆசார்யஹ்ருதயம்

''போக்ய பாகத்வரை தெளிந்த சந்தைக்கு முன்னில் மூன்றிலும் ப்ரகடனம்''

என்று கூறிற்று. "பசிகனத்தவன் அன்னம் பக்குவமாவதற்கு முன்னே பதற்றத்தாலே அதற்கு அணித்தாக வந்து கிடப்பது இருப்பது நிற்பதாமாபோலே போக்யபூதரான ஆழ்வாருக்குப் பரமபக்தி என்ற பாகம் பிறக்குமளவும் அவனுக்குண்டான பதற்றம் தெளிந்த என்கிற சந்தைக்கு முன் சொன்ன "புளிங்குடிக்கிடந்து வரகுணமங்கை இருந்து வைகுந்தத்துள் நின்று" என்று கிடப்பது இருப்பது நிற்பதான திருப்புளிங்குடி, திரு

வரகுணமங்கை, ஸ்ரீவைகுந்தம் ஆகிற மூன்று திருப்பதிகளிலும் தெரியும்'' என்பது அதன் பொருள்.

தான் துய்க்க விழைந்த பொருள் எவ்விதம் பக்குவமாகிறது என்று பார்க்க வந்தவன் தான் அவ்விதம் பார்க்க வந்ததையும் ஆழ்வார்க்கு உள்ளத்திலே உணரக் காட்டுகிறான். அப்படி அவன்கொண்ட விழைவும் விரைவுமே ஆழ்வாரின் பகவத் காம உணர்வுக்கு உணவாக நின்று வளர்த்தன. இது அவர் பாசுரத்திலிருந்தே தெரிகிறது என்பதை மேலே பார்ப்போம். இம்மூன்று தலங்களிலும் எம்பெருமான் கொண்ட மூன்று நிலைகளும் ஒரே மெய்ப்பாட்டில் (அதாவது பொருளின் பக்குவம் காணத்துடிக்கும் நிலை) நிகழ்ந்தமையின் மூன்று நிலைகளையும் ஒரு சேரவைத்துப் "பண்டை நாளாலே" என்ற பதிகத்திலே ஆழ்வார் எம்பெருமானைப் போற்றுகிறார். பக்குவம் முதிர்ந்து தன் நாயகனோடு நேர்நின்று பேச மன உறுதி பெற்றுத் தன் நாயகி நிலைகெடாமல் நாயகனிடம் தனக்கும் பிறர்க்குமாகக் குறையிரக்கும் முறையில் அமைந்த இப்பதிகம் கற்றோர் படித்துக்களிக்க வேண்டியதொன்று. பக்தர்களோ பாடிக்கரைய வேண்டியதொன்று. இப்பதிகத்தை இனிக் காண்போம்.

(தொடரும்)

செய்திகள்

திருவாஞ்சியம்-ஸ்ரீவாஞ்சி நாதர் கோயிலில் ஆடிப்பெருவிழா 17-7-60 முதல் 27-7-60 வரை நடைபெற்றது.

ஸ்ரீவில்லிபுத்நூர்-ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தானத்தில் ஸ்ரீ ஆண்டாள் திரு ஆடிப்பூர மஹோற்சவம் 17-7-60 முதல் 27-7-60 வரை நடைபெற்றது.

மேலூர்-ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயிலில் 9-7-60-ல் வருஷாபிஷேகம் நடைபெற்றது. அன்று இரவு அம்பாள் இரத வீதியில் மங்களவாத்தியத்துடன் சுற்றி கோயிலில் விசேஷ வழிபாட்டுடன் முடிவுற்றது.

மணவாள நல்லூர்-ஸ்ரீ கொளிஞ்சியப்பர் கோயில்—ஸ்ரீ ஏ. கே, இராஜா என்பவர் சுமார் இரண்டரை ஆண்டுகள் கண்பார்வை இழந்து கஷ்டப்பட்டு கடைசியில் இக்கோயிலில் வந்து தங்கியிருந்தார். 21-6-60 அன்று ஸ்ரீ கொளிஞ்சியப்பர் சுவாமிக்கு பூஜை நடக்கும்போது சுவாமியைத் தரிசிக்க நினைத்த ஷெ ஸ்ரீ ஏ. கே-இராஜா என்பவருக்கு கண்பார்வை கிடைத்தது.

திருநாகை-ஸ்ரீ சௌந்தர்யராஜப் பெருமாள் கோயிலுக்குள் தனிக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆண்டாள் பிரமோற்சவம் 18-7-60 முதல் 28-7-60 வரை நடைபெற்றது.

திருவஞ்சைக்களத்தில் சேரமான் நினைவு நாளாகிய 31-7-60 அன்று அன்னம் பாலிப்பு காசிமடத்து அதிபர் காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவிய நிதியிலிருந்து நடத்தப்பெற்றது. அன்றையதினம் ஏழைகளுக்குக் கஞ்சியும் வார்க்கப்பட்டது.

திருப்புகலூர்—ஸ்ரீ அக்கினீசுவர சுவாமி கோயிலில் 1-7-60 முதல் திருவாடானை ஸ்ரீ ஐயாமணி சிவம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சிவாகம சித்தாந்தப்பயிற்சி வகுப்பை முன்னிட்டு 22-7-60,23-7-60 தேதிகளில் பழநி ஸ்ரீ ஈசானசிவாச்சாரியார் அவர்களால் சிவதீட்சை, சிவனடிக்கே பதித்த நெஞ்சு என்ற தலைப்புக்களில் சொற்பொழிவு நடைபெற்றது.

மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள்]

மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்ருன திருவண்வண்டூரை நம்மாழ்வாரொருவரே மங்களாசாஸனம் செய்தருளினுரென்றும், அது தானும் திருவாய்மொழி ஆரும்பத்தின் முதற்பதிகத்திலே யென்றுஞ் சொல்லி அப்பதிகத்தின் நான்கு பாசுரங்களை முன்னிதழில் விவரித்தோம்; இனி ஐந்தாம் பாட்டு முதலாக விவரிப்போம்.

5. உணர்த்தலூடலுணர்ந்து
உடன்மேயும் மடவன்னங்காள்!

இப்பாட்டில், அன்னப்பறவைகளைத் திருவண்வண்டூர்ப் பெருமான் பக்கலிலே தூதுவிடுகிருராழ்வார். அவை ஆணும் பெண்ணும் ஒன்றைவிட்டொன்று பிரியாமே அநவரதம் கூடியேயிருக்கும்படியைக் கண்டு, அங்ஙனம் பிரியாது கூடியிருப்பதற்கு ஒரு காரணம் உத்ப்ரேக்ஷிக்கிருராழ்வார். பிரிந்தால் சில கஷ்டங்கள் நேருமென்றஞ்சிக் கூடியேயிருக்கின்றனவாம். என்ன கஷ்டம் நேருமென்னில், கேண்மின். திருக்குறளில் புணர்ச்சி மகிழ்தலென்னு மதிகாரத்தில் ஒன்பதாவது குறள்-"ஊடலுணர்தல் புணர்தலிவை காமம், கூடியார் பெற்ற பயன்" என்பது.

இதில் ஊடலாவது—பிரணயகலஹம். காதலியானவள் காதலன் பிரிந்திருந்து மீண்டு வந்தவுடனே 'என்னையொழியக் குளித்தாய், என்னை யொழியப் பூவைப்பார்த்தாய், உன் உடம்பு பூ நாறிற்று' என்றுப் போலே சிலவற்றைச் சொல்லிப் பிணங்குவது ஊடலெனப்படும். ஊடலுக்கடுத்தபடி உணர்தல் என்றுள்ளது. இதற்கு 'தலைமகன் தன்னுடைய தவறில்லாமையைச் சொல்லி நாயகியினுடைய ஊடலை நீக்குதல்' என்று பொருளுரைக்கப்பட்டுள்ளது. உணர்த்தல் என்பதே உணர்தலெனப்பட்டதென்க. உணர்த்தல் நாயகனுடைய தொழில். உணர்தல் நாயகியினுடைய தொழில். நாயகி ஊடினவாறே நாயகன் 'உனக்கென்று குளித்தேன். உனக்காகப் பூவைப்பார்த்தேன், உன் அனுபவத்திற்காகப் பூவணிந்தேன்' என்று சொல்லித் தன் குற்றத்தைக் கழித்துக் கொள்வன் அதன் பிறகு வருவது கலவி. பாட்டு மூலத்தில் "உணர்த்தலூடலுணர்ந்து" என்றிருந்தாலும் 'பாடக்கிரமத்திற்காட்டிலும் அர்த்தக்கிரமம் வலிது' என்கிற நியாயத்தினுல் "ஊடலுணர்த்தலுணர்ந்து" என்று அடைவுபடுத்திக்கொள்ளலாம். ஊடல் உண்டான பிறகே உணர்த்தல் நேருமாதலால் அதற்குச்சேர இங்ஙனம் கொள்ளக்கடவது.

ஊடல் என்கிற பிரணயகலஹமும் அதற்குப் பரிஹாரமான உணர்த்தலும் நேருவதற்குப் பிரிவு காரணமாகும்; பிரிவின்றிக் கூடியேயிருந்து விட்டால் அவை நேர மாட்டா; ஆகவே நாம் பிரியவும் வேண்டா; பிரிந்து ஊடலுணர்த்தல் சிரமங்களை யநுபவிக்கவும் வேண்டாவென்று கொண்டு கூடியேயிருக்கின்ற அன்னங்களே! என்றதாயிற்று.

இனி அங்குச் சென்று காணவேண்டிய எம்பெருமானைச் சிறப்பித்துக் கூறுவது 'புணர்த்த பூந்தண் டுழாய்முடி நம்பெருமானைக் கண்டு' என்னும் மூன்ருமடி. அப்பெருமான் அடியார்களைக் காத்தருள்வதற்கென்றே தனி மாலை முடிசூடியிருத்தலால் நீங்கள் கூசாதே சென்று காணலாமென்று உணர்த்தியவாறு. எம்பெருமான் கிரீடமணிந்து கொள்வதும் திருமாலையணிந்து கொள்வதும் தானே ஸகல ரக்ஷகனென்பதைக் காட்டுதற்கேயாம்.

"புணர்த்த கையினராய் அடியேனுக்கும் போற்றுமினே" என்ற ஈற்றடி மிக மிகக் குறிக்கொள்ளத்தக்கது. அன்னங்களை விளித்துக் கூறுவதன்ருே இப்பாட்டு; அன்னப்பறவைக்குக் கையில்லாமை ஆழ்வாரறியாததன்று. அறிந்துவைத்தும் 'புணர்த்த கையினராய்' என்றது ஆசாரியர்களையே திரு

வுள்ளம் பற்றிக் கூறுகின்றுரென்பதைத் திடப்படுத்தும். நீங்கள் அங்குச் சென்று எனக்காக எம்பெருமான் பக்கலில் இன்னது சொல்லவேணுமென்னுதே "அடியேனுக்கும் போற்றுமினே" என்கையாலே தமக்காக அங்கே மங்களாசாஸனம் செய்வதும் போது மென்பது போதரும். ஸ்ரீ வைஷ்ணவ சம்பிர தாயத்தில் இக்காலத்திலும் ஒரு வழக்க முளது. (அதாவது) யாரேனும் சிலர் ஒரு பெரியாரிடம் வந்து தெண்டனிட்டு 'அடி யோங்கள் திவ்யதேச யாத்திரை செல்லக் கருதியிருக்கிறோம்: விடை தந்தருளவேணும்' என்று விண்ணப்பம் செய்தால், அதற்கு அப் பெரியார் 'புணர்த்த கையினராய் அடியே னுக்கும் போற்றுமினே' என்று இப்பாசுரத் தைச் சொல்லுவர் அஞ்ஜலி பந்தத்தோடு.

6. போற்றி யானிரங்தேன் புன்னை மேலுறை பூங்குயில்காள்!

சில குயில்களைக் குறித்து, நீங்கள் திரு வண்வண்டூரிலே சென்று எம்பெருமானைக் கண்டு எனக்குள்ள நிலைமையை அறிவித்து அத்தலையினின்றும் ஒரு வார்த்தை கொண்டு வந்து எனக்குரைத்து என் மையலைத் தீர்க்க வேணுமென்று இரக்கிறது இப்பாட்டில், 'இரங்தேன்' என்று சொன்னாலே போது மானது; யான் என்று தனிப்படச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இங்குச் சொல்லி யிருப்பதற்கு ஒரு கருத்துண்டு; நாயகியைக் குறித்து நாயகன் தூதுவிடுவது ப்ரஸித்தமே யொழிய, நாயகனைக் குறித்து நாயகி தூது விடுவது ப்ரஸித்தமன்று; உலகமறிந்த இரா மாயணத்தில் அவனன்றோ தூதுவிட்டதாக வுள்ளது; இப்போது நான் தூதுவிடும்படி யாவதே! என்னுமிரக்கம் தோன்றும்.

"வளர்த்ததனுல் பயன் பெற்றேன்" என்னும்படியாக ஆசிரியர் பக்கலிலேயே வளருமவர்கள் குயிலாகச் சொல்லப்படு வர்கள். "வநப்ரிய: பரப்ருத: கோகில : பிக:" என்கிற அமரகோசத்தின்படி குயில்களுக்கு வடமொழியில் 'பரப்ருதம்' என்று பெயர். பிறராலேயே வளர்க்கப்படுவது குயில். (அதாவது) தாய்க்குயில் தன் குஞ்சைக் காக் கையின் கூட்டிலே கொண்டு விட்டுவிடும். இளமையில் சிறிதும் வேற்றுமை தெரியாதா தலால் அது தன் குட்டியென்றே நினைத்துப் போஷித்துவரும். "வஸந்த காலே ஸம்ப் ராப்தே காக: காக: பிக: பிக:" என்றபடி வஸந்தகாலம் வந்தவாறே குயில் தனது பஞ்சம ராகத்தைக் கர்ணமிருதமாகப் பயி லும். அப்போதுதான் இது அக்கூட்டி லிருந்து ஓட்டப்படும். பிறரால் போஷிக்கப் படுவதென்னு மளவுக்கு இதனை உவமையாகக் கொள்க. பரனை ஆசாரியனுல் போஷிக்கப் பட்டு வளரும் குருகுல வாஸிகளைச் சொல் லிற்றுகிறது.

'புன்னை மேலுறை'என்றதை புன்னையி னருகே யுறைகின்ற என்றதாகக் கொள்க. இதில் ஒரு விசேஷார்த்தமுண்டு. (அதாவது) நம் ஆழ்வார்களும் ஆசாரியர்களும் ஒரு மிடருக ஈடுபட்ட தலமாகிய திருவரங்கம் பெரிய கோயிலிலே சந்திரபுஷ்கரிணிக் கரையில் திருப்புன்னைமரம் நெடுநாளாகப் பேர்பெற்றிருப்பது. அதன் நிழலிலே வீற் றிருந்துகொண்டு நம் ஆசாரியர்கள் உபய வேதாந்த ரஹஸ்யார்த்த சர்ச்சைகள் செய் தருள்வது வழக்கம். இதனை ஸ்ரீபராசரபட்ட ரென்கிற ஆசிரியரும் தம்முடைய நூலாகிய ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே வருணிக்கின்றுர். "புந்நாகதல்லஜம் அஜஸ்ர ஸஹஸ்ரகீதிஸே கோத்த திவ்ய நிஜஸௌரபம் ஆமநாம:" என்கிறுர். அந்தத் திருப்புன்னைமரம் சந்திர புஷ்கரிணிக்கரையிலே இரா நிற்கச் செய் தேயும் அதிலிருந்து ஒரு குடநீர் எடுத்துக் கொட்டுவாரில்லை. அந்தத் தீர்த்தத்தினுல் வளருமதன்று அம்மரம். "தீர்த்தங்களா யிரம்" என்று சொல்லப்பட்ட திருவாய் மொழியினுலேயே வளர்ந்து நறுமணம் மிக்க தாம் அப்புன்னைமரம். திருவாய்மொழிமூலம் சந்தை சொல்லிக்கொடுப்பதோ அதன் அர்த்த விசேஷங்களைப் பிரவசனம் செய் வதோ அங்கே நடைபெறுமென்று தெரி வித்தவாறு. ஆக, அங்கு வாழ்ந்துகொண்டு அழகிய மிடற்றோசையினுல் எல்லாரையும் களிப்பிக்கின்ற ஆசிரியர்களை இங்கு ஆழ்வார் விளிப்பதாகக் கொள்ளத்தகும்.

அன்றியும், திருமங்கையாழ்வாருடைய பெரிய திருமொழியில் திருவெள்ளறைப் பதி கத்தில் "மாம்பொழில் தளிர்கோதிய மடக் குயில் வாயது துவர்ப்பு எய்த, தீம்பலங்கனி தேனது நுகர்" என்று குயில்களில் ஓர் இயற்கை கூறப்பட்டுள்ளது. குயில்களா னவை முதலில் மாந்தளிர்களிலே வாய்வைத்த தனுல் வாய்துவர்த்துப்போக, அந்தத்துவர்ப்பு நீங்குதற்காகப் பலாப்பழத் தேனைப் பருகுவ தாகச் சொல்லுகிறவிதனுல் — முதலில்

ஸாமான்ய சாஸ்திரங்களிலே வாய்வைத்து வெறுப்படைந்து பிறகு வேதாந்த சாஸ்திரங் களிலே பிரவேசித்துப் பேரின்பம் நுகர்ந்து போதுபோக்கும் நம்மாசிரியர்களின் செயலைக் குறிப்பிட்டவாறு. அப்படிப்பட்டவர்களும் இங்கு விளிக்கப்படுவதாகக் கொள்ளலாம்.

ஆற்றலாழியங்கை யமரர் பெருமானைக் கண்டு—"அருளார் திருச்சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனும், இருளார்வினை கெடச் செங்கோல் நடாவுதிர்" என்றும், "எப் போதும் கைகழலா நேமியான் நம்மேல் வினை கடிவான்" என்றும் கூறியபடியே விரோதி களைத் துணித்து அடியவர்களை நோக்கு வதிலேயே நோக்குடைய பெருமானிடத் தேறச் செல்லுவதற்கு நீங்கள் கூசவேண்டா வென்று அறிவிக்கிறபடி.

மையல்தீர்வ தொருவண்ணம் மாற்றம் கொண்டருளீர்—திருவண்வண்டூர்ப் பெருமா னிடமிருந்து ஏதேனுமொரு வார்த்தை கொணர்ந்து அருளினாலல்லது என்னுடைய மயல் தீரமாட்டா தென்றவாறு. பொது விலே மாற்றம் என்றுள்ளதேயன்றி இன்ன மாற்ற மென்றதில்லை; அநுகூலமாகவுமாம் பிரதிகூலமாகவுமாம்; அத்தலையில் வார்த்தை யென்று ஏதேனுமொரு வார்த்தை கிடைத் தால் போதுமென்பது இதனால் காட்டப் பட்டதாம். "பாவி நீ யென்றொன்று சொல் லாய் பாவியேன் காணவந்தே" "மெய்ம்மை சொல்லி முகம்நோக்கி விடைதான் தருமேல் மிகநன்றே" என்ற பாசுரங்கள் இங்கே நினைக்கத்தக்கன.

7. ஒரு வண்ணஞ் சென்று புக்கு எனக் கொன்றுரை ஒண்கிளியே!

ஒரு கிளியை விளித்து, திருவண்வண் டூர்ப் பெருமானுடைய திவ்யாவயவங்களும் திவ்யாயுதங்களுமாகிற அடையாளங்களைச் சொல்லி இவ்வடையாளப்படியே அவனை அழகிதாகக் கண்டு எனக்காக அவனுக்கொரு வார்த்தை அறிவியுங்கோளென்கிறாள். 'சொல்லிற்றைச் சொல்லுமாம் கிளிப் பிள்ளை' என்று உலகர் பிரசித்தமாகச் சொல்லுவர். கற்பித்தபடியே சொல்லப் பழக்க முடையது கிளி. அதுபோல, முன்னோர் மொழிந்த முறைதப்பாமற் கேட்டுப் பின்னோர்ந்து தாமதனைப் பேசுமாசிரியர்கள் இங்கு விவ க்ஷிதர்கள்.

ஒருவண்ணம் சென்றுபுக்கு என்பதற்கு இருவகையாகப் பொருள் கூறுவர். திருவண் வண்டூர் மலைநாட்டிலுள்ளதாகையாலே மலை நாடு வழியெல்லாம் பூவியல் பொழிலும் தடமுமாயிருக்கும். அவற்றிலே கண்செலுத் தினால் ஆங்காங்கு லயிக்க வேண்டியிருக்கும். 'தோள்கண்டார் தோளேகண்டார்' என்றாற் போலே ஒன்றைக் கண்டவர்கள் அதையே கண்டுகொண்டு கால்பேராமே நிற்கவேண் டிற்றுகுமேயன்றி எம்பெருமான் பக்கலில் சென்று சேர முடியாது. ஆகவே வழியில் கண் செலுத்தாமே சடக்கென வழியைக் கடந்து செல்லுங்கள் - என்பதாக வொரு பொருள். மற்றொரு பொருளோ வென்னில்; எம்பெருமானிடத்தில் பரத்துவம் ஸௌசீல் யம் என்னுமிரண்டு திருக்குணங்களுமுண்டு. அடியார்களோடு கூடிக்கலந்திருக்கும்போது ஒரு நீராகக்கலந்து பரிமாறுகையாகிற ஸௌசீல்ய குணத்தைக் காட்டுவன்; பிரிந்து போனவாறே அந்த சீலகுணத்தை அறவே மறந்து பரத்துவமே பாராட்டி நிற்பன். அந்த பரத்துவப் பெருமையினால், சாமான்ய ஜனங்கள் அரசர்களிடத்திலே அணுகவொண் ணாதபடி பணிவிடைக்காரர்கள் பிரம்பு கொண்டடிப்பதுபோல அங்கும் நடக்கவுங் கூடும்; அதற்கு இருய்த்துத் திரும்பி வந்து விடாமல் அந்த தண்டனைகளையும் ஒருவாறு சகித்துக்கொண்டு போய்ப்புகுங்கோள்-என் பதாம்.

திருவண்வண்டூர்ப் பெருமான் தனது கரிய திருமேனிக்குப் பரபாகமாக வாய் கண் கை கால் ஆகிய அவயவங்கள் சிவந்து கையுந் திருவாழியுமாக இருப்பன். இவ்வடையாளங் கொண்டு அவனைக் கண்டு பிடித்து எனக்காக வொரு வார்த்தை சொல்லவேணுமென்றாளா யிற்று. ஆசிரியர்களைத் தூதுவிடுவதாகில் அவர்களுக்கு எம்பெருமானுடைய அடையா ளங்கள் தெரிவிக்கவேணுமோ? அவர்கள் தாம் அறியார்களோ வென்று ஒரு கேள்வி பிறக்கும். இஃது அறியாதவற்றை யறிவிப்ப தன்று; பகவத்கீதையில் "போதயந்த: பரஸ் பரம்" என்று சொன்னதை அடியொற்றிப் பேசினபடியாகக் கொள்வது.

8. திருந்தக் கண்டெனக் கொன்றுரையாய் ஒண்சிறு பூவாய்!

திருவண்வண்டூரிலே சென்று அங்குறை யும் பெருமானுடைய திவ்யாவயவ ஸௌந்தரி

யத்தை நன்ருகக் கண்டு மீண்டு வந்து எனக்கொன்று சொல்லவேண்டுமென்று பூவைப் பறவையை நோக்கிச் சொல்லும் பாட்டு இது. எம்பெருமானைச் சேவிப்பது இருவகைப் படும். தன் மனத்துக்கு மட்டும் தெரிந்த தாம்படி சேவிக்கை ஒன்று; பிறர்க்கும் விசதமாக எடுத்துரைக்கலாம்படி அலகலகாகச் சேவிக்கை மற்றென்று. இங்கே 'திருந்தக் கண்டு' என்றது-ஏதோ சாதாரணமாகக் கண்டு விடுகையன்றிக்கே எனக்கு விசதமாகச் சொல்லலாம்படி கண்டு வரவேணுமென்றவாறு. எதைக் காண்பது? என்ன; திருக்கண் திருமுடி திருத்தோள்கள் திருமேனி ஆகிய இவற்றைக் கண்டு அவற்றிலுள்ள அதிசயங்களை என்னிடம் வந்து சொல்லவேணுமென்கிருள். தூதர் செய்ய வேண்டிய செயல்களில் இதுவு மொன்றேயாம். இதனுலும் தலைவிக்குத் தரிப்பு உண்டாகுமென்க.

9. அடிகள் கைதொழுது அலர்மேலசையு மன்னங்காள்!

சில அன்னப்பறவைகளை நோக்கி, 'திருவண்வண்டூர்ப் பெருமானிடத்துச் சென்று ஏகாந்தமாக என் விஷயம் விஜ்ஞாபிக்க வேணும்' என்று இரக்கிறது இப்பாட்டு. 'திருவடிகளைச் சிக்கனப் பிடித்துக்கொண்டு பிரார்த்திக்கவேணும்' என்னும் பொருளையுட்கொண்டு 'அடிகள் கைதொழுது' என்கிருள். இது உபசாரோக்தியெனப்படும். உலகில் அவரவர்கள் காரியம் சாதித்துக்கொள்ள நினைக்கும்போது கையைப் பிடித்துக்கொண்டு பிரார்த்திப்பதுமுண்டு; இரக்கமற்றவர்கள் கையை உதறிக்கொண்டு போய் விடுவதுமுண்டு. கையைப்பிடிக்காமல் காலைப் பிடித்துக்கொண்டால் "அநதிக்ரமணீயம்ஹி சரணக்ரஹணம்" என்கிற நியாயத்தாலே காதுகனுங்கூடத் தப்பிப்போககில்லான். ஆக இது கைகண்ட உபாயமாதலால் இதனைச் சொல்லித் தருகிறபடி.

திருவண்வண்டூர்ப் பெருமான்படி சொல்லுகிறது [கடியமாயன் தன்னைக் கண்ணனை நெடுமாலை] என்று. **கடியமாயன்** = அடியார்களது விரோதிகளை அழியச்செய்யுமிடத்துக் கண்டாராதே ஆச்சரியச் செயல் செய்பவனென்கை. **கண்ணன்** = அடியார்க்குத்தான் கையாளாக நின்று தன்னை இஷ்ட விநியோகத்திற்கு உரியனுக்கிக் கொடுக்குமவன். **நெடுமால்** = இத்தனையும் செய்தும் 'அந்தோ! ஒன்றும் செய்யப்பெற்றிலோமே!' என்று குறைபடும்படியான வியாமோஹமுடையவன். ஆக இத்தகைய பெருமானைத் திரளாகவிருக்கும் சமயத்தில் சென்றுகிட்டாமல் ஏகாந்தமாயிருக்கும் சமயம் பார்த்துச் சென்றுகிட்டி, நாட்டார்படியல்லாத பாவத்தைப்பண்ணின என்னுடைய செய்தியைச் சொல்லுங்கோள் என்கிருள். வேறுகோண்டு என்றது-ஏகாந்தத்திலே யென்றபடி.

10. வேறு கொண்டும்மையானிரந்தேன் வெறி வண்டினங்காள்!

எமது தலைவரான திருவண்வண்டூர்ப் பெருமாள் பெண் பிறந்தார் காரியமெல்லாம் செய்து தலைக்கட்டி விட்டோமென்றிருப்பர்; அப்படியன்றியே ரக்ஷிக்கப்படவேண்டிய வகுப்பிலே நானொருத்தி மிச்சப்பட்டிருக்கிறேனென்று சொல்லுங்கோளென்று சில வண்டுகளைக் குறித்துக் கூறுவதிப்பாட்டு. கீழே பல பறவைகளையும் நோக்கித் தூது போம்படி நான் இரந்ததுண்டாகிலும், வண்டுகளே! இப்போது உங்களை இரப்பது சாமானியமானதன்று; தனிப்பட்ட பிரதிபத்தியோடே உங்களை இரக்கின்றேனென்பாள் "வேறு கொண்டும்மை யானிரந்தேன்" என்கிருள். வண்டுகளிடத்தில் தனிப்பட்ட பிரதிபத்தி யாதென்னில்; "பிரமனுமிந்திரனும் துன்னிட்டுப் புகலரிய" என்றும், "சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க" என்றும் சொல்லும்படி மிகவும் நெருக்கமான தலங்களிலும் வண்டுகளானவை தாராளமாகச் சென்று புகுமாபோலே "நீ நேச நிலைக்கதவம் நீக்கு" என்று கதவைத்திறக்கப் பிரார்த்தித்துச் சிரமப்பட்டுக் புகவேண்டிய அருமையின்றிக்கே சுதந்திரமாகப் புகுந்து புறப்படு மாற்றல்மிக்க ஆசிரியர்களை விளித்துப் பிரார்த்திக்கின்றவாறு. இப்பாட்டில் "என்னையுமுளளென்மின்கள்" என்றதற்கு 'நான் இன்னமும் பிழைத்திருக்கின்றேனென்று சொல்லுங்கள்' என்று சிலர் பொருளுரைப்பார்களாம்; அதில் சுவைக்கேடு உள்ளது; 'ரக்ஷிக்கப்படவேண்டியவர்களையெல்லாம் ரக்ஷித்தாய்விட்டதென்று அவர் நினைத்திருப்பர்; அது தவறு; ரக்ஷ்யவர்க்கத்திலே நானுமொருத்தியிருக்கின்றதாகச் சொல்லுங்கள்' என்பதே பொருள். ... ...

திருவண்வண்டூர்ப்பதியநுபவம் முற்றிற்று.

அடுத்த இதழில் குட்டநாட்டுத் திருப்புலியூர்ப்பதியநுபவம் நிகழும்.

திருக்களிற்றுப்படியார்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.,

(முன் தொடர்ச்சி)

2. சாதனம்

மேலே வெண்பாவில் (கஅ), ஆசானால் ஆட்கொள்ளப் பெற்றவர்களுள் பலர்க்குச் சிவானந்த இன்ப அனுபவம் பைய (மெள்ள, அதாவது, படிமுறையில்) விளையும் எனக் கூறினர்.

ஆகலின், சிவயோகம் விளைதற்கு முன் ஆன்ம உணர்வில் இன்றியமையாது நிகழ வேண்டிய சாதனங்களை கச-ஆம் பாட்டால் கூறுகின்றார்:

(1) உயிர் ஒரு பொருளை அறிந்து தொழிற்படும்போது முதல்வனது திருவருளும் உடனின்று அறிவித்தும் செலுத்தியும் வருகின்றது என்பது சைவ நூல் துணிபு. பிறப்பு நிலையில், முதல்வன் உணர்வு உயிரின் உணர்வைப் பின்னிக்கொண்டு நின்று காட்டுவதாக நிற்பினும், உயிர்தானே எல்லாம் செய்வதாகவும், அறிந்து வருவதாகவும் எண்ணிச் செருக்கி நிற்கும். இச்செருக்குக்காரணமாக உள்ளது ஆணவமலம் எனப்படுகின்றது. இம்மலத்தால் உயிர் யான் (அகங்காரம்) எனவும், எனது (மமகாரம்) எனவும் நின்று, பொருள்களைத் தனக்கு வேருகச் சுட்டியறிந்து, அவ்வப்போது ஒவ்வொன்றில் அழுந்தி நிற்கும். இவ்வாறு பொருள்களைத் தனக்கு வேருகச் சுட்டி, 'இது குடம்,' 'இஃது ஆடை' என்ருற்போல உணரும் உணர்வே ஏகதேசக் காட்சி எனவும், விபரீத உணர்வு எனவும், சுட்டுணர்வு எனவும் கூறப்படும்.

இச்சுட்டுணர்வு உள்ளவரை உலகம் காட்சிப்படும். இச்சுட்டுணர்வு நீங்குதற்கு, ஆசான் அருளால் முதற்பொருளைக் கண்டவர்கள், முதற்பொருள் வேறு தாம் வேறு என்பது இல்லாமல், செய்வானும் செய்விப்பானும் முதல்வனே என, முதற்பொருளோடு ஒற்றுமைப்பட்டு நிற்றல்வேண்டும். இவ்வாறு ஒற்றுமைப்பட்டு நிற்றல் "ஒன்ருதல்" அல்லது ஏகனுதல் எனக் கூறப்படும். திருவைந்தெழுத்தை எண்ணுதல் அல்லது சிவன் யான் எனப் பிரிவறுபாவனை செய்தல் என்னும் சாதனத்தின் விளைவு இங்ஙனம் ஒன்ருதலே ஆகும்.

ஒன்ருதலின் பயன் உயிர்க்கு மலத்தால் உள்ளதாகிய **முதன்மை கெடுதல்** ஆகும். உயிரின் முதன்மை கெடும்போது, முதல்வன் அவ்வான்மாவைத் தன் அருள் வியாபகத்தில் அடங்கக்கொண்டு, அதன் உண்மை யியல்பாகிய வியாபக நிலையை விளக்கிப் பொறுப்பரிய பேரன்பை விளைப்பன்; ஆன்மாவும் அவ்வன்பே இன்பாக விளையும் சிவானந்தத்தைப்பெற்று அனுபவிக்கும்.

"உள்ளம் உருகில் உடன் ஆவார்" எனத் திருஞானசம்பந்தர் அருளிச்செய்த மெய்ம்மொழிப் பயன் இதுவே என கச-ஆம் பாட்டுக்குறிப்பிக்கின்றது:—

உள்ள முதலனைத்தும் ஒன்ருய் ஒருவவரின்
உள்ளம் உருகவந் துன்னுடனும்—தெள்ளி
உணருமவர் தாங்கள் உளராக என்றும்,
புணரவர நில்லாப் பொருள்.

யான் என ஒரு முதல் உளதாகும்படி, காண்பான் காட்சி காட்சிப் பொருள்¹ எனப் படுத்துக்காணப்புகுவார்க்கு என்றும் புணர்தல் வரும்படி நில்லாத முதற்பொருள், ஒன்ருய் நிற்றலால், உயிர்க்கு உள்ள முதன்மை அனைத்தின் கண்ணும் நீங்குதல் வரின், பேரன்பை விளைத்து உன்னேடு உடனுகும் எனப் பொருள் கொள்க.

பின்னர் மேற்கூறியபடி ஏகனுகி நான் அழிய முயல்வார் செய்யும் செயல்களைச் சிவதன்மம், சிவயோகம், சிவஞானம் என மூன்ருக வகுத்து, இவற்றில் தமக்கு இயன்ற தொன்றைப்பற்றி அன்பு செய்துவரின்,

யார்க்கும் அறிவரிய சிவன் வெளிப்பட்டருள் வன் எனக் கூறுகின்றார்.

நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழியும்—வல்லதனுல்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணு அரன். (கசு)

இனி இவற்றுள் சிவதன்மம் என்பது மெல்வினை, வல்வினை என இருவகைப்பட நிகழும். மெல்வினையாவது சிவபிரானை வழிபடுதற்கண் சிவாகமங்களில் விதித்துள்ளபடி ஒழுகிவரும் ஒழுக்கநெறி. இஃது எல்லோருக்கும் எளிதின் எய்துதற்குரிய நெறி ஆதலின் மெல்வினை எனப்பட்டது. இது விதிமார்க்கம் எனவும் வழங்கப்படும். வல்வினையாவது மெல்வினையில் வழுவாது நின்று, அந்நிலையின் முதிர்ச்சியினாலே பின் உண்டாகிய பிறப்பிலே முதல்வனிடத்தே எல்லையின்றி எழுந்து முறுகிவளரும் அன்பின் பெருக்கத்தால் உலகநெறி கடந்து ஒழுகும் அன்பு நெறி. இது நம்மனோர்க்கு அரிதாக உள்ள தொன்று; யாரும் எண்ணி மேற்கொள்ளப் படுவது அன்று. முன்னைத் தவமுதிர்ச்சி காரணமாகவே உள்ளதாவது. இவ்வல்வினை சிறுத்தொண்டர், சண்டேசர், அரிவாட்டாயர் முதலிய உண்மை நாயன்மார்கள் செயல்களில் வைத்து உணரப்படுவதாகும். (கசு முதல் உ௦ வரை) திடப்பட்ட மெய்யுணர்வின் வன்மையால் நிகழும் வினையாதல் பற்றி வல்வினை எனப்பட்டது.

'வினையென்பவை பிறப்பிற்குக் காரணமாக உள்ளவை என்பது நூல்வழக்காயிருக்க, இங்கே மெல்வினை வல்வினை எனப்பட்ட சிவதன்மம் எப்படி முத்தி சாதனம் ஆகும்?' என்பார்க்கு மேலே விடை கூறுகின்றார் ஆசிரியர்.

தொழில் செய்து வாழ்வோன் ஒருவன் ஒருவருக்குக் கடன்பட்டிருந்தான்: அவன் தான் செய்யும் தொழிலைக் கடன் கொடுத்தோன் ஏவல் வழி நின்று செய்வானேயானுல் அவனுக்குத் தீங்கு வாராது அல்லவா! அது போல, எல்லோருக்கும் வாழ்க்கையில் செய்யும் செயல்கள் உள்ளன; அங்ஙனம் செய்யும் செயல் முதல்வன் செயலாகவே விளையும்படி அன்பு நெறி நின்று, அதனுல் தற்போதம் கெட முதல்வனுக்கு ஆட்பட்டோர் தம் பொறுப்பைக் கழித்துக்கொண்டவர் ஆவர்; முதல்வன் திருவருள் அவர்களைக் கைக்கொண்டு பேரின்பத்தை நுகர்விக்கும் என்கிறார்.

செய்யும் செயலே செயலாகச் சென்றுதமைப்
பையக் கொடுத்தார் பரங்கெட்டார்—ஐயா
உழவும் தனிசும் ஒருமுகமே யானுல்
இழவுண்டோ சொல்லாய் இது. (உக)

உழவு-தொழில்முயற்சி; தனிசு-கடன். பரம்-பாரம். இழவு-தீங்கு, கேடு.

இனிச் சிவயோகம் என்பதும் ஆதார யோகம், நிராதார யோகம் என இருவகைப் படும். இவற்றின் இயல்பும் பயனும் திருவுந்தியார் பற்றிய கட்டுரையில் கூறப்பட்டன.

நிராதார யோகமாவது முதல்வன் திருவருளோடு உடனுய் நிற்றல் ஆம் எனக் கூறிப் பின், அந்த நிலை கைகூடுதற்குச் செய்யவேண்டிய உபாயத்தை இரண்டு பாட்டுக்களால் கூறுகின்றார்:

“ஒரே மரத்தில் இரண்டு அழகிய பறவைகள் கூடி வாழ்வ ஆயின; அவற்றுள் ஒன்று அரசமரத்தின் இனிய பழத்தை உண்கிறது, மற்றையது உண்ணுது பார்த்துக் கொண்டுளது'' என்பது இருக்கு வேதம் முதல் மண்டிலம் 164-ஆம் சூக்தம் 20-ஆம் மந்திரம்.

இதில் மரம் என்றது மாயா காரியமாகிய உடம்பை; இனிய பழம் என்றது உலகப்பொருள்களால் வரும் இன்பத்தை. அதனை உண்ணும் பறவை என்றது உயிரை. உண்ணுது பார்த்துக்கொண்டிருக்கும் பறவை என்றது முதல்வனை. இதனை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் பாட்டு எழுந்துளது:-

காண்கின்ற தோர்பொருளைக்
காண்கின்ற யோகிகளே
காண்கின்றார் காட்சியறக்
கண்ணுதலைக்—காண்கின்றார்
காண்பானும் காணப்
படுபொருளும் அன்றியே
காண்கையினுற் கண்டனரே
காண். (உஎ)

தமது போக நுகர்ச்சி தோறும், அப்போகத்தைத் தம்மை நுகர்வித்து உடனின்று கண்டு வருவதாகிய திருவருளை உணரும் யோகிகளே அவ்வருளுக்கு முதலாகிய முதல்

வனைக் காணவல்லோர் ஆவர்; அங்ஙனம் காணும்போது உலகக் காட்சி இல்லை ஆகின்றது. மேலும், அக்காட்சி நிலையில் தாங்கள் உளராயினும், தம்மையும் முதல்வனையும் வேறு ஆகப் பகுத்துக்காணுமல், அவனே தாம் ஆம் நிலையில் காண்டலினுல், அவர்களே உண்மைக் காட்சியைத் தலைப்பட்டோர் ஆவர்.

இந்நிலை நெகிழாமைப் பொருட்டு முத்தி பஞ்சாக்கரம் முறைப்படி எண்ணப்படும் என்பதை அடுத்த பாட்டு உணர்த்துகிறது:

பேசாமை பெற்றதனிற் பேசாமை கண்டனரைப்
பேசாமை செய்யும் பெரும் பெருமான்—பேசாதே
எண்ணென்றும் வண்ணம் இருக்கின்ற யோகிகள் [பால்
உண்ணின்றும் போகான் உளன். (உஅ)

திருவைந்தெழுத்தை எண்ணும்போது எழுத்தைப்பற்றி நிற்கும் வாசகம், உபாஞ்சு, மானதம் என்னும் மூன்றுமுறையும் கடந்து, பொருளையே பற்றி எண்ணும் முறை சுத்த மானதம் என்னப்படும். அது மௌன செபம் ஆதலால், நிற்கும் நிலை எனப்படும் அப்பேசா நிலையைப்பெற்று அதில், ந,ம நீக்கி, வ உடன் சேர்ந்து, பேசா எழுத்து எனப்படும் சிகார வாச்சியத்தைத் தலைப்பட்டோரை இங்ஙன் இருந்ததென்று கூறப்படாத தூயபேரின்பத்தில் அழுந்தி உறங்கச் செய்வன் மகாதேவன். அவன் தத்துவங்களைப்பற்றிச் சகல நிலை எய்தாமல் தமது உணர்வு திருவருளில் ஒடுங்கி ஒன்ரும் வண்ணம் முத்தி பஞ்சாக்கர மோன நிலை அநுட்டிக்கும் சிவயோகிகளின் உணர்வை விட்டு நீங்காது தன்னை அவர்க்கு விளக்கியே இருப்பன்.

பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்னும் திருக்குறளில் பற்றற்ருன் பற்று என்றது முதல்வன் திருவருளையே குறிக்கும் எனவும், பற்று விடற்கு என்றதில் பற்று என்பது அகப்பற்ருகிய யான், எனது என்னும் செருக்கைக் குறிக்கும் எனவும் ஒரு பாட்டால் குறிக்கின்ருர் :

பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து
பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற—பற்றதனைப்
பற்றுவிடில் அந்நிலையே தானே பரமாகும்
அற்றமிது சொன்னேன் அறி. (௩௩)

இதில் "அந்நிலையே தானே பரம் ஆகும்', என்பது "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" என்னும் திருக்குறட் பகுதியை விளக்குவது ஆகும். "பற்றறிந்து, பரிந்திருந்து பார்க்கின்ற பற்றதனைப்பற்றிப் பற்றுவிடின்" எனக்கொண்டு கூட்டுக. அற்றம் - முடிந்த பொருள்.

தியான சாமாதிகள் இன்ன என விளக்குதற்கு வேருெரு குறட்பாவைக் காட்டி விளக்குகின்ருர்:

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமும் ஆம்—சார்பு
கெடவொழுகின் நல்ல சமாதியும் ஆம் கேதப்
படவருவ தில்லை வினைப் பற்று. (௩௪)

உலகங்கடந்த அருள் உருவைச் சார்பாக உணர்வதே தியானம் ஆகும்; அங்ஙனம் உணர்ந்து யான் எனது என்னும் அகச்சார்பு கெட ஒன்ருய் நின்று அன்பால் இன்பம் ஆர்தலே சமாதி ஆகும் என்பது பாட்டின் பொருள்.

(தொடரும்)

வடமதுரை—ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் கோயிலில் ஆடிப்பிரமோற்சவம் 29-7-60 முதல் 11-8-60 வரை நடைபெறும். 7-8-60 அன்று திருத்தேர் விழா. 9-8-60 அன்று முத்துப்பல்லக்கு. கல்யாண மண்டபத்தில் 30-7-60 முதல் 6-8-60 வரை சமயச் சொற்பொழிவுகள் நடைபெறும். 7-8-60 அன்று பக்தி கலா நிகழ்ச்சி வடமதுரை ஊராட்சிக்கழக அலுவலகத்திற்கு முன், மதுரை திருப்பாவை இசைப் பள்ளியின் மாணவ-மாணவிகள் இராமாயணம், மகாபாரதம் முதலிய பல சரித்திரங்களிலிருந்து 20 நிகழ்ச்சிகளை நடித்துக் காண்பிப்பார்கள். இன்னிசை அரங்குகளும் நடைபெறும்.

ஆதிஉலாவை வெளிப்படுத்திய சாத்தனூர் — எழுந்தருளியிருக்கும்பிடவூர்

[வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்]

தமிழ் மக்கள் தொன்றுதொட்டு வழிபட்டுவரும் தெய்வங்களுள் சாத்தனாரும் ஒருவர். மகாசாத்திரன் என்ற பெயரே மாசாத்தன் என்று திரிந்தது என்பதும்,இவர் பாசண்டமாகிய தொண்ணூற்றறுவகைச் சமயசாத்திரத் தருக்க கோவைகளில் பயின்றவராதலால் பாசண்டச்சாத்தர் எனப்படுவர் என்பதும் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாரது கருத்தென்று புலப்படுகிறது. (சிலப்-கனாத் 14-15)

சாத்தனார்க்குக் கோயில் அமைத்து வழிபடும் வழக்கம் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது. இக்காலத்தில் ஐயன் கோயில், ஐயனார் கோயில் என்ற பெயருடன் பல கோயில்கள் தமிழ் நாட்டின் பல இடங்களிலும் காணப்படுகின்றன. அவற்றுள் பிடவூர் என்பது ஒன்றாகும்.

இப்பிடவூர்ச் சாத்தனாரைப்பற்றிய ஒரு வரலாறு திருத்தொண்டர் புராணத்து வெள்ளானைச் சருக்கத்தால் அறியலாகும். அஃதாவது சேரமான் பெருமாள் நாயனார் திருக்கயிலாயத்தில் சிவபெருமான் திருமுன்பு விண்ணப்பித்த ஆதி உலாவை மாசாத்தனார் கேட்டறிந்து வந்து திருப்பிடவூரில் வெளிப்படுத்தினார் என்பது,

> சேரர் காவலர் விண்ணப்பம் செய்த
> அத்திருஉலாப் புறம்அன்று
> சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்டமா
> சாத்தனார் தரித்திந்தப்
> பாரில் வேதியர் திருப்பிட வூர்தனில்
> வெளிப்படப் பகர்ந்தெங்கும்
> நார வேலைசூழ் உலகினில் விளங்கிட
> நாட்டினர் நலத்தாலே

என்று பெரிய புராணம் வெள்ளானைச் சருக்கத்து 52-ஆம் திருப்பாட்டுச் செப்பும். அத்திருப்பாட்டில் குறிப்பிடப்பெற்ற பிடவூர் யாண்டுள்ளது என்னில், திருச்சிராப்பள்ளியிலிருந்து பிரம்பலூர்க்குப் போகும் பெருவழியில் செருகனூர்க்கு மேற்கே மூன்று மைல் தூரத்தில் இருக்கின்றது.

பண்டைப் பெருமக்கள் தம் வரலாற்றுக் கருவூலமாய் அமைந்துள்ள புறநானூற்றின் 395-ஆம் பாட்டில்,

> செல்லா நல்லிசை உறந்தைக் குணாது
> நெடுங்கை வேண்மா னருங்கடிப் பிடவூர்
> அறப்பெயர்ச் சாத்தன் கிளையேம் பெரும
> (வரி. 19—21)

என்பதில் பாட்டுடைத் தலைவன் பெயர் சாத்தனார் என்று குறிக்கப்பெற்றுள்ளது. அதன் கீழ்க் குறிப்பிலும் சோழநாட்டுப் பிடவூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்று அவன் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. அப்பாட்டுடைத் தலைவனுக்கு அவ்வூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள மாசாத்தனார் பெயரே இட்டிருக்கலாமென்று காலஞ் சென்ற மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயர் அவர்கள் அப்பாட்டின் கீழ் குறிப்பெழுதியுள்ளார்கள். தம் ஊரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தெய்வத்தினது பெயரைத் தம் மக்களுக்கு இடும் வழக்கம் பண்டும் இன்றும் தமிழ் மக்களிடத்தில் காணப்படுவதொன்றாம்.

இவ்வூர் இப்போது திருப்பட்டூர் என்று வழங்கப்படுகிறது. ஈண்டுள்ள ஐயனார் கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக்கோயில் கல்வெட்டுக்களுள் திருப்பிடவூர் நாட்டுத் திருப்பிடவூர் என்று காணப்படுகிறது. மேற்கூறிய புறநானூற்றுச் செய்யுளில் உறந்தைக்குணாது பிடவூர் என்று குறிப்பிட்டிருப்பதாலும், உறையூர்க்குக்கிழக்கே வேறு பிடவூர் காணப்படாமையாலும், ஈண்டுக் கூறிய பிடவூரிலே ஐயனார் கோயில் சிறப்பாக இன்றும் விளங்குவதாலும் இதுவே மேற்கூறிய புறநானூற்றுச்

செய்யுளில் கூறப்பட்டதும் பெரியபுராணத்தில் கூறியாங்கு மாசாத்தனர் திருவுலாப் புறத்தை வெளியிடப் பகர்ந்ததும் ஆகிய பிடவூராகும் என்பது தேற்றமாம். இவ்வூர் முடியுடைவேந்தர்க்கு மகட்கொடைக்குரியராகிய வேளாண் பெருமக்கள் வாழிடமாயும் தேவார வைப்புத்தலங்களில் ஒன்ருகியும் பேரருளாளன் பிடவூரன் என்று தேவாரத்திலும் பாராட்டப்பெற்ற தலைவன் ஒருவன் வாழ்ந்ததாகவும் விளங்கும் சிறப்பமைந்ததாகும்.

இச்சாத்தனர் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களுள் ஒன்று பின்வருமாறு:-இடம் — திருக்கோயிலின் இரண்டாம் பிரகாரத்தின் தென்புறம்.

வரி(1) ஸ்வஸ்தி ஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாதுஞ் செயமாதும் நாமருவிய கலைமாதும் புகழ்மாதும் நயந்துபுல்க அருமறை விதியினெறியனைத்துந் தழை

,, (2) ப்பருவமுறை யுரிமையில் மணிமுடித் திங்கள் வெண்குடைத் திசைகளி றெட்டுந் தங்குதனிக் கூடந்தானென விளங்கக் கருங்கலிப் பட்டியைச் செங்கோல்

,, (3) துரப்பப் பொருங்கதிராழி புலிவளைத்துடன்வர வில்லவரிரட்டர் மீனவர் கங்கணர் பல்லவர் முதலியர் பார்த்தி(பர்) பணிய எண்ணருங் கற்ப மண்ணகம் புரிந்து செம்பொன்வீர

,, (4) ஸிம்ஹாதனத்து புவன முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவற்கு யாண்டு எ-வது ருஷப நாயற்று

,, (5) பூர்வபக்ஷத்துத் தசமியும் வியாழக்கிழமையும் பெற்ற அஸ்வதி நாள் புவன முழுதுடைய வளநாட்டுத் திருப்பிடவூர் நாட்டுத் தேவதான பிர்மதேயந் திருப்பிடவூர்உடையார் திருமண்

வரி(6) டபமுடையார்க்கும் பிள்ளையார் வேப்பந்தெற்றி உடையார்க்கும் ஆதி சண்டேசனென உடையார் திருமண்டபமுடையார் கோயிலிற் கூத்தாடுந் தேவற்குத் திருவுடையாடை சாத்தி அருளப் பொன்போ

,, (7) தாமையிற் பொன்கொள்ள வேண்டுங்காசு இருநூறு. இக்காசு இருநூருக்கும் இவ்வூருப் பிடாகை பெருங்கோனூரிருக்கும் வெள்ளாளன் போகழி உடையான் முதிய மணவாள ஞதித்த தேவனை கொலோத்துங்

,, (8) க சோழ மூவேந்த வேளானுக்கு இவ்வூர் பிராமண பூஷண போஜனமாக இவ்வூரிற் சத்திரத்திலேய் நித்தற்கலம் பத்துண்ண மடப்புறமாக விற்றுக்குடுத்த நிலம் இவ்வூர் குளமும் பாண்டன் குளமும்

,, (9) நீர்கோவை உழப்பட இக்குளமிரண்டும் மீக்குளங்களின் கீழ்விளை நிலமறு வேலியும் மீக்குளத்துக்குக் குடியிருப்புப் பெருமக்குறிச்சி நத்தத்தில் வடக்கடையச் செம்பாதிக்கும் இத்தேவர்கள் கோயிலுக்கு இன்

,,(10) னிலத்துக்கு இறுத்து வருமிறைக்குச் செலவாக இப்போகழியுடையாங் நழகிய மணவாளங் நாதித்த தேவநாந கொலோத்துங்க சோழ மூவேந்த வேளான் பக்கல் இத்திரு மண்டபமுடையார் கோயிலிற் கூ

,,(11) த்தாடுந்தேவற்குத் திருவுடையாடை சார்த்தியருளக் கொண்ட காசு இருநூறுங் கொண்டு முன் பேசப்பட்ட நீர்க்கோவை உட்பட இக்குளமிரண்டும் விளை நிலம் அறுவேலிக்கும் நத்தத்தி

,,(12) ல் வடக்கடையச் செம்பாதிக்கும் முன்பு இறுத்து வருகிற இறைக்குச் செலவாகச் சந்திராதித்தவல் இக்காசு இருநூறு மேய் ஸ்ரீபண்டாரத்துக்கு இறையாவதாகவும் இன்னிலங்களுக்கு இறை என்று

வரி (13) இத்தேவர்கள் கோயில்களில் தேவர் கன்மிகளும் ஸ்ரீமாஹேஸ்வர கண் காணி செய்வார்களும் சொல்லக் கடவர்களல்லராகவும் இப்படி ஸம் மதித்து இக்காசு இருநூற்றுக்கும் இறைஇழிச்

,, (14) சிக்குடுத்தேன். இக்கோயில்களில் ஆதிசண்டீயசநேன் அருளா லிக் கோயில்களுக்கு இவ்வூர் மத்தியஸ் தன் திருவன்னியுடையானான மூவா யிரத்து முன்னூற்று

,,(15) வநேன். இவை எங்நெழுத்து.

(இக்கல்வெட்டு இதுகாறும் தென் இந்தி யக் கல்வெட்டுத் தொகுதியில் வெளியிடப் பெறாதது. இக்கல்வெட்டைப் படித்து எழுதி னேன்.)

தருமபுர ஆதினத்தில் 25-ஆம் பட்டத் தில் எழுந்தருளியிருக்கும் அருங்கலை விநோத ரும் பெருங்கொடை வள்ளலுமாகிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் கயிலைக்குருமணி அவர்களின் அருள் ஆதரவுகொண்டு இம்மாசாத்தனாரின் திருமேனியைப் புகைப்படம் பிடித்து ஞான சம்பந்தம் ஏழாவது ஆண்டு மலரில் வெளியிட் டிருக்கின்றேன். இம்மாசாத்தனார் இடதுகை யில் ஒருகுட்டைச் சுவடியைப் பிடித்துக் கொண்டிருக்கிறார். இவர் தம் மார்பிலும் கை களிலும் கல்லினால் செய்யப்பட்ட உருத்தி ராக்கமாலைகளை (த்திருமேனியினின்றுபிரிக்க முடியாத நிலையில்) அணிந்து கொண்டிருக் கின்றார். ஏனைய சாத்தனார்களுக்கெல்லாம் வலதுகையில் செண்டு இருக்கும். இவரது வலக்கையில் ஒன்றுமில்லை. இவரது இடக் கையில் இருப்பது ஆதி உலா அல்லது ஞான உலா. இவ்வூர் முதியோர் இவரை அரங்கேற் றின ஐயனார் என்று அழைக்கின்றனர். இவர் எழுந்தருளியிருக்கும் கோயிலைப் போல், பெரிய கோயில் சாத்தனார்க்கு வேறு எங்கும் இல்லை. ஊரின் பெயரும் திருப்பிடவூர் என்றே கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள் ளது. மேற்குறித்த புறநானூற்றுச் செய்யு ளில் 'அருங்கடிப்பிடவூர்' என்றிருப்பதற்கு இருக்கும் அருங்கடல்பிடவூர் என்ற பாட பேதத்தைக் கொண்டு தஞ்சாவூர் ஜில்லா வில் தில்லையாடிக்கு (தில்லையாளிநல்லூர்க்கு) அண்மையில் உள்ள புடையூர் என்ற ஊரே திருப்பிடவூர் ஆகும் எனபார் கூற்று சிறிதும் பொருத்தமற்றதாகும். ஏடு எழுதுவோரால் நேர்ந்த பிழை என்று ஒதுக்க வேண்டுவதைத் தவிர அதைச்சிறப்பாகக் கொள்வதற்கு இல்லை. எவ்வித ஆதாரமும் காட்டாது புடை யூரே திருப்பிடவூர் என்பார் கூற்று பொய்ப் பொருள் திணித்தலின்பாற்படும். [சிதம்பரத் திற்கு மேற்கே சுமார் 10கல் தூரத்திலும் புடையூர் என்ற ஊர் இருக்கிறது.]

திருத்தணி ஆடிக்கிருத்திகை

திருத்தணி—ஸ்ரீ சுப்பிரமணியேசுவர சுவாமி கோயிலில் ஆடிக் கிருத்திகை மகோற்சவம் 11-8-60-ல் நடைபெறும். 12-8-60-ல் அசுவனி திருக்குளம் வலம் வருதல், 13-8-60-ல் பரணி உற்சவம், 14-8-60 முதல் 16-8-60வரை மூன்று நாட்கள் தெப்பத் திருவிழா மின்சார விளக்குகளுடன், விசேஷ அலங்காரம், மேளவாத்திய வைபவங்களோடு நடைபெறும். கடந்த ஆண்டுகளில் பக்தர்கள் சமர்ப்பிக்கும் புஷ்பக் காவடிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:—1955-ம் ஆண்டில் 30,300 புஷ்பக்காவடி களும், 1956-ல் 34,243-ம், 1957-ல் 36,812-ம், 1958-ல் 38004-ம், 1959-ல் 42,760-ம் ஆகும். இவ்வாண்டு ஆடிக்கிருத்திகை உற்சவ நாட்களில் பக்தர்கள் வந்து தரிசித்து முருகப்பெருமானின் திருவருளைப் பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

திருப்பதியம் விண்ணப்பித்தல்

[திரு. கே. எம். வேங்கடராமையா, M.A., B.O.L., திருப்பனந்தாள்]

"சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் சுந்தரரும்" மன்பதைகள் உய்யும்வண்ணம் ஓதியருளிய திருநெறிய தமிழே திருப்பதியம் என்று கல்லெழுத்துக்களில் வழங்கப் பெறும். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தரும் நாவினுக்கரையரும் ஓதிய நற்றமிழ் மாலைகளை அவர் சொல்லியாங்குச் சொல்லி ஏத்தின் சிவபெருமான் உவந்தருளுவார் என்று சுந்தரர் பகர்ந்துள்ளார். நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறிய சிவபெருமான் இன்னிசைத் தீந்தமிழ்ப் பனுவல்களைப் பண்ணென்றப் பாடின் பலவாற்ருனும் பரிந்தருளுகிருர். இருந்து தமிழோடிசை கேட்கும் இச்சையால் நித்தல் அப்பருக்கும் சம்பந்தருக்கும் சிவபெருமான் திருவீழிமிழலையில் காசுநல்கியது இத்தமிழ்நாடு அறிந்ததே. இவற்றை நன்குணர்ந்து வழிவழிச் சிவம்பெருக்கிய சோழ மன்னர்கள் வானளாவிய சிவனுறை கோயில்களைக் கற்றளிகளாக அமைத்தும், இறைவன் திருமுன் பண்சுமந்த பாடலை விண்ணப்பிக்கச் செய்தும் விண்சுமந்த வியன்கீர்த்தி எய்தினர். இங்ஙனம் திருநெறிய தமிழைத் திருக்கோயில்களில் ஓதச் சோழமன்னர்களும் பிறரும் அளித்த நிபந்தங்கள் பல. அவற்றுள் கண்ட சில சிறப்புடைச் செய்திகளைச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பழைய நிபந்தம்

திருப்பதியம் விண்ணப்பம் செய்யக் கொடுக்கப் பெற்ற நிபந்தங்களுள் மிகப் பழமையானதாகக் கருதப்படுவது, மூன்ரும் நந்தி வர்மன் என்ற பல்லவ அரசன் காலத்ததாகும். இவன் 825 முதல் 850 வரை ஆட்சி செய்தவன். "சிவனை முழுதும் மறவாதசிந்தையன்" என்று நந்திக்கலம்பகம் இவனைப் போற்றுகின்றது; "சிவனது திருஅடையாளம் (திருநீறு) நெற்றியிற்கொண்ட நந்திவர்மன்" என்று வேலூர்ப் பாளையப் பட்டயங்கள் பகர்கின்றன. இத்தகைய பல்லவ அரசன், தன் 17-வது ஆட்சியாண்டில், திருவல்லம் கோயிலுக்கு மூன்றூர்களை விடேல் விடுகுவிக்கிராமதித்தச் சதுர்வேதிமங்கலம் என்று பெயரிட்டுத் தேவதானமாகவிட்டான், (S. I. I. Vol III பக்கம் 93). அவ்வூரினின்று ஆண்டுதோறும் 2000 காடி நெல்லும் 20 கழஞ்சு பொன்னும் வருமானம் வரும்; இவ்வருமானத்தில் திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும் திருப்பதியம் பாடுவார் உள்ளிட்ட பலபணிசெய்வார்க்கும் நானூற்றுக் காடி நெல் ஒதுக்கப்பெற்றது. (3 காடி—ஒரு கலம்). எனவே சுந்தரர் காலத்தையொட்டியே திருக்கோயில்களில் தேவாரம் ஓதுவதற்கு வழிவகை செய்தார்கள் என்று இதனுன் அறியலாம்.

அந்தணர் ஓதுதல்

திருத்தவத்துறை என்ற பாடல் பெற்ற தலம் இந்நாளில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் லால்குடி என்ற பெயரில் திகழ்கிறது. திருத்தவத்துறை மகாதேவர் திருமுன் நாடோறும் மூன்று சந்திகளிலும் இரண்டு பிராமணர் திருப்பதியம் விண்ணப்பம் செய்யச் சிவகோசரி பிடாரன் தேசவிடங்கன் என்பார் நிலதானம் செய்தார் என்று முதற் பராந்தக சோழனுடைய 37-ஆம் ஆட்சியாண்டு (கி. பி. 943)க்குரிய கல்லெழுத்து நவில்கின்றது (99 of 1929). இந்நிவந்தம் போதாமை கண்டு 16 ஆண்டுகளுக்குப் பிறகு சுந்தரசோழனுடைய மூன்ருவது ஆட்சியாண்டில் (கி. பி. 959-ல்) மேற்குறித்த சிவகோசரிபிடாரன் சிறிதுநிலம் அளித்தான் என்றும், நிலத்தினின்று பெறும் எள்ளுக்குரிய எண்ணெயில் குடிவாரப் பகுதிகோயிலுக்குச் சேர வேண்டும்; நிலத்துக்குரிய செவ்வாரப் பகுதி திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் பெற வேண்டும் என்று ஏற்பாடு செய்தான் என்றும் இன்னொரு கல்லெழுத்துக் கூறுகின்றது. (104 of 1929) இவற்ருல் அந்தணர் கோயிலில் திருப்பதியம் விண்

ணப்பம் செய்து வந்தனர் என்று தெள்ளிது. இத்தருமத்தைச் செய்தவர் பெயருள் கண்ட "சிவகோசரி என்பது திருக்காளத்தியில் குடுமித் தேவரைப் பூசித்து வந்த சிவகோசரியாரை நினைப்பிக்கும். இதனுன் இச்சிவகோசரியாரும் முப்போதும் திருமேனி தீண்டும் சிவப்பிராமணர் ஆதல் கூடும்; பிடாரன் என்றமையின் இவரும் தேவாரம் ஓதுதலில் வல்லவர் ஆதல் கூடும் என்று ஊகித்தறியலாம்.

சிவபூசகர் விண்ணப்பித்தல்

தஞ்சை இராசராசேச்சரத்தில் முதலாம் இராசராசனது 29-ம் ஆட்சியாண்டில் (அதாவது கி. பி. 1014-ல்) "உடையார் ஸ்ரீராஜராஜீச்வரமுடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய உடையார் ஸ்ரீராஜராஜதேவர் குடுத்தபிடாரர்கள் நாற்பத்தெண்மர்" என்று ஒரு கல்லெழுத்துப் புகல்கின்றது. (S. I. I. Vol II Part III No. 65) இந்நாற்பத்தெண்மரும் சிவதீக்ஷை பெற்றுச் சிவபூசை செய்பவராதல் வேண்டும் என்பதை அவர்களது பெயரைக்கொண்டே அறியலாம். அப்பெயர்களுட் சில பின்வருமாறு :—

பாலன் திருவாஞ்சியத்தடிகளான ராஜராஜப்பிச்சனுன சதாசிவன்; திருவெணுவல் செம்பொற்சோதியான தக்ஷிணமேருவிடங்கப்பிச்சனுன ஞானசிவன்; பட்டாலகன் சீருடைக்கழல் ஆன பூர்வசிவன்; ஐஞ்ஞூற்றுவன் வெண்காடன் ஆன சத்யசிவன்; அரையன் அணுக்கனுன திருமறைக்காடன் ஆன தருமசிவன்; கூத்தன் மழலைச் சிலம்பான பூர்வசிவன்; ஐஞ்ஞூற்றுவன் திருவாய்மூரான அகோரசிவன்; ஐயாறன் பெண்ணொர்பாகனுன ஹ்ருதய சிவன்.

இவர்கள் யாவரும் சிவதீக்ஷை பெற்றவர் என்பது சதாசிவன் ஞானசிவன் பூர்வசிவன் என்ற தீக்ஷா நாமங்களால் அறியப்பெறும். அன்றியும் அன்னோர் திருவாஞ்சியம், திருவெணுவல் (திருவானைக்கா), திருவெண்காடு, திருமறைக்காடு, திருவாய்மூர், திருவையாறு முதலிய சிவதலங்களினின்றும் போந்தவர் என்பதையும் இப்பெயர்களால் அறியலாம். இப்பெயர்களுள் 'செம்பொற் சோதி' என்பது அப்பர் வாக்கு; 'சீருடைக்கழல்' என்பது திருவாசகம்; 'மழலைச்சிலம்பு' என்பது திருவிசைப்பா.

இனித் தேவாரம் ஓதுங்கால் உடுக்கையும் கொட்டி மத்தளமும் வாசித்தல் அக்கால வழக்கம் போலும். இவற்றை வாசித்தவர்களும் சிவதீக்ஷை பெற்றவராகத் திகழ்ந்தனர் என்பதற்கு அவர்கள் பெயர்களே சான்று பகரும். உடுக்கை வாசித்தவன். 'தத்தயக்கிரம வித்தன்மகன் சூரியதேவக் கிரமவித்தனுன ஆலாலவிடங்க உடுக்கை விச்சாதிரனுன சோமசிவன்' என்பவன் ஆவன். கொட்டிமத்தளம் வாசித்தவன், 'குணப்புகழ் மருதனுன சிகாசிவன்' என்ற பெயருடையவன், உடுக்கை வாசித்தவன் ஒரு கிரமவித்தன் எனப் பெறுகிறுன்; வேதம் ஓதும்முறைகளில் கிரமம் என்பது ஒன்று; ஆகவே இவன் வேதம் ஓதும் அந்தணன், தீக்ஷை பெற்றவன் என்று அறியப் பெறும்.

குருடர்கள் பாடியமை

திருவாமாத்தூர், நடு நாட்டுத்தலங்களுள் ஒன்று. 1133 முதல் 1150 வரை ஆண்ட இரண்டாம் குலோத்துங்க சோழனது இரண்டாவது ஆட்சியாண்டில், திருவாமாத்தூர் ஆளுடைய அழகிய தேவர் கோயிலில், மூன்று சந்தியும், திருப்பதியத்தைப் பாடி வந்தவர் பதினுறு குருடர்கள் என்றும், அவர்களுக்குக் கண்காட்டுவர் இருவர் என்றும், இவர்களுக்குப் பன்னிருவேலி நிலம் திருப்பதியக்காணியாகக் கொடுக்கப்பெற்றிருந்தது என்றும் ஒரு சாசனத்தில் (749 of S.I.I. Vol VIII: A. R. No. 433 of 1903) கண்டிருக்கிறது.

அடிகள்மார் பாடுதல்

பண்டைக் காலத்தில் கோயில்களில் இசையும் நடனமும் வல்ல பெண்மகளிர் பலர் இருந்தனர். அவர்கள் இசையும் நடனமும் வளர்த்தார்கள். அன்னோர் அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையார் என்ற பெயரால் குறிக்கப் பெற்றனர். இத்தகைய அடிகள்மார் மூவர், அல்லூர்ப் பசுபதீசுவரர் கோயிலில், திருப்பதியம் பாடிவந்தனர் என்று கோப்பரகேசரிபன்மரது 4-ம் ஆண்டுக் கல்லெழுத்து (687 of S. I. I. Vol VIII; No 373A of 1903) குறிப்பிடுகின்றது.

திருவிளாங்குடியில் இடிந்து கிடக்கும் சிவன் கோயிலிற் கண்ட முதலாம் இராசராச சோழனது 28-ம் ஆட்சி யாண்டுச் சாஸனம் (புதுக்கோட்டைச் சாஸனங்கள், எண் 90) சில அரிய செய்திகளைக் கூறுகிறது. நூற்று வேலி என்று பேர் கூவப்படும் குடிக்காடு, குளம் உடைகுளமாய்க் காடெழுந்து கிடந்தது; காட்டை வெட்டிக் குளம் கல்வி முன் பெயர் தவிர்த்துச் சேனபதி உத்தம சோழ நல்லூருடையான் பாளுர் அம்பலத்தாடியான முடிகொண்ட சோழ விழுப்பரையர் தாயார் பாசூர் நங்கையார் பேரால் பாசூர் நங்கைநல்லூர் என்று புதுப்பெயர் கொடுத்தனர், அவ்வூர்ப் பெருங்குறி மகாசபையார். இந்நிலத்தின் வருவாய், சித்திரைத் திருநாள் திருவாதிரைத் திருநாள் ஏழு நாட்களுக்கு வேண்டும் அழிவுகளுக்குப் பயன்படுத்துவதோடு, இத்தேவர்க்கு முன் திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் அடிகள்மார்க்கு நிவந்தம் இல்லாமையால் திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் நான்கு பேருக்கு ஊதியம் அளிக்கவும் இக்கல்லெழுத்தில் இடம் தரப்பெற்றது.

தேவரடியார் நடித்துப் பாடுதல்

1063 முதல் 1070 வரை ஆட்சி செய்த வீரராஜேந்திர சோழனது திருவொற்றியூர்க் கல்வெட்டொன்று, மணலி என்னும் ஊரிலிருந்த 60 வேலி நிலத்தை வீரராசேந்திர விளாகம் என்று பெயரிட்டு அரசனது ஆயுஷ்யார்த்தமாகவும், அரசியாரது மாங்கல்யத்தைக் காத்தற் பொருட்டும், அவருடைய குழந்தைகளின் நலன் பொருட்டும் திருவொற்றியூர்த் திருக்கோயிலில் சில தருமங்கள் செய்ய வழிவகை செய்ததை உணர்த்துகிறது. திருப்பள்ளியெழுச்சிக்காகவும், திருவாதிரைத் திருநாளில் திருவெம்பாவை விண்ணப்பிப்பதற்காகவும், நடித்தும் பாடியும் தொண்டு செய்துவந்த 22 தளியிலார்க்கும், ஒரு ஆடலாசானுக்கும், அகமார்க்கத்தில் திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் 16 தேவரடியார்களுக்கும் ஊதியம் அளித்தற் பொருட்டு இந்நில வருமானம் ஒதுக்கப் பெற்றது. எனவே தேவரடியார்கள் திருப்பதியம் விண்ணப்பம் செய்தனர்—அதுவும் அகமார்க்கத்தில் நிகழ்த்தப் பெற்றது—அதாவது தேவாரங்களைப் பாடும்பொழுது சுவை பொருந்தச் சத்துவம் தோன்ற அபிநயத்தோடு பாடினர் என்று இக்கல்லெழுத்தினின்று அறியலாம்.

திருப்பாட்டு

விசயநகர அரசர்களுள் ஒருவர் சாளுவ இம்மடி நரசிம்மன் என்பார். அக்காலத்தில் துளுவ சேனபதி நரசாநாயக்கர் என்றொருவர் இருந்தார். இந் நரசாநாயக்கரது பணியாள் ஈசுவர நாயகர் என்ற பெயருடையவர். இவர் (வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள) தேவிகாபுரத்தில் திருமலாவுடைய நாயனர் திருமுன் திருப்பாட்டு ஓதுவதற்கு நிபந்தம் அளித்ததாகத் தேவிகாபுரத்துக் கல்வெட்டொன்றில் (355 of 1912) காணலாம். இக்கல்வெட்டு, சகரயாண்டு 1422-க்குரியது. 'பாவெனப் படுவதுன் பாட்டு, பூவெனப் படுவது பொறி வாழ்பூவே' என்று துறைமங்கலம் சிவப்பிரகாசர், திருவாசகத்தையே பாட்டு என்று கூறியிருப்பினும், சுந்தரர் தேவாரத்தைத் திருப்பாட்டு என்று கூறும் மரபும் உண்டு. எனினும் இங்குத் 'திருப்பாட்டு' என்பது பொதுவாகத் தேவாரத் திருமுறைகளையே குறித்ததாதல் வேண்டும்.

பெரிய திருப்பாட்டு

விசயநகரப் பேரரசர்களுள் சிறந்தவர், கிருஷ்ணதேவராயர். இவர் சகம் 1438-ல் காளத்திக்கு எழுந்தருளிக் காளத்திநாதனைச் சேவித்து நூற்றுக்கான் மண்டபமும் பெரிய கோபுரமும் கட்டுவித்துத் திருவண்ணுமலைக்கு வந்து பல சிவத்தொண்டுகளைச் செய்தார் என்று திருவண்ணுமலைக் கல்லெழுத்தொன்று (165 of S. I. I. Vol VIII; No. 574 of 1902) நுவல்கிறது. அக்கல்லெழுத்தில் "பெரிய திருப்பாட்டு ஓதுவார் பேர் 2" என்றுள்ளது. சிவன்கோயிலில் ஓதப்பெறும் பெரிய திருப்பாட்டு, தேவாரத் திருமுறைகளைத் தவிர்த்து வேறு யாதாயிருத்தல் தகும்?

திருஞானம் ஓதுதல்

திருநெல்வேலி மாவட்டம் திருவாலீசுவரம் என்ற தலத்திலுள்ள சிவாலயத் திருமதில்களில் ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டியனது 3-ம் ஆட்சியாண்டில் அமைந்த சாஸனம் ஒன்றில் (359 of 1916), "திருஞானம் விண்ணப்பம் செய்வதற்குச் சிவப்பிராமணர் எண்மர் கோளகி மடத்து ஞானமிர்தாசாரிய சந்தானத்தைச் சார்ந்த புகலிப்பெருமாள் என்பாருடன் உடன்படிக்கையின் பேரில் நிலம் விற்றனர்'

என்று வரையப் பெற்றுள்ளது. இதனால் சிவப்பிராமணர் திருஞானம் விண்ணப்பித்தனர் என்று அறியலாம்.

திருநெல்வேலித் திருக்கோயிலில் திருஞானம் ஓத விக்கிரம சோழ தேவர்கண்ட தவசிகளில் பதினெரு பேர்க்கும் இவர்கள் வர்க்கத்தில் திருஞானம் ஓதும் பேர்க்கும் பதினெரு மணிகள் யாண்டு 15-வது முதல் மடம் எடுத்திருக்கக் காணியாகத் தரப்பெற்றன என்று ஒரு கல்வெட்டு (420 of S. I. I. Vol. V; 131 of 1894) விவரிக்கின்றது. இனி, போஜனம் உள்ளிட்டு வேண்டுவன வற்றுக்கு நிலம் ஒரு வேலியும் எட்டுமா கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டிய தேவரது ஆட்சியாண்டு பதினைந்தாவது முதல் திருஞானப்புறஇறையிலியாகத் தரப்பெற்றது என்று இன்னெரு சிலைமேல் எழுத்து (421 of S. I. I. Vol V; 132 of 18?4) செப்புகின்றது.

திருச் செந்தூர்த்தாலுகா ஆற்றூர்க்கல்வெட்டில் (463 of 1929—30) திருஞானம் ஓதுவதற்குத்திரிபுவனச் சக்கரவர்த்தி கோனிரின்மை கொண்டான் காலத்தில் நிபந்தம் கொடுக்கப் பெற்றது என்று படிக்கிறோம். இக்கல் வெட்டுக்குரிய அரசன் 1239-ல் பட்டம் பெற்ற மாறவர்மன் சுந்தரபாண்டியன் II என்றும், விக்கிரமசோழதேவர் என்பார் கொங்குச்சோழர் என்றும், இச்சுந்தரபாண்டியர்க்கு மச்சுனனர் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். (Page 77 of A. R. E for 1929—30).

திருஞானம் என்பது தேவாரம் போலச் சமயகுரவருள் ஒருவரால் அருளப்பெற்ற பக்திநூலாக இருத்தல் கூடும் என்று ஆராய்ச்சியாளர் கருதுவர். (Page 77 of A. R. E. for 1929—30) எனினும் சம்பந்தராதிய மூவர்பாடிய தேவாரத்தையே திருஞானம் என்பது குறிக்கும் எனக்கொள்ளுதல்தகும். சீகாழிப்பதியில்இறைவியாரளித்தபாலடிசில் உண்டு.

சிவனடியே சிந்திக்கும்
திருப் பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும்
பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலை ஞானம்
உணர்வரிய மெஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாமுணர்ந்தார் அந்நிலையில்

என்று சேக்கிழார் பகர்வர். இதனால் சம்பந்தர் தேவாரத்தையே திருஞானம் என்று குறித்தனரோ என்று ஐயம் எழும். தலைஞாயர் என்ற ஊரிலுள்ள மூன்றும் இராசேந்திரனுடைய 3-ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (149 of 1927), இவ்வரசனது 23-ம் ஆட்சியாண்டுக்குரிய கோவிலூர் திருவுசாத்தானக்கல்வெட்டும் (216 of 1908) சம்பந்தரைத் திருஞானம் பெற்ற பிள்ளையார் என்று குறிப்பிடுகின்றமையின் இவ்வையம் பின்னும் மிகுகின்றது. ஆனல் சம்பந்தர் முதலிய மூவர் அருளிய தேவாரத்தை காழித் தாண்டவராயர் என்பார்தாம் எழுதிய திருவாசகவியாக்யானத்தில்

"திருமெய்ஞ்ஞானத் திருநெறித் தேவாரம்" என்றும், "திருமெய்ஞ்ஞானத் திருநெறித் தமிழாகியதேவாரம்" என்றும்கூறியுள்ளமையால், திருஞானம் என்பது மூவர் தேவாரத்தையே குறித்ததாகக் கொள்ளலாம்.

கூகூர்க் கல்வெட்டு

தஞ்சாவூர் ஜில்லாவில் கூகூரில் காணப்படும் கல்வெட்டுடொன்று (S.I. I. Vol III No. 57), அதிராசேந்திரன் தன் 3-ம் ஆட்சியாண்டில் கொடிய நோயால் துன்புற்றனன் என்றும் இவ்வரசன் உடல் நலனுறுதல் வேண்டும் என்று அவ்வூர்க்கோயில் இறைவன் திருமுன் தேவாரப்பதிகங்களை நாடோறும் இருமுறை ஓதினர் என்றும் குறிப்பிடுகின்றது. இதனுன் நோய்வாய்ப்பட்டார்உடல் நலன் எய்துதற் பொருட்டுத் திருப்பதியம் விண்ணப்பிக்கச் செய்யும் பழக்கம் பண்டு நிலவியிருந்தது என்று அறியலாம்.

திருக்கைகொட்டி

இச்சொற்றெடரைத் திருக்கைகோட்டி என்றும் படிக்கலாம். திருக்கரவாசலில் ஒரு கல்வெட்டு மூன்றும் இராசராசனின் 28-ம் ஆட்சியாண்டுக்குரியது. (454 of 1908), அவ்வூரில் வாழ்ந்த சிவனடியார்களில் ஒருவரகிய நமச்சிவாயத் திருமேனி என்பார் திருக்கைகோட்டியில் திருமுறை ஓதுவார்க்கு கணவ

ளிக்க நிபந்தம் கொடுக்கப்பெற்றது — என்று அதில் உள்ளது. (பக்கம் 100, A. R. E. for 1909) இவ்வரசனது 22-ம் ஆண்டுக்குரிய திருக் கோவிலூர் (உசாத்தானக்) கல்வெட்டு அவ்வூர்க்கோயிலில் திருக்கைகொட்டி இல்லத்து இருந்த ஓதுவார்க்கு சொக்கனையனை இராசகம்பீரச் சொழியவரையனுல் இறையிலிநிலம் அளித்த செய்தியைக் கூறுகிறது. திருக்கைகொட்டி இல்லம் என்பது திருமுறை ஓதும் மண்டபம் ஆகும்;

அவ்வில்லத்தைக் கண்காணிப்பவர், திருக்கை கொட்டி இல்லத்துறையார்; இதற்கு அளிக்கப்படும் நிபந்தம் திருக்கை கொட்டி புறம் எனப்படும். இத்திருக்கை கொட்டி இல்லத்துறையார்ஓதுவார்களை நிச்சயித்து ஓதுவாராகப் பண்ணுவதே, இத்துறையாரது கடமை என்று இக்கல்லெழுத்தில் கூறியுள்ளது; அங்ஙனமாயின் தேவாரத்தை இசையோடு கற்பிப்பது இவ்வில்லத்திருந்த ஓதுவார்கடமையாகலாம். திருக்கை கொட்டி என்பது கையைக்கொட்டிப்பாடியருளிய சம்பந்தரைக் குறிக்கும் என்பாருமுளர்; அங்ஙனமாயின் சம்பந்தர் திருப்பெயரால் அமைந்த தேவாரம் ஓதும் மண்டபம் என்பது பொருளாகக்கொள்ள வேண்டும். இச்சொற்றொடரைத் திருக்கைக் கோட்டி என்று படித்தால், கையைக் கொட்டிப் பாடும் ஓதுவார்கள் பலர் கூடிய கோஷ்டி என்று பொருள் படும். இந்நாளிலும் தேவார கோஷ்டி என்று கூறுதலும் இதனை வலியுறுத்தும்.

முடிப்புரை

இதுகாறும் கூறியவாற்ருன் அந்தணரும், சிவபூசகரும், பெண்டிரும் குருடரும் திருப்பதிகங்களைக் கற்றுப்பாடும் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்றும், பலர் தீக்ஷைபெற்றவராகவும் இருந்தனர் என்றும், பெண்டிர் சத்துவம் தோன்ற நடித்துப்பாடினர் என்றும் திருப்பாட்டு, பெரிய திருப்பாட்டு, திருஞானம் என்ற பெயர்களான் குறிக்கப்பெற்றவை மூவர்பாடிய தேவாரங்களே யாதல் தகும் என்றும், பல ஓதுவார்களே கூடிய கூட்டம் திருக்கைகோட்டி எனப்பெறும் என்றும், திருக்கைகோட்டிகள் ஓதுவார்களைப் பயிற்றுவித்தன எனவும் அறியப் பெறும்.

பழனியாண்டவர் கீழ்த்திசைக் கலைக்கல்லூரித் திறப்பு விழா

பழனி ஸ்ரீ தெண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானத்தினுல் தொடங்கப்பெற்றிருக்கும் கல்லூரியை அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் 23-7-60 அன்று திறந்து வைத்தார்கள். ஆலய ஆட்சிக் குழுத்தலைவர் திரு. P. S. K. இலட்சுமிபதி ராஜு M. L. A. அவர்கள் யாவரையும் வரவேற்றுப் பேசினுர்கள். அமைச்சரவர்கள் கல்லூரி ஏற்படுத்தியதன் நோக்கத்தைப்பற்றியும் அதனுலுண்டாகும் பயனையும் எடுத்துச் சொன்னுர்கள். திரு. வி. வி. சி. ஆர். முருகேச முதலியாரவர்கள் நன்றி கூறினுர்கள். அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் I. A. S. அவர்களும், மதுரைத் துணையாணையர், உதவி ஆணையர் முதலியவர்களும் கலந்துகொண்டார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் கல்லூரியில் சேர்ந்துவிட்டனர்.

செய்திகள்

பழநி—ஸ்ரீதெண்டாயுதபாணி சுவாமி கோயில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 29-8-60 திங்கட்கிழமையன்று நடைபெறும்.

திருச்செந்தூர்—ஆவணித் திருவிழா 13-8-60 முதல் 24-8-60 வரை நடைபெறும். சமயச் சொற்பொழிவுகளும், தேவார திருப்புகழ்ப் பாராயணமும், இன்னிசையரங்குகளும் நிகழும்.

விநாயகர் திருவிளையாடல்

பிடியதனுரு வுமைகொள மிகுகரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே
— திருஞானசம்பந்தர்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம் பிறைபோலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே
—திருமூலர்

நமது பரத கண்டத்தில் விநாயகர் வழிபாடு தொன்று தொட்டு இருந்து வருகிறது, நேபாளம், சீனம், திபெத்து, சையாம், ஜப்பான், சாவகம் (ஜாவா), பலி, போர்னியோ பர்மா. முதலிய நாடுகளிலும் கணேச வழிபாடு இருந்ததற்கு சான்றுகள் உள்ளன. சைவரேயன்றி வைணவரும், சமணரும், பௌத்தரும் இவரை வணங்குகின்றனர். ஆண்டுக்கொருமுறை இவருக்கு நாடுமுழுமையும் விழாக்கொண்டாடப் படுகிறது. இவ்வாண்டு ஆவணித்திங்கள் 11-ஆம் நாள் (26—8—1960) வெள்ளிக்கிழமையன்று **விநாயக சதுர்த்தி** வருகிறது. கோயில்களிலெல்லாம் விநாயகருக்குப் பூசை வழிபாடு சிறப்பாக நடைபெறும். மக்கள் விரதம் இருந்து வீட்டில் கணபதிக்குப் பூசனைபுரிவர்,

விநாயகர், பார்வதி பரமசிவனுக்கு மான சீகபுத்திரர். ஓங்காரவுருவினர்; யானைமுகம் தேவஉடல், பூதஅடிகள் உடையவர்; ஒற்றைக்கொம்பர்;இருசெவியனர்; முக்கண்ணர்; துதிக்கையுடன் ஐந்து கரத்தர்; அங்குச பாசத்தர்; ஆணுமல்லர், பெண்ணுமல்லர், அலியுமல்லர்; பிறைசூடியவர்; மும்மதத்தர்; பெருச்சாளிவாகனர். விநாயகர் என்றால் தனக்குமேல் நாயகர் அல்லது தலைவர் இல்லாதவர் என்று பொருள். இவரை வணங்கியே எல்லாக்காரியங்களும் தொடங்குவது நம் நாட்டின்மரபு. அவர் நிகழ்த்திய அற்புதத் திருவிளையாடல்களைத் தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

மாங்கனி பெற்றது: நாரதர், சிவபெருமான் திருமுன்னர் ஒரு கனியைவைத்தார். இருமருங்கிலுமிருந்த கணபதி, முருகன் இவர்களை நோக்கி "உங்களில் எவர் முன்னர் உலகத்தைச் சுற்றிவருகிறீர்களோ அவருக்கு இப்பழத்தைக்கொடுப்பேன்" என்று சிவபெருமான் கூறினார். முருகன் மயில்மீதேறி உலகைச்சுற்றிவரச் சென்றார். விநாயகரோ தம் தாய் தந்தையரைச் சுற்றி வந்து நின்றார். பழத்தைப்பெற்றார். அகில உலகங்களெல்லம் ஆண்டவன் உள் அடக்கம் என்ற உண்மையை இக்கதை விளக்குகிறது. நம்பியாண்டார் நம்பி, கபிலதேவர், அதிரா அடிகள் முதலியோர் இவ்வரலாற்றைத் தங்கள் பாடல்களில் கூறியிருக்கின்றனர்.

முருகன் வள்ளியை மணக்க உதவியது: முருகப்பெருமான் தினைப்புனத்தில் காவலிருந்த வள்ளியை மணக்கத் திருவுளங்கொண்டார். கிழவேடத்தில் சென்றார். வள்ளி இசையவில்லை. தனது மூத்த சகோதரரை நினைத்தார். அவர் யானையாக வர, வள்ளி பயந்து குமரனை மணக்க இசைந்தாள். அருணகிரிநாதர், "அத்துயரது கெட சுப்பிரமணிபடும் அப்புனம் அதனிடை இபமாகி அக்குறமகளுடன் அச்சிறு முருகனை அக்கணம் மணமருள் பெருமாளே" என்று கூறியிருக்கிறார்.

அச்சொடித்தது: திரிபுரத்தை எரிக்கச் சிவபெருமான் தேர்மேலேறிப் புறப்பட்டார். எவரும் விநாயகரை நினைக்கவில்லை. அதுகண்டு சினங்கொண்ட ஐங்கரன் தேரின் அச்சை ஒடித்தார். "முப்புரம் எரி செய்த அச்சிவன் உறைரதம் அச்சது பொடி செய்த அதிதீரா" என்று திருப்புகழ்ப்பாடல் குறிக்கிறது. இந்த இடமே அச்சிறுப்பாக்கம் என்பர்.

பாரதம் எழுதியது: விநாயகப் பெருமான் தன்னுடைய ஒரு கொம்பை யொடித்துப்பாரதத்தை மேருமலையில் எழுதினார் என்பர். இதையும் அருணகிரியாரே "முத்தமிழ் அடைவினை முற்படுகிரிதனில் முற்பட எழு

திய முதல்வோனே'' என்று போற்றுகிருர். பாரதம் பாடிய வில்லிபுத்தூராழ்வாரும்,

நீடாழி உலகத்து மறை நாலொ
டைந்தென்று நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன்
மாபாரதம் சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக அங்கூ
ரெழுத்தாணி தன்
கோடாக எழுதும் பிரானைப்
பணிந்தன்பு கூர்வாமரோ

என்ற துதிப்பாடலுடன் நூலைத் தொடங்குகிருர்.

காவிரியை உற்பத்தி செய்தது: இந்திரன் நந்தவனம் வைத்தான், மழையின்மையால்பூச் செடிகள் வாடின விநாயகப் பெருமானை வழிப்பட்டான். அவர் சைய மலைக்குச்சென்று அங்கு அகத்தியமுனிவர் ஆச்சிரமத்தை யடைந்தார். அவர் வைத்திருந்த கமண்டல நீரை ஒருகாக உருவத்தில் சென்று கவிழ்த்தார். அந்த நீர் ஒரு ஆருகப் பெருகியது. காகம் விரித்ததால் காவிரி என்ற பெயர் ஏற்பட்டது. ''அகத்தியன் தனது கரகம்கவிழ்த்த காவிரிப்பாவை'' என்று இச்செய்தியைச் மணிமேகலை குறிக்கிறது. சிவப்பிரகாச சுவாமிகள்,

சுரகுலாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருகவார் கடல் பெய்த வயிற்றினேன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரணநாளும் தலைக்கணி யாக்குவாம்

என்று பிரபுலிங்கலீலைக்காப்புச் செய்யுளில் சொல்லியிருக்கிருர்கள்.

திருக்கோகரணத்தில் இலிங்கத்தை நிலைபெறுத்தியது: இராவணன் தன்தாயார் பூசைசெய்வதற்காகக் கைலாசத்திலிருந்து ஒரு இலிங்கத்தைக்கொண்டு வந்தான்.'அவன் மாலைக்கடன்களைச் செய்யும் பொருட்டுத்தான் கையிலிருந்து இலிங்கத்தை அங்கு நின்ற சிறுவனிடம் கொடுத்தான். அச்சிறுவன் இராவணன் வருவதற்குள் இலிங்கத்தைக் கீழே வைத்து விட்டான், இராவணன் கோபங்கொண்டுசிறுவனைகுட்டினுன். இலிங்கத்தைத் பலம்கொண்டு எடுக்க முயற்சித்தான்; முடியவில்லை. அதனுல் அவருக்கு மகாபலலிங்கம் என்றும், அவ்விடத்திற்குப் பூகைலாசம் என்றும் வழங்குகின்றது. இது திருகோக்கரணம் என்னும் தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலம். மேற்குக் கடற்கரையில் வட கன்னடம் மாவட்டத்திலுள்ளது. சிறுவனுக வந்தவரே விநாயகப் பெருமான். அவருடைய உருவம் இராவணன் குட்டிய அடையாளத்துடன் திருக்கோகரணத்தில் இருக்கிறது இராவணன் மாலைக்கடன் செய்த இடம் ஒரு தீர்த்தமாகவும் அங்கு திகழ்கிறது.

திருவரங்கத்தில் பெருமாளைக் கிடங்க செய்தது: இராமர் சீதையை மீட்டுக்கொண்(அயோத்தி சேர்ந்தார். விபீடணரும் உடல் சென்ருர். இராமருக்கு முடிசூட்டு விழ நடந்தது. விபீடணர் இலங்கைக்குத் திரு பும்போது இராமரிடம் திருமாலின் திருவு(வம் ஒன்றைப் பெற்றுப் புறப்பட்டார். திரு வரங்கத்தை அடைந்தார். காலைக்கடன்களை முடிக்க எண்ணினுர். அங்கு நின்ற இளை னிடம் அந்த திருவுருவத்தைக் கீழே வை காமலிருக்கும்படி சொல்லிக் கடன் முடிக்க போனுர். சிறுவன் பெருமாள் உருவத்தை கீழே வைத்துவிட்டான். வந்த விபீடண உருவத்தை எடுக்க முயன்ருர்; இயலவில் சிறுவனைத் துரத்தினுர். அவன் ஓடி சென்று மலையுச்சியை அடைந்தான். உட விநாயகராகி வீற்றிருந்தார். அவரே இ போது உச்சிப்பிள்ளையார் என்று எல்லோ லும் போற்றப்படுகிருர்.

ஔவையைக் கயிலை சேர்த்தது: மான் பெருமாள் நாயனுர் குதிரையி சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளையானை பேரிலும் திருக்கயிலாயத்திற்குப் புறப் டுச்சென்றது. தமிழ் மூதாட்டியா ஔவைப்பிராட்டி அவர்கள் இருவரும் லைக்குப் புறப்பட்டுச் சென்றதை அ தானும் அங்குப்போய்ச் சேரவேண்டுமென் விருப்பத்திஞல் விநாயகப் பெருமானு விரைவாகப் பூசையைச் செய்யத் தொட கினுர். ஆனைமுகன் ''அம்மையே! நமக்கு செய்யும் வழிபாட்டை அமைதியாக வழக் போல் செய். சேரமான், சுந்தரர்க்கு மு உன்னைக் கயிலைச் சேர்ப்போம்'' என் சொன்னுர். மூதாட்டியாரும் முறைப்படி பூசையை நடத்தினுர். உடனே மூத்த பிள்ளையார் துதிக்கையால் ஔவையாரைத் தூக்கிக் கயிலையில் சேர்த்தார். முன் புறப்பட்ட இருவருக்கும் முன்னே போயடைந்தார்.

[தொடரும்]